

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜுன் 06, 2013 | புரட்சி 12 | முழக்கம் 21 | விலை: ரூ.3.00


## அமெரிக்காவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முரசறைவு

# தமிழீழ சுதந்திர சாசனம்

*நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் மே 18 அன்று தமிழீழ சுதந்திர சாசனத்தை முரசறைந்தது.*

நாடு கடந்த தமிழீழ அரசு, கடந்த மே 15ஆம் தேதியிலிருந்து 18ஆம் தேதி வரை அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் கூடி சுதந்திர தமிழ் ஈழத்துக்கான பிரகடனத்தை மே 18இல் வெளியிட்டது. தட்டியூஸ் ஸ்டீவென்ஸ் சென்ட்டர் என்ற அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்வேறு நாடுகளிலிருந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் கலந்து கொண்டனர். தமிழீழ சுதந்திர சாசனத்தில் இடம் பெற்றுள்ள சில முக்கிய கருத்துகள்:

“இன அழிப்புப் போர்க் குற்றங்களிலிருந்து நிரந்தரமாக விடுவித்துக் கொள்ள அனைத்துலக சட்டங்களுக்கேற்ப தமிழீழ தனியரசை அமைத்துக் கொள்ளும் உரிமை எங்களுக்கு உண்டு. தனியரசு அமைவது மட்டுமே எமக்கான ஒரே ஒரு வழி முறை. எமது சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யவும், இன அழிப்புக்குக் காரணமானவர்களை நீதிமன்றம் முன் நிறுத்தவும் ‘மக்களாணை வாக்கெடுப்புக்கு’ ஆவன செய்ய வேண்டும். அமையப் போகும் தமிழீழ அரசு ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் அது தொடர்பான அனைத்துலகப் பிரகடனங்களையும் பேணி காத்து, மனித குல வரலாற்றை முன்னோக்கி நகர்த்தும். தமிழீழ அரசு அதிகாரங்களை ஒரே இடத்தில் மய்யப்படுத்தாமலும், மதச்சார்பற்ற அரசாகவும் இருக்கும். மரண தண்டனை ஒழிக்கப்படும். தமிழீழ குடிமக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமம். மதம், ஜாதி, பால், மொழி அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்படும். முஸ்லீம் மக்களின் தனித்துவமான அடையாளங்கள் மதிக்கப்பட்டு, தமிழீழத்தில் அவர்களின் வகுபாகத்தினை (வாழ்விட உரிமை) அவர்களே உருவாக்கிக் கொள்ளும் உரிமை வழங்கப்படும். மலையக மக்கள் தமிழ் ஈழத்தில் குடியேற விரும்பினால் உடனடியாக குடியுரிமை வழங்கப்படும். தாயக விடுதலைக்குப் போராடிய அனைத்து வீரர்களும் தேசிய வீரர்களாக மதிக்கப்படுவார்கள். அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படும். மே 18 தேசிய துக்க நாளாகவும், நவம்பர் 27 மாவீரர் நினைவு நாளாகவும் பின்பற்றப்படும்” என்று சுதந்திர சாசனம் கூறுகிறது.

இந்தியப் பெருங்கடலில் அமைதி பாதுகாப்புக்கு உறுதுணையாகவும், இந்திய மக்களுடன் தோழமை பேணும் வெளியுறவுக் கொள்கையையும் தமிழ் ஈழ மக்களின் வளம், தேவைகளைக் கருத்தில் கொண்டு உலகநாடுகளுடன் கூட்டுறவை வளர்க்கக் கூடிய பொருளாதாரக் கொள்கையையும் சாசனம் முன் வைக்கிறது. கல்வியை அடிப்படை உரிமையாகக் கருதி, கட்டாய இலவசக் கல்வியை சாசனம் வலியுறுத்துவதோடு, தமிழ் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் தமிழ் ஈழத்தின் அதிகாரபூர்வ மொழிகளாக இருக்கும். சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் என்று உறுதி சாசனம் கூறுகிறது. தமிழீழத்துடன் தொடர்புடைய தமிழர் பிறப்பு வழி சந்ததியினர், உலகின் எந்தப் பகுதியில் வசித்தாலும், தமிழீழக் குடியுரிமைக்கு தகுதி உடையவர். தமிழ் ஈழக் குடிமக்கள் இரு நாட்டுக் குடி உரிமைக்கு அங்கீகாரமும், தகுதியும் உடையவர் என்றும் பிரகடனம் கூறுகிறது. பிரகடனத்தை நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமரும் மாநாட்டுத் தலைவருமான வி.உருத்திரகுமார் வெளியிட்டார்.

### மாநாட்டு நிகழ்ச்சிகள்

மே 17 ஆம் தேதி காலை முதல் பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்கம் நடைபெற்றது. பங்கேற்பாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். சர்வதேச சட்ட நிபுணர் ஃபிரான்சிஸ் பாய்ல், அன. பரராஜசிங்கம், ஈழவேந்தன், அருட் தந்தை ஜோசப் சந்திரகாந்தன், முனைவர் இராமு. மணிவண்ணன், நக்கீரன், வி.தங்கவேலு மற்றும் பல்துறைப் பன்னாட்டுப் பேராசிரியர்கள் கருத்தரங்கில் ஆய்வுரைகளை முன் வைத்தனர்.

தமிழ்நாட்டிலிருந்து நாடுகடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் சரசுவதி மற்றும் பேராசிரியர் இராமு. மணிவண்ணன், எழுத்தாளர் பா.ஜெயப்பிரகாசம் ஆகியோர் பங்கேற்றனர். பேராசிரியர் சரசுவதி, மாநாட்டைத் தொடங்கி வைக்கவும், பிரகடன முரசறைவுக்கு முன் அது குறித்த பீடிகையை முன்வைக்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டார்.

நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மய்யம் சார்பில் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட 30 நிமிட ஆவணப்படம் திரையிடப்பட்டது. முள்ளி வாய்க்கால் இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட பெண்கள் சந்தித்த இராணுவ ஒடுக்குமுறைகளை அவர்களே வாய்மொழியாகக் கூறும் இந்த ஆவணப்படம், மாநாட்டில் பெரும் வரவேற்பைப் பெற்றது. வழக்கறிஞர் பாண்டி மாதேவி இயக்கத்தில் பேராசிரியர் சரசுவதி மேற்பார்வையில் இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டது. ✦

### கோயில் விரிவாக்கத்துக்காக பள்ளியை இடிப்பதா?

## சாய்பாபா கோயில் முற்றுகை: தோழர்கள் கைது

சென்னை மயிலாப்பூரிலுள்ள சாய்பாபா கோயில் நிர்வாகம், கோயில் விரிவாக்கத்திற்காக அங்கே நடந்து கொண்டிருக்கும் 1000 மாணவர்கள் படிக்கும் மெட்ரிக்குலேஷன் பள்ளியை இழுத்து மூட திட்டமிட்டுள்ளது. இந்த மெட்ரிகுலேஷன் பள்ளி, அப் பகுதி ஏழை மக்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் கடந்த 21 ஆண்டுகளாக கல்வி வழங்கி வருகிறது. மயிலாப்பூர் பகுதியில் குறைந்த கட்டணத்தில் கல்வி வழங்கும் பள்ளி இது ஒன்றுதான். 1000 மாணவர்கள் படிக்கும் இந்தப் பள்ளியை கோயில் விரிவாக்கத்துக்காக காலி செய்யக் கோரி, சாய் சமாஜ் அறக்கட்டளை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளபோதே கடந்த 21ஆம் தேதி பள்ளியில் ஒரு பகுதியை இடித்துத் தள்ளிவிட்டது. இது குறித்து காவல்துறையிடம் பள்ளி நிர்வாகிகள் புகார் செய்தும், காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ‘மக்கள் சேவையே தங்களின் பணி’ என்று கூறும் சாய்பாபா அறக்கட்டளை, ஏழை எளிய மக்களுக்கு குறைந்த செலவில் கல்வி கிடைப்பதைத் தடுப்பதைக் கண்டு அப்பகுதி மக்கள் வருத்தமும் கோபமும் கொண்ட நிலையில், மயிலைப் பகுதி கழகத் தோழர்கள் நியாயத்தைத் தட்டிக் கேட்க களமிறங்கினர். ‘சாய் வித்யாலயா பள்ளிப் பாதுகாப்புக் குழு’ ஒன்றை பல்வேறு அமைப்புகள், பொது மக்களை ஒருங்கிணைத்து உருவாக்கினர்.

திராவிடர் விடுதலைக் கழக சென்னை மாவட்ட அமைப்பாளர் சுகுமார், இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகளை மேற்கொண்டார். முதல்கட்டமாக கடந்த மே 30ஆம் தேதி சாய்பாபா கோயிலை முற்றுகையிடும் போராட்டம் அறிவிக்கப்பட்டது. முற்றுகைப் போராட்டத்துக்குச் சென்ற தோழர்கள் மற்றும் பொது மக்களை காவல்துறை கைது செய்தது. மயிலைப் பகுதி கழகத் தோழர்களோடு வேலுமணி (தமிழர் எழுச்சி இயக்கம்), அ. கார்த்திக் (விடுதலை சிறுத்தைகள்), செந்தில் (சேவ் தமிழ்), இரா. லெனின், சுரேஷ் (உயிர்த் துளிகள் அமைப்பு), அருண்சோரி (தமிழ்நாடு மக்கள் கட்சி), சசிகலா (மகளிர் சுய உதவிக் குழு) ஆகிய அமைப்புகளும், பள்ளி மாணவ மாணவியர், பெற்றோர்களும் பங்கேற்றனர். பொது மக்கள், மாணவர்களை கைதாக வேண்டாம் என்று அனுப்பிவிட்டு தோழர்கள் மட்டும் கைதானார்கள். மாலை விடுவிக்கப்பட்டனர். சாய்பாபா கோயில் நிர்வாகத்துக்கு ஆதரவாக காவல்துறை, அரசியல் புள்ளிகள் இருந்தும் அதை எதிர்த்து துணிவாக மக்களுக்காக இந்தப் போராட்டம் நடந்துள்ளது.

### ஒரு வினா: ஒரு விடை

**வினா:** கடவுள் மத நம்பிக்கைகள் குறைந்து விட்டதாகக் கூறுவது உண்மையல்ல, உண்மையில் அதிகரித்திருக்கிறது என்று இராம. கோபாலன் கூறுகிறாரே?

**விடை :** இதை அவர் சொல்லக் கூடாது ஒன்று “கடவுள்களே” சொல்ல வேண்டும். அல்லது இராமகோபாலன் தகவல் உரிமை சட்டத்தின்படி “கடவுள்”களிடம் கேட்டு புள்ளி விவரங்களை வெளியிட வேண்டும்.

# ‘சர்வசக்தி’ கடவுளைக் காப்பாற்றும் “மனித சக்தி”

இன்று உலகிலுள்ள கடவுள்களும் மதங்களும் பகுத்தறிவின் படி சிந்தித்தால் ஏற்க முடியாதவைகளாகவும் இன்றைய நாகரிகங்களுக்கு ஏற்றவைகளாக இல்லாதவைகளாகவும் இருந்துவரக் காரணம் என்ன என்பதைப் பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டியவனேயாவான்.

இவை பற்றி விளக்க வேண்டுமானால் இவைகளில் ஈடுபட்ட ஒவ்வொரு மனிதனும் முதலாவதாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது; இந்தக் கடவுள்களும் மதங்களும் எப்போது உண்டாக்கப்பட்டவை என்பதைச் சிந்திக்க வேண்டியது முக்கியமாகும்.

அப்படிப் பார்த்தால் எல்லாக் கடவுள்களும் அநேகமாக இன்றைக்கு 1500-2000-2500-3000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே உற்பத்தி செய்யப்பட்டவையாகும். மதங்களும் அப்படியே என்பதல்லாமல் அவை பற்றிய கற்பனைக் கதைகளும் புராணங்களும் இதிகாசங்களும் மற்றும் அவற்றின் பேரால் குறிப்பிடப்பட்டவைகளான. சாஸ்திரங்கள் வேதங்கள் தர்மங்கள் நிபந்தனைகள் யாவுமே அவைபோலவே 1500 முதல் 3000 ஆண்டுக் காலங்களில் உண்டாக்கப்பட்டவைகளேயாகும். இவை யாராலும் மறுக்க முடியாதனவென்றே கூறலாம்.

அக்காலங்களில் மக்களுடைய பொது அறிவு எந்த நிலையில் இருந்திருக்க முடியும்? இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு உலக மக்கள் தொகை ஆதாரங்களின்படி 20 கோடி மக்கள்தாம் இருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றும் இன்றைக்குச் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கி.பி.1460 ஆம் ஆண்டில் உலக ஜனத்தொகை 47 கோடி என்றும், கி.பி.1800 இல் உலக ஜனத்தொகை 70 கோடி என்றும், கி.பி.1914 இல் உலக ஜனத் தொகை 165 கோடி என்றும், 1954 இல் 320 கோடி என்றும், 1964 இல் 350 கோடி என்றும் 1970 இல் 365 கோடி என்றும் ஆதாரங்கள் கூறுகின்றன.

இதன்படி பார்த்தால் கி.பி.1 இல் மக்களின் சராசரி ஆயுள் 5 ஆண்டுகள் தாம் இருந்திருக்க முடியும் என்றுதான் தோன்றுகிறது.

**இன்றைய உலக மக்களின் சராசரி ஆயுள்:** மேல் நாடுகளில் மனிதன் சராசரி 70 ஆண்டு வாழ்கிறான். நமது நாட்டில் 52 ஆண்டு வாழ்கிறான். இதை அனுசரித்துத் தானே மனிதனுடைய அறிவும் இருந்திருக்க முடியும்! மனிதன் சராசரி 5 வருஷமே வாழ்ந்த காலம் என்றால் அக்கால மக்களுக்கு அறிவு எவ்வளவு இருந்திருக்க முடியும் என்று சிந்தித்துப் பார்த்தால் அக்காலத்தில் உண்டாக்கப்பட்ட கடவுள், மதம், மதத் தலைவர்கள், அவர்களது வேதம், தர்மம், நீதி முதலியவைகள் இந்தக் காலத்துக்கு இன்றைய அறிவுக்கு ஏற்றனவாக எப்படிக் கருதப்பட முடியும்!

மனிதன் அக்காலத்தில் கடவுள் என்று சொன்னானே ஒழிய அறிவுக்கும் சாத்தியத்திற்கும் ஏற்றபடியாகத் தன்மைகளையும் குணங்களையும் பொருத்த முடியவில்லையே! விளக்க முடியாத காரணத்தினால்தானே கடவுள் கண்ணுக்குத் தெரியாது, கைக்குச் சிக்காது, மனத்தால் புரிந்து கொள்ள முடியாது என்று கூறிக் கடவுள் என்றால் நம்பித்தான் ஆகவேண்டும் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முயன்று இருக்கிறான்!

இந்த இலக்ஷணத்தில் இப்படி நம்ப வேண்டிய கடவுள் சர்வ சக்தி உள்ளவர், அவரால்தாம் உலகம் இயங்குகிறது என்று சொல்லிவிட்டான். இதை எல்லா மனிதனும் - படித்தவன், படிக்காதவன், ‘மேதாவி’, ‘புலவன்’, ‘விஞ்ஞானி’, ஞானி, அஞ்ஞானி, சங்கராச்சாரி, பண்டார சன்னிதி முதலிய எல்லோருமே ஒப்புக்கொள்கிறார்கள். ஏற்றுக் கொள்கிறார்கள் என்றுதானே காண்கிறோம்!

ஆனால், இதில் ஒரு அதிசயம் என்னவென்றால் இப்படிப் பட்டவர்களில் ஒருவன்கூடக் கடவுளின் சர்வ சக்தியை ஏற்றுக் கொள்ளாமல் வாழ்க்கையில் உள்ள எல்லாக் காரியங்களுக்கும் தன் சக்தியை, தன் அறிவை, தன் பயிற்சியைத்தானே பயன்படுத்துகிறான்.

எந்த மனிதன் எந்தக் காரியத்தைக் கடவுளுக்கு விட்டு விட்டுக் கடவுள் சக்திக்கு ஆளாகி வாழ்கிறான்? சர்வசக்தி உள்ள கடவுளை மனித சக்தியினால் தானே இருக்கிறதாகச் சொல்ல முயலு கிறான்!

இந்த முயற்சி ஒன்றே கடவுள் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துவதுடன் மனிதனுடைய முட்டாள்தனத்தையும் அல்லவா ருஜூப்பிக்கிறது! இன்றைய தினம் ஒரு பண்டத்தைப் பற்றிச் சொல்ல வருபவன் “இது உனக்குப் புரியாது நம்பு” என்று எதையாவது சொல்வானா? அப்படிச் சொன்னால் அவனை நீங்கள் என்னமாய்க் கருதுவீர்கள்? பெரிய மோசடிக்காரன் என்றல்லவா கூறுவீர்கள்!

ஆகவே, மக்கள் போதிய அறிவில்லாத காலத்து உண்டாக்கப்பட்ட, கற்பிக்கப்பட்ட கடவுள் இன்று பகுத்தறிவுக் காலத்தில் பொருந்தாது! பொருந்தாது!! பொருந்தவே பொருந்தாது!!!

**- பெரியார், ‘உண்மை’ 14.6.1972**

# உலகம் முழுதும் கடவுள்—மத நம்பிக்கை சரிகிறது

இந்தியாவிலும் உலகிலும் கடவுள்-மத நம்பிக்கை குறைந்து வருவதாக, அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வு தெரிவிக்கிறது. உலகில் 5 கண்டங்களி லுள்ள 57 நாடுகளில் 51,927 பேரிடம் இது பற்றிய கருத்துகள் கேட்கப்பட்டன. அதன் படி, இந்தியாவில் மத நம்பிக்கையுள்ளோர் எண்ணிக்கை 7 ஆண்டுகளில் 6 சதவீதம் குறைந்துள்ளது. 2005இல் 87 சதவீதம் பேர் தங்களுக்கு கடவுள் மத நம்பிக்கை இருப்பதாக கூறியிருந்தனர். 2013இல் 81 சதவீதம் பேர் மட்டுமே இவ்வாறு கூறி யுள்ளனர். அதே நேரத்தில் நாத்திகர்கள் என்று தங்களை அறிவித்துக் கொண்ட வர்களின் எண்ணிக்கை ஒரு சதவீதம் குறைந்துள்ளது. 2012 இல் 4 சதவீதம் பேர் தங்களை நாத்திகர்கள் என்று பதிவு செய்தார்கள். 2013 இல் இது 3 சதவீத மாகியுள்ளது என்று ஆய்வு கூறுகிறது. இது இந்தியாவில்!

உலகம் முழுதும் மதத்தை நம்புவோர் எண்ணிக்கை 9 சதவீதம் குறைந்துள்ளது. நாத்திகர்கள் எண்ணிக்கை 3 சதவீதம் அதிகரித்துள்ளது.

சில நாடுகளில் மட்டுமே மத நம்பிக்கையாளர்கள் அதிகரித்துள்ளனர். அதில் பாகிஸ்தானும் ஒன்று. அந்த நாட்டில் மத நம்பிக்கையாளர்கள் 6 சதவீதம் அதிகரித்துள்ளனர். தற்போது உலக கத்தோலிக்கர்களின் தலைவராக உள்ள போப் சொந்த நாடான அர்ஜென்டினாவிலேயே மதத்தை நம்புவோர் 8 சதவீதம் குறைந்துவிட்டனர்.

தென்னாப்பிரிக்காவில் 19 சதவீதமும், அமெரிக்காவில் 13 சதவீதமும், சுவிட்சர் லாந்து மற்றும் பிரான்சு நாடுகளில் 23 சதவீதமும் - மத நம்பிக்கையாளர்கள் குறைந்துள்ளனர்.

உலகில் பொருளாதார வளர்ச்சியில் அமெரிக்காவுக்கே சவால் விட்டு வளர்ந்து கொண்டிருக்கும் சீனா, நாத்திகர்கள் எண்ணிக்கை அதிகம் கொண்ட நாடாக உள்ளது. மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் தங்களுக்கு கடவுள் மத நம்பிக்கை இல்லை என்று கூறியுள்ளனர். கடவுள் நம்பிக்கையற்றவர்களின் உலக சராசரி 13 சதவீதம்; சீனாவில் மட்டும் இது 50 சதவீதமாக உள்ளது.

# கடவுளை மறுத்த டார்வின் பெருந்தன்மை

கடவுள் ஒவ்வோர் உயிரினத்தையும் தனித்தனியாக உருவாக்கியதாகத் தான் உலகின் எல்லா விஞ்ஞானிகளும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கை தவறானது என்று முதலில் சொன்னவர் டார்வின்தான். அவரது 20 வருட ஆராய்ச்சி மூலம் இதைக் கண்டறிந்தார்.

ஓர் இனத்தை சேர்ந்த உயிரினம் முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படும்போது அது அந்த புதிய சூழ்நிலையில் நன்கு வாழ்ந்து வருவதற்கு தேவையான புதிய உடல் மாற்றங்களை படிப்படியாக உருவாக்கிக் கொண்டுவிடும் என்பதை இவர் ஆதாரங்களுடன் எடுத்துச் சொல்லி வந்தார். வாழ்க்கை என்பது ஒரு தீவிரமான போராட்டம்தான். அதில் திறமையும், சக்தியும் மிகுந்த உயிரினங்கள் தான் தங்களுடைய இனப்பெருக்கத்தைச் செய்து கொண்டு இந்த உலகில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றன என்று கூறினார்.

காடுகளிலும் மலைகளிலும் சமவெளிகளிலும் கடற்கரை பிரதேசங்களிலும் பல ஆண்டு பயணம் செய்து உலகில் வாழ்ந்து வரும் உயிரினங்களைப் பற்றி, தான் சேகரித்த விவரங்களைக் கொண்டு உயிரினங்களின் ஆரம்ப நிலை என்ற நூலை எழுதினார். 20 வருட உழைப்பு அது. அப்போது அவருக்கு பெரிய சங்கடம் ஏற்பட்டது. ஆல்பிரட் ரஸ்ஸெல் வாலஸ் என்ற இளம் விஞ்ஞானி உயிரினங்களுக்கிடையே ஏற்படும் மாறுதல்களை விவரித்து ஆராய்ச்சி கட்டுரை ஒன்றை எழுதி டார்வினுக்கு அனுப்பி வைத்தார். மேலும் அவர், தான் கட்டுரையை விஞ்ஞான கழகத்தில் படிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும் படியும் கேட்டுக் கொண்டார்.

அதுநாள் வரையில் தான் செய்து வந்த ஆராய்ச்சியை வேறு யாரும் செய்து வரவில்லை என்று டார்வின் நம்பி இருந்தார். இப்போது ஓர் இளம் விஞ்ஞானி தனக்கு போட்டியாக வந்து விட்டிருக்கிறார். அந்த கண்டுபிடிப்பை உலகிற்கு தெரிவிக்க தன்னுடைய உதவியை நாடி இருக்கிறார். மேற்கொண்டு என்ன செய்வதென்று தடுமாறினார். அவரது நண்பர்களோ நீங்கள் 20 வருடமாக உலகம் முழுவதும் சுற்றி கடினமான ஆராய்ச்சி மூலம் திரட்டிய புதிய கண்டுபிடிப்பை கண்டிருக்கிறீர்கள். இதைப் பற்றி ஒரு பெரிய நூலையே எழுதியுள்ளீர்கள். உங்கள் ஒருவருக்குத் தான் புகழ், பெருமை அனைத்தும் கிடைக்க வேண்டும். உடனே உங்கள் கண்டுபிடிப்பை விஞ்ஞான கழகத்தில் அறிவிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்றனர்.

டார்வின் இதை மறுத்தார். நான் கண்டுபிடித்ததையே இளம் விஞ்ஞானியும் கண்டுபிடித்துள்ளார். அவரது கட்டுரையையும் தனக்கு அனுப்பி உதவும்படி கேட்டுக் கொண்டார். இளம் விஞ்ஞானியை ஏமாற்றி விட்டதாக ஒரு அவப்பெயர் எனக்கு ஏற்பட்டுவிடக்கூடாது. அப்படி யாரும் பேசாமல் இருக்க நான் என் புத்தகத்தை எரித்துவிடவும் தயாராக இருக்கிறேன் என்றார்.

இதைக் கேள்விப்பட்ட இளம் விஞ்ஞானியோ இந்த கண்டுபிடிப்புக்கான பெருமை முழுவதும் டார்வினுக்கு தான் போய்ச் சேர வேண்டும். நான் அவருடைய ஒரு சீடன் தான் என்று அறிவித்தார். டார்வின் இதை ஏற்க மறுத்துவிட்டார். 1859 இல் விஞ்ஞானக் கழகத்தில் இருவரும் தங்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை படித்தனர். உலகமே டார்வினுடைய பெருந்தன்மையைப் பாராட்டியது.

# 5 ரூபாய் நாணயத்தில் ‘மகாவிஷ்ணு தேவி’

இந்திய அரசு 5 ரூபாய் நாணயம் ஒன்றை ‘மகாவிஷ்ணு தேவி’ படத்துடன் 2012இல் வெளியிட்டுள்ளது.

மதச்சார்பற்ற நாட்டில் இப்படி ஒரு நாணயத்தை ‘நாணயமின்றி’ வெளியிட் டிருக்கிறார்கள். இனி ராமன், கிருஷ்ணன் படங்களையெல்லாம்கூட நாணயத்தில் வெளியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்




கில்லை. காங்கிரஸ் ஆட்சி, பா.ஜ.க. ஆட்சிக்கு மாற்று என்று அவ்வப் போது கூறி வருகிறது. இதுதான் ‘மாற்று’ என்பதற்கான அடையாளமோ?

# ஊழல் : பார்ப்பனர், உயர்ஜாதியினரே அதிகம்

ஊழல் புரிவோரில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரே அதிகம் என்று அஜீஸ் நந்தி என்ற எழுத்தாளர் கூற, அது ஊடகங்களில் விவாதிக்கப்படுகிறது. 1991 ஆம் ஆண்டு முதல் இதுவரை நடந்த முக்கிய ஊழல்களில் தொடர்பு உடையவர்கள் ஜாதி வாரிப் பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது. இதில் பார்ப்பனர், உயர்ஜாதியினரே அதிகம்.

1) 1991 - முத்திரைத் தாள் ஊழல் - 1. அப்துல் கரீம், டெல்லி (முஸ்லிம்), 2. சரத் பவார் (மராத்தி), 3. ஜகன் புஷ்பால் (பிற்படுத்தப்பட்டவர்)

2) 91-92 - ஹவாலா ஊழல் - 1. ஹர்சத் மேத்தா (பனியா), 2. பி.வி. நரசிம்மராவ் (பார்ப்பனர்)

3) 91-92 - பாமாயில் இறக்குமதி ஊழல் - 1. கே. கருணாகரன் (மாரர்), 2. பி.ஜே. தாமஸ் (கிறுத்துவர்)

4) 1994 - சர்க்கரை இறக்குமதி ஊழல் - 1. கல்ப நாத்ராய் (பூமிஹார்)

5) 1995 - யூரியா ஊழல் - 1. பி.வி. நரசிம்மராவ் (பார்ப்பனர்), 2. பி.வி. நரசிம்மராவ் மகன் பிரபாகர் (பார்ப்பனர்), 3. பிரகாஷ் சந்திர யாதவ் (பிற்படுத்தப்பட்டவர்)

6) 1996 - ஜெ.எம்.எம். ஊழல் - 1. பி.வி. நரசிம்மராவ் (பார்ப்பனர்), 2. சிபு சோரன் (பழங்குடியினர்)

7) 1996 - கால்நடை தீவன ஊழல் - 1. லாலுபிரசாத் யாதவ் (பிற்படுத்தப்பட்டவர்), 2. ஜெகன்னாத் மிஸ்ரா (பார்ப்பனர்)

8) 1996 - காகித இறக்குமதி ஊழல் - 1. பி.வி. நரசிம்ம ராவ்(பார்ப்பனர்), 2.லக்குபாய் பதக் (பார்ப்பனர்)

9) 1996 - ஜெயின் ஹவாலா ஊழல் - 1. எல்.கே. அத்வானி (சிந்தி), 2. வி.சி. சுக்லா (பார்ப்பனர்), 3. பி.சிவசங்கர் (பிற்படுத்தப்பட்டவர்)

10) கிரிக்கெட் மேட்ச் ஊழல் 1997, 2001 - 1. மனோஷ் பரிக்கர் (பார்ப்பனர்), 2. அசாருதீன் (முஸ்லிம்), 3. அஜாய் சடேசா (ராஜ்புத்), 4. நயன் மோங்கியா (கத்ரி).

11) 1997 - இந்தியன் வங்கி ஊழல் - 1. எம். கோபால கிருஷ்ணன் (பிற்படுத்தப்பட்டவர்), 2. வரத ராஜன் (செட்டியார்), 3. சந்திரசாமி (பனியா)

12) 2001 - ஆசிரியர் நியமன ஊழல் - 1. சவுட்டாலா குடும்பத்தினர் (ஜாட்)

13) 2001 - டெகல்ஹா ஊழல் - 1. பங்காரு லஷ்மண் (தாழ்த்தப்பட்டவர்), 2. ஜெயா சேட்லி (நாயர்), 3. சுரேஷ் நந்தா (கத்ரி)

14) 2001 - ஹவாலா மோசடி - கேத்தன் மேத்தா (பனியா)

15) 2002 - தாஜ்மகால் வணிக வளாகம் - மாயாவதி (தாழ்த்தப்பட்டவர்)

16) 2002 - ஹோம் டிரேடு ஊழல் - சஞ்சய் அகர்வல் (பனியா)

17) 2001 - பரக் மிஸ்ஸைவ் - அட்மிரல் சுசில்குமார் (கிறித்துவர்)

18) 2002 - லவாஹா ஊழல் - 1. சுப்ரிய சூலே (மராத்தி), 2. சதானந்த் சூலே (பார்ப்பனர்)

19) ஆப்பரேஷன் வெஸ்ட் எண்ட் பால் அவுட் ஊழல் - 1. ஜார்ஜ் பெர்ணான்ட்ஸ் (கிறித்துவர்), 2. ஜஸ்டிஸ் புக்கான் குடும்பம் (சத்திரியா)

20) 2003 - ஆதர்ஷா வீடு ஒதுக்கீடு - 1. அசோக் சௌஹான் (குன்பி), 2. கர்னல் ஆர்.கே. பக்சி (பார்ப்பனர்)

21) 2003 - சத்தீஸ்ஹர் சுரங்க ஊழல் - திலிப் சிங் சூடே (பழங்குடியினர்)

22) 2005 - MPLAD திட்டத்தில் ஊழல் - 1. அலேமு சர்ச்சில் (கிறித்துவர்), 2. பாஹ்ஹன் குலேஸ்தே (பழங்குடியினர்), 3. ராம்ஸ்வரூப் கோலி (தாழ்த் தப்பட்டவர்), 4. சி.பி.சிங் (பழங்குடியினர்), 5. பி.என்.யாதவ் (பிற்படுத்தப்பட்டவர்) 6. சக்தி மஹராஷ் (பிற்படுத்தப்பட்டவர்) 7. இசாம் சிங் (தாழ்த்தப்பட்டவர்).

23) 2005 - நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்பதற்கு லஞ்சம் - 1. எம்.கே. பாட்டில் (ராஜ்புத்), 2. ஒய்.ஜி. மஹாசன் (பனியா), 3. சுரேஷ் சண்டேல் (ராஜ்புத்), 4. பிரதீப் காந்தி (பனியா), 5. சி.பி.சிங் (பழங்குடியினர்), 6. டாக்டர் சத்ரபால் சிங் லோதா (பிற்படுத்தப்பட்டவர்), 7. நரேந்தர் குமார் குஷ்வாஹா (பிற்படுத்தப்பட்டவர்), 8. ராஜாராம் பால் (தாழ்த்தப்பட்டவர்), 9. லால்சந்தர் கோல் (தாழ்த்தப்பட்டவர்), 10. மனோஷ்குமார் (தாழ்த்தப்பட்டவர்), 11. ராம் சேவக் சிங் (பிற்படுத்தப்பட்டவர்)

24) 2005 - ஐ.பி.ஓ. டேமட் ஊழல் - ரூபால்பென் பாஞ்சால் (விஷ்வகர்மா)

25) 2005 - எண்ணெய்க்கு உணவு ஊழல் - கே. நட்வர் சிங் மற்றும் மகன் (ஜாட் மன்னர் பரம்பரை)

26) 2006 - ஸ்கார்ப்பனே ஒப்பந்த ஊழல் - 1. ரவிசங்கர் (கத்ரி), 2. அபிசேக் வர்மா (காயஸ்தா), 3. சித்தார்த் டைட்லர் (தத்ரி)

27) 2007 - உத்தரப்பிரதேச விவசாய நில ஊழல் - அமிதாப் பச்சன் (காயஸ்தா)

28) 2008 - நம்பிக்கை ஓட்டெடுப்பு ஊழல் - 1. அமர் சிங் (தாக்கூர்), 2. சுதீந்தர குல்கர்னி (பார்ப்பனர்), 3. அசோக் அர்கல் (தாழ்த்தப்பட்டவர்), 4. மஹாவீர் சிங்க் பஹோரா (பழங்குடியினர்), 5. பஹ்ஹன் சிங்க் குவாஸ்தே (பழங்குடியினர்).

29) 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் - 1. ஆ. ராசா (தாழ்த்தப்பட்டவர்), 2. கனிமொழி (மிகவும் பிற்படுத்தப்பட்டவர்)

30) 2009 - ஐ.பி.எல். ஊழல் - 1. லலித்மோடி (பனியா), 2. வசுந்தரராசே (பிற்படுத்தப்பட்டவர்)

31) 2009 - ஜார்க்கண்ட சுரங்க ஊழல் - மதுகோடா (பழங்குடியினர்)

32) 2009 - சத்யம் கம்ப்யூட்டர் ஊழல் - ராமலிங்க ராசு (சத்திரியா)

33) 2009 - கேரளா மின் ஊழல் - பிணராயி விஜயன் (பிற்படுத்தப்பட்டவர்)

34) 2010 - பூனா ஹவாலா ஊழல் - ஹசல் அலி கான் (முஸ்லிம்)

35) 2010 - காமன்வெல்த் போட்டி - 1. சுரேஷ் கல்மாடி (பார்ப்பனர்), 2. லலித் பானோட் (பார்ப்பனர்)

36) 2010 - தேசிய சுகாதார இயக்க ஊழல் - மாயாவதி (தாழ்த்தப்பட்டவர்)

37) 2009-11 நொய்டா வீட்டுமனை ஊழல் - மாயாவதி (தாழ்த்தப்பட்டவர்)

38) 2011 - ஏர்செல் மேக்சிஸ் ஊழல் - 1. தயாநிதி மாறன் (மிகவும் பிற்படுத்தப்பட்டவர்) 2.கலாநிதி மாறன் (மிகவும் பிற்படுத்தப்பட்டவர்)

39) 2011 - ஒபுலாபுரம் சுரங்க ஊழல் - ஜனார்த்தன ரெட்டி (பிற்படுத்தப்பட்டவர்)

40) 2011 - சொத்துக் குவிப்பு ஊழல் - ஜெகன்மோகன் ரெட்டி (கிறித்துவர்)

41) 2012 - யானை சிலை அமைப்பு ஊழல் - மாயாவதி (தாழ்த்தப்பட்டவர்)

42) 2012 - புர்ட்டி வழக்கு - நித்தின் கட்காரி (பார்ப்பனர்)

43) 2012 - உத்தரப்பிரதேச என்.ஜி.ஓ. நிதி முறைகேடு - 1. சல்மான் குர்ஷித் (முஸ்லிம்), 2. லூயிஸ் பெர்ணான்ட்ஸ் (கிறித்துவர்)

44) 2012 - நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் - 1. ஸ்ரீ பிரகாஷ் ஜெய்ஸ்லால் (பனியா), 2. விஷய் தார்தா (பனியா), 3. சுபோத்காந்த் சகாய் (காயஸ்தா)

45) ஹிமாச்சல பிரதேச சொத்து குவிப்பு வழக்கு - வீரபத்ர சிங்க் (ராஜ்புத்)

46) கர்நாடக நில ஊழல் - 1. பி.எஸ்.எடியூரப்பா (லிங்காயத்), 2. பி.எஸ். எடியூரப்பா மகன்-மருமகன் (லிங்காயத்) 3. ஜிண்டால் (பனியா)

இங்கே குறிப்பிட்டுள்ள 46 ஊழல் வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் சுமார் 100 பேர். அதில் பிற்படுத்தப்பட்டோர் - 16, தாழ்த்தப்பட்டோர் - 12, பழங்குடிப் பிரிவினர் - 8, முஸ்லிம் - 4, கிறித்துவர்கள் - 6. பார்ப்பனர் மற்றும் உயர் ஜாதியினர் - 56 பேர். ஆகவே 56 சதவிகித ஊழலில் சிக்கியுள்ள பார்ப்பன உயர்ஜாதிக்காரர்களை உற்று நோக்காமல், இதர பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகம் ஊழல் புரிபவர்கள் என்ற அஜீஸ் நந்தியின் கூற்று மிகுந்த வேதனைக்குரியது. தவறான ஒன்றாகும். ஊழலுக்கு ஜாதியுமில்லை, மதமு மில்லை. அது தனி மனிதர்களின் செயல் பாடுகளைப் பொருத்துத்தான் உள்ளது.

**நன்றி : 'தேசிய முரசு' ஏட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கார்வேந்தன் எழுதிய கட்டுரை**


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

ஆண்டுக்கட்டணம்

ரூ.200

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535


## கொளத்தூர் மணி பங்கேற்பு: சென்னையில் நடந்த ஆங்கில வழி கல்விக்கு எதிரான கருத்தரங்கம்

கடந்த தி.மு.க. ஆட்சியில் அரசு பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவுகளைத் தொடங்க முடிவு செய்தார்கள். தி.மு.க.வை எதிர்க்கும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் சென்ற கல்வியாண்டில் மாவட்டங்களுக்கு 10 பள்ளிக்கூடங்கள் என்ற வகையில் 320 பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவுகளைத் தொடங்கினார்கள். இதனால் 22,000 மாணவர்கள் தமிழ் வழியிலிருந்து ஆங்கில வழிக்கு மாறியுள்ளார்கள். 2013-14 கல்வியாண்டில் மாவட்டந்தோறும் 100 பள்ளிகள் வீதம் 3200 பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவைத் தொடங்க அரசு திட்டமிட்டிருக்கிறது. தற்போது சட்டப் பேரவையில் பள்ளிக் கல்வி அமைச்சர் தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று அனைத்துப் பள்ளிகளிலும் தேவையான அளவில் ஆங்கில வழி தொடங்கப்படும் என்று அறிவித்துள்ளார். முன்பே மாநகராட்சிகளில் மழலையர் வகுப்புகள் ஆங்கிலத்தில் நடத்தப்படுகின்றன. இந்த மாற்றத்தால் ஒன்றரை இலட்சம் மாணவர்கள் வரும் கல்வி ஆண்டில் தமிழ் வழியில் இருந்து ஆங்கில வழிக்கு மாறப் போகிறார்கள்.

அரசு அமைத்த எல்லாக் கல்விக் குழுக்களும் தாய்மொழி வழியில்தான் கல்வி இருக்க வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளன. பேராசிரியர் ச. முத்துக்குமரன் தலைமையில் அமைக்கப்பட்ட சமச்சீர்க் கல்விக் குழு அளித்த பரிந்துரைகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன. பொதுப் பள்ளி, அருகமைப் பள்ளி, கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி, சனநாயகக் கல்வி, சமூக மாற்றத்திற்கான கல்வி என்று கல்விக் கோரிக்கைகள் நிறையவே உள்ளன. இவற்றில் எவற்றையும் நிறைவேற்ற முனையாத அரசு ஆங்கில வழி மட்டும் திணிப்பது ஏன்? ஆங்கிலப் பிரிவைத் தொடங்கினால் தமிழை அழிக்க முனைகிறார் முதலமைச்சர் என்பது உறுதியாகும்.

இது குறித்து ஒரு நாள் கருத்தரங்கம் 1.6.2013 அன்று சென்னை இலயோலா கல்லூரி அரங்கில தமிழ்ச் சமூகக் கல்வி இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. காலை அமர்வில் முனைவர் நாகநாதன், முனைவர் வசந்திதேவி, பிரபா கல்விமணி, பிரின்சு கஜேந்திர பாபு, ஆர். நல்லக்கண்ணு உள்ளிட்ட பலரும் பேசினர். மாலை பழ. நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற நிறைவு நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஜவகருல்லா, வேல்முருகன், மல்லை சத்தியா உள்ளிட்டோர் உரையாற்றினர்.

DATE OF PUBLICATION 06.06.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM
TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# காவிரிப் படுகையை சீரழிக்கும் ‘மீதேன்’ வாயு திட்டம்

காவிரிப்படுகையில் அமைந்துள்ள திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம், வலங்கைமான், நீடாமங்கலம், ஒரத்தநாடு, மன்னார்குடி, குடவாசல், திருவாரூர் ஆகிய வட்டங்களில் பூமிக்கு அடியில் அதிக அளவில் மீதேன் எரிவாயு உள்ளதாம். இதை எடுத்தே ஆக வேண்டும் என்று பன்னாட்டு நிறுவனங்களும் மத்திய அரசும் உறுதி கொண்டுள்ளன.

அதனால் ஏற்படப்போகும் ஆபத்தை உணர்ந்த மன்னார்குடி பகுதி மக்கள் ஏற்கனவே போராட்டங்கள் மூலம் எதிர்ப்புகளை தெரிவித்துள்ளனர்.

மக்கள் எதிர்ப்பு ஏற்படுகிறது என்பதை உணர்ந்த நிறுவனங்கள் தொழில் நுட்பத்தை மாற்ற முனைகின்றன. நெய்வேலி போல திறந்த வெளிச் சுரங்கம் தோண்டினால் ஆரம்ப நிலையிலேயே மக்கள் எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருக்கும் என்பதால், 50 மீட்டர் முதல் 600 மீட்டர் இராட்சச ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, அதன் மூலம் மீதேன் வாயுவை உறிஞ்சி இழுக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

அப்படி ஆழ்குழாய்கள் மூலம் மீதேன் வாயு எடுக்கப்படும்போது நிலத்துக்கு அடியில் வெற்றிடம் தோன்றும். அந்த வெற்றிடம் வேறொரு பொருளால் நிரப்பப்பட வேண்டும். அப்படி நடக்கும்போது நிலத்தின் மேல் பகுதியிலுள்ள குடிநீர் உள்ளிட்ட அனைத்து நீரும் கீழே இறங்கும். மேலே வசிக்கின்ற மக்களுக்கு நீரே கிடைக்காமல் போகும். மேற்படி பகுதிகள் வறண்ட பிரதேசமாக மாறும். அடி ஆழத்திலுள்ள கடல் நீரைப்போல் 5 மடங்கு உப்பு நிறைந்த நீர் மேலே இழுக்கப்பட்டு வெளித் தள்ளப்படும். தள்ளப்படும் தண்ணீர் ஏற்கெனவே இப்பகுதிகளிலுள்ள வாய்க்கால் ஆகவும், வடிகால் ஆகவும் பயன்பட்டுவரும் ஆறுகளில் விடப்பட உள்ளது. இதன் மூலம் நமது நிலம் பூராவும் உப்பாக மாறும் அபாயம் உள்ளது. பிறகென்ன? நிலத்திலுள்ள அனைத்து சிற்றுயிர்களும் அழிந்து போகும். புல், பூண்டு கூட முளைக்காது. மேலும் அருகாமையிலுள்ள நாகப்பட்டினம், வேதாரண்யம், முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை, பேராவூரணி போன்ற பகுதிகள் வழியாக கடல்நீர் உள்ளே புகும். உப்பு நீர் உள்ளே புகுவதால் மேலே உள்ள தாவரங்கள் அழியும்.

இதேபோல் மேலே உள்ள நீர் கீழே இறங்கும்போது, மேலே சொல்லப்பட்ட பகுதிகள் மட்டுமல்ல, தஞ்சைக்கு மேலேயுள்ள மாவட்டங்கள் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள நன்னீரும் கீழே இறங்கி விடும். பிறகென்ன? ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட மக்கள் பஞ்சம் பிழைக்க இடம் தேடி வேண்டியதுதான்.

தொழில் வளர்ச்சி என்பது மக்களின் வாழ்வு ஆதாரங்களை பாதிக்காத வகையில் அமைய வேண்டும்.

இப்படிப்பட்ட தொழில் வளர்ச்சி தேவைதானா? தொழில் வளர்ச்சிக்காக உடல் உழைப்பை செலுத்தும் மக்களுக்கு என்ன கிடைத்திருக்கிறது. ஒரு லட்சம் மக்களுக்கு எட்டு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அழகான கான்க்ரீட் வீடுகளைக் கட்டுவதற்கான தொகையைக் கொண்டு, அதாவது 8000 கோடி ரூபாயில் 4 பேர் வசிப்பதற்கு ஒரு வீடு அம்பானிக்கு மும்பையில் கட்டப்பட்டுள்ளது. இது மலைக்கும், மடுவுக்கும் உள்ள வேறுபாடு அல்லவா? ஒண்டுவதற்கு ஓலைக் குடிசைகூட இல்லாமல் சாலையோரம் குடும்பம் நடத்துவோர் எத்தனை பேர்?

தமிழ்நாடு, பாண்டிச்சேரி கடலோரப் பகுதியில் பாண்டிச்சேரியை அடுத்து பாகூரில் தொடங்கி நெய்வேலி, சிறிமுஷ்ணம், ஜயங்கொண்ட சோழபுரம் வழியாக மன்னார்குடிக்கு தெற்குப் பகுதி வரை காவிரிப்படுகையில் பழுப்பு நிலக்கரியும் அதோடு சேர்ந்து மீதேன் என்ற எரிவாயுவும் இருப்பதாக கண்டறிந்துள்ளனர்.

- பழுப்பு நிலக்கரியின் மதிப்பீடு: பாகூர் பகுதி - 766 மில்லியன் டன்.
- நெய்வேலி, ஜயங்கொண்டம், வீராணம் பகுதி : 6835 மில்லியன் டன்.
- மன்னார்குடி பகுதியோ : 19788 மில்லியன் டன்
- இப்பகுதியிலுள்ள மீதேன் வாயுவின் மதிப்பீடு: 98000 கோடி கன அடி முதலில் மீத்தேன் வாயுவை எடுக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

வளரும் எரிவாயுத் தேவைகளுக்காக இந்த மீதேன் எரிவாயுவை எடுக்க இந்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் “கிரேட் ஈஸ்டெர்ன் எனர்ஜி கார்ப்பொரேசன் லிமிடெட்” என்ற நிறுவனத்துக்கு 29.07.2010 அன்று வழங்கியுள்ள உரிமத்தின் விவரங்கள் வருமாறு:

தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்பகோணம், ஒரத்தநாடு, பாபநாசம் வட்டங்கள்.

- திருவாரூர் மாவட்டத்தின் குடவாசல், வலங்கைமான், நீடாமங்கலம், மன்னார்குடி வட்டங்கள்.
- மொத்த நிலப்பரப்பு: 691 சதுர கிலோ மீட்டர்கள். இதில் 24 சதுர கி.மீ. பரப்பு பழுப்பு நிலக்கரி எடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 667 ச.கி.மீ. (1,66,210 ஏக்கர்கள்) மீதேன் எடுக்க தரப்பட்டுள்ளன.
- 04.01.2011இல் தமிழக அரசுடன் க்ரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கம்பெனி லிமிடெட் அன்றைய துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் தமிழ்நாடு தொழிற்துறை முதன்மை செயலாளருடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.
- மீதேன் திட்டத்திற்கான சுற்றுச்சூழல், வனத்துறை அனுமதி, தமிழக அரசின் முன் அனுமதி ஆகியன பெறப்பட்டுள்ளதாக நிறுவனம் தரப்பில் கூறப்படுகிறது.
- உள்ளுறைக் கிணறுகளுக்கான துளையிடும் வேலைகள் 2012 இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என நிறுவனம் கூறியிருந்தது.
- முதற்கட்ட வேலையாக தஞ்சை மாவட்டத்தில் 12 உள்ளுறை கிணறுகளும், திருவாரூர் மாவட்டத்தில் 38 உள்ளுறை கிணறுகளுக்குமான வேலைகள் விரைவில் துவங்க உள்ளன.
- நிலப்படுகை மீதேன் வாயு ஒரு குறிப்பிட்ட பகுதியில் செறிவாக குவிந்திருப்பது அல்ல. நிலக்கரிப் படிமத்தில் அதன் நுண்துளைகள், வெடிப்புகளில் நிலக்கரிப் பாறைகளின் தளப் பரப்பில் ஒட்டியிருப்பது.
- மன்னார்குடிப் பகுதி நிலக்கரிப் படிமங்கள் தரைமட்டத்திற்கு கீழே 500 அடி முதல் 1650 அடி ஆழம் வரை காணப்படுகின்றது.
- தற்போதுள்ள நிலத்தடி நீர் இந்த படிமங்களை அழுத்திக் கொண்டுள்ளது.
- இந்த அழுத்தத்தினால் செறிவற்ற மீதேன் வாயு நிலக்கரிப் பாறைகளில் இருந்து வெளியேற முடிவதில்லை.
- நிலக்கரிப் பாறை மீதுள்ள நிலத்தடி நீரை இறைத்து வெளியேற்றிய பின்னரே மீத்தேன் வாயு வெளிவர முடியும்.
- அடுத்த கட்டமாக வெற்றிடமாக்கும் கருவிகளைக் கொண்டு காற்றை உறிஞ்சி வெளியேற்ற வேண்டும்.
- அவ்வாறு நிலத்தடி நீர் 500 அடி முதல் 1650 அடி வரை வெளியேற்றப்படும் போது காவிரிப் படுகையின் நிலத்தடி நீர் மட்டம் 500 அடிகளுக்கு கீழே இறங்கி விடுவதோடு, இந்த மன்னார்குடி நிலக்கரிப் படுகையிலிருந்து சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு தொடர்புள்ள நிலத்தடி நீர் தொகுப்புகள் அனைத்தும் வறண்டு போகும்.
- எல்லாவற்றிற்கும் மேலாக மிக அருகாமையிலுள்ள வங்கக் கடலின் உப்புநீர் காவிரிப் படுகையின் உள்ளே ஊடுருவும். காவிரிப் படுகை ஒரு உப்பளமாக மாறும், பேரழிவு நிகழும்.
- நிலநடுக்கங்கள், மண் உள்வாங்குதல் போன்ற பேராபத்துக்கள் நிகழும் அபாயங்களும் உண்டு.

**வெளியேற்றப்படும் நிலத்தடி நீர்: ஒரு சுற்றுச் சூழல் பேரிடர்**

- ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து வெளியேற்றப்படும் நிலத்தடி நீர் பலவகையான மாசுக்களைக் கொண்டது.
- கடல் நீரில் இருக்கும் உப்பைவிட சுமார் ஐந்து மடங்கு வரை அதிகமான உப்பு இதில் உள்ளது.
- குளோரைடு, சோடியம், சல்பேட், பை-கார்பனேட், புளோரைடு, இரும்பு, பேரியம், மக்னீசியம், அமோனியா, ஆர்செனிக், பலவித நீர் கரிமப் பொருட்கள், கதிரியக்கக் கழிவுகள் போன்ற மாசுகளும் இருக்கின்றன.
- 80 ஏக்கர் நிலத்திற்கு ஒரு கிணறு அமைப்பதாக எடுத்துக் கொணடால் சுமார் 2000 கிணறுகள் தோண்டப்படலாம்.
- நாளுக்கு சுமார் 20000 கேலன் (75000 லிட்டர்) நீர் ஒரு கிணற்றிலிருந்து வெளியேற்றப்படும்.
- மாசு நிறைந்த இந்த நீரை தற்போது பாசன / வடிகால் வாய்க்கால்களாக பயன்பட்டுக் கொண்டிருக்கும் வாய்க்கால், ஆறு வலைப் பின்னலில் விடத் திட்டமிடுகிறார்கள்.
- இது மிகவும் ஆபத்தானது. நாசத்தை விலை கொடுத்து வாங்கும் இந்த மூடத்தனத்தால் ஒரு பேரழிப்பு தமிழகத்தை சூழும் அபாயம் உள்ளது. ✦

## தமிழகம் குப்பைத் தொட்டியா?


ஏற்கனவே உலகம் பூராவும் மேலை நாடுகளின் லாப வெறியால் தொழில் என்ற பெயரால் ஏராளமான கரியமிலவாயு வெளியேற்றப்பட்டதால், பூமி வெப்ப மடைந்து வருகிறது. அண்டார்டிகா பனிமலைகளே கரைந்து கொண்டிருக்கின்றன.

சுற்றுச் சூழல் கேடு, வெப்பம் காரணமாக மேலை நாட்டு மக்களின் விழிப்புணர்வு காரணமாக அங்கெல்லாம் புதிதாக தொழில்கள் தொடங்க கடும் எதிர்ப்புள்ள நிலையில் எங்கே சென்று குப்பைக் கொட்டலாம் என்று அலைகிறார்கள் தொழிலதிபர்கள். ஏற்கனவே மோசமான மேலை நாட்டுக் குப்பைகளெல்லாம் தூத்துக்குடி பகுதி கடலில் கொட்டப்படுகிறது.

கார் போன்ற பல பொருட்கள் இந்தியாவில் – குறிப்பாகத் தமிழகத்தில் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் பல உள்நாட்டு மக்களுக்கு கொடுக்கப்படுவதே இல்லை. 100 சதவீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த நிறுவனங்களுக்கு நமது அரசுகள் அரசு நிலங்களையும், நமது மக்களின் நிலங்களையும் பிடுங்கி வழங்குகிறது. 24 மணி நேரமும் மின்சாரமும், தண்ணீரும் வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது அரசு. இதனாலேயே மக்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. தண்ணீரும் கிடைக்கவில்லை.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 7th June 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜூன் 13, 2013 | புரட்சி 12 | முழக்கம் 22 | விலை: ரூ.3.00


# இடஒதுக்கீட்டை மறுக்கும் ஆசிரியர் தேர்வு முறைக்கு எதிர்ப்பு வலுக்கிறது

தமிழ்நாடு அரசு ஆசிரியர் தகுதித் தேர்வில் இடஒதுக்கீடு புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து திருப்பூரில் 26.5.2013 அன்று கூடிய திராவிடர் விடுதலைக் கழக செயலவை தீர்மானம் நிறைவேற்றியது. இந்தக் கோரிக்கை இப்போது வலுப்பெற்று வருகிறது.

இடஒதுக்கீட்டை கடைபிடிக்காத பள்ளிக்கல்வித் துறை அரசாணை 252 திருத்தப்பட்டு, புதிய அரசாணை பிறப்பிக்க வேண்டும், ஆசிரியர் தகுதித் தேர்வு மற்றும் அதன் அடிப்படையிலான பணி நியமனத்தில் இடஒதுக்கீட்டை கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பொதுப் பள்ளிக்கான மாநில மேடை சார்பில் ஜூன் 9 ஞாயிறன்று கல்வியாளர்கள் பங்கேற்ற கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் ஆசிரியர் தகுதித் தேர்வில் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. மற்றும் மாற்று திறனாளிகளுக்கு இடஒதுக்கீட்டின் அடிப்படையில் மாநில அரசுகள் மதிப்பெண் தளர்வு வழங்கலாம் என்று தேசிய ஆசிரியர் கல்வி வாரியம் கூறி உள்ளது.

அவ்வாறு தமிழ்நாடு அரசு மதிப்பெண் தளர்வு வழங்காமல், அனைத்து பிரிவினருக்கும் குறைந்த பட்ச தேர்ச்சி மதிப்பெண் 60 விழுக்காடு என நிர்ணயித்துள்ளது இடஒதுக்கீட்டிற்கு எதிரானது. மதிப்பெண் தளர்வு வழங்காதது ஒடுக்கப்பட்ட மக்களின் வேலை வாய்ப்பை தட்டிப் பறிப்பதோடு, இவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கி உள்ள அடிப்படை உரிமையை மறுப்பதாகும்.

ஆசிரியர் தகுதி தேர்வின் அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்க தகுதியை நிர்ணயித்து தமிழக அரசு அரசாணை 252ஐ 5.10.2012 அன்று வெளியிட்டது. இடஒதுக்கீட்டின் அடிப்படையில் தகுதியை நிர்ணயிக்காததால் அந்த அரசாணை இந்திய அரசியலமைப்புச் சட்டம் 14, 15(4), 16(4) பிரிவுகளுக்கு எதிரானதாக உள்ளது.

மத்திய அரசு தனது அலுவலக குறிப்புகளில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வழிகாட்டுதலைக் கொடுத்திருக்கிறது. அதாவது, எக்காரணத்தைக் கொண்டும் எஸ்.சி., எஸ்.டி., பிற்படுத்தப்பட்டோர் பணியிடங்கள் காலியாக இருக்கக் கூடாது. ஆகவே, அதற்கேற்ப மாநிலங்கள் இட ஒதுக்கீடு கொள்கைகளை உருவாக்கிக் கொள்ளலாம். இதற்கு மாற்றாக அந்த அரசாணை இட ஒதுக்கீட்டை மறுத்து, தரத்தைப்பற்றி மட்டுமே பேசுகிறது.

இடஒதுக்கீட்டின் அடிப்படையில் தகுதியை தீர்மானிக்காத அரசாணை எண்.252 இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் உச்சநீதிமன்றம் இந்திரா சகானி வழக்கு உள்ளிட்ட வழக்குகளில் கொடுத்த தீர்ப்புக்கு எதிராக உள்ளது. அரசாணை எண்.252 தீர்மானித்த தகுதியின் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் பணியிடங்களை நிரப்புவதில் பின்பற்றிய இடஒதுக்கீட்டு வழிமுறை தன்னிச்சையானது.

தமிழ்நாடு அரசுப் பணி தேர்வாணையம் பின்பற்றுவதுபோல இடஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் தீர்மானித்திருக்க வேண்டும். மாறாக, தேர்வர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தி வழங்கப்பட்டதாக கூறப்படும் இடஒதுக்கீடு என்பது, முறையாக இடஒதுக்கீட்டின் அடிப்படையில் தகுதி பெறக் கூடிய உரிமையை ஒடுக்கப்பட்ட மக்களை இழக்கச் செய்துள்ளது.

இதன் விளைவாக 2012 டிசம்பர் ஆசிரியர் பணி நியமனத்தில் 1184 பணியிடங்கள் (பிசி-இஸ்லாமியர்-153, எம்.பி.சி./டி.என்.சி.-151, எஸ்.சி.-659, எஸ்.சி.-அருந்ததியர்-131, எஸ்.டி-90) நிரப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, உரிய சூழலும், தகுந்த பயிற்சியும் வழங்கப்பட்டால் எவரும் தகுதி உடையவராக முடியும்.

கல்வியில் பட்டயமோ, பட்டமோ பெற்றவர்களுக்கு மீண்டும் தகுதித் தேர்வு என்பதற்கு பதிலாக, கல்வியியலில் பட்டயம் அல்லது பட்டம் பெற்றவர்களுக்கு பணி நியமனங்களை வழங்கி உரிய பயிற்சியினை வழங்குவதே சிறந்த ஆசிரியர்களை உருவாக்க வழி வகுக்கும். இருப்பினும், இன்றுள்ள சட்டத்தின்படி நடத்தப்படும் தகுதித் தேர்விலாவது சமூக நீதியை காக்கும் பொருட்டு இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள இடஒதுக்கீட்டை, தமிழ்நாடு அரசும் கடைபிடிக்க வேண்டும்.

ஆகவே, ஆசிரியர் தகுதி தேர்விலும், அதன் அடிப்படையிலான பணி நியமனங்களிலும் எஸ்.சி., எஸ்.டி., பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய மதிப்பெண் தளர்வு வழங்க வேண்டும். ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித் தனியாக தகுதி மதிப்பெண் நிர்ணயிக்க வேண்டும். அதற்கேற்ப தமிழக அரசு அரசாணை 252இல் உரிய திருத்தங்களை செய்து புதிய அரசாணையை வெளியிட வேண்டும்.

டிசம்பர் 2012இல் நடைபெற்ற பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர் பணி நியமனத்திற்கு பின்பு ஏற்பட்டுள்ள எஸ்.சி., எஸ்.டி., பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்ப சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் பணி நியமனங்களை ரத்து செய்ய வேண்டும் என்று அரசு கல்லூரி முன்னாள் முதல்வர்கள் ப.சிவக்குமார், மு.திருமாவளவன், பேராசிரியர் அ.மார்க்ஸ் ஆகியோர் சென்னையில் செய்தியாளர்களிடம் வற்புறுத்தினர்.

தேசிய ஆசிரியர் கல்வி கழக நெறிமுறைகளின் 9ஆம் விதிப்படி, பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் பணி நியமனத்தில் இடஒதுக்கீடு கொள்கையை பின்பற்ற வேண்டும். ஆனால், சென்ற ஆண்டு தமிழக அரசு நடத்திய பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர் பணி நியமனத்தில் இட ஒதுக்கீடு முறையை கடைபிடிக்காமல் 19 ஆயிரம் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

இடஒதுக்கீட்டை முறையாக கடைபிடித்திருந்தால் கூடுதலாக 15 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வேலை கிடைத்து இருக்கும். எனவே புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 19 ஆயிரம் ஆசிரியர்களின் பணி நியமனத்தை உடனடியாக ரத்து செய்து, இடஒதுக்கீட்டின் அடிப்படையில் புதிதாக பணி நியமனம் நடத்த வேண்டும். இடஒதுக்கீடு விதிமுறைகளின்படி, பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் பணி நியமனத்தை நடத்தாத, தமிழக அ ரசின் ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் சுர்ஜித் சவுத்ரியை பணி நீக்கம் செய்து, அவர் மீது விசாரணை மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## ஒரு வினா: ஒரு விடை

**வினா:** 60 ஆண்டுகள் பிரம்மச்சாரியாக வாழ்ந்ததற்காக காஞ்சி ஜெயேந்திரருக்கு 60 மலர்கள் தூவி அபிஷேகம் செய்துள்ளார்களே!

**விடை:** ‘பேஷா’ செய்ய வேண்டியதுதான். அவரது ‘பிரம்மச்சர்யம்’ மட்டும் இல்லாமல் போயிருந்தால் இந்த ‘ஜெகமே’ வம்சவிருத்தி இல்லாம அழிஞ்சே போயிருக்கும்!

## கல்வி உரிமைக்கு போராடிய கழகத் தோழர்கள் மீது மயிலை காவல்துறை காட்டுமிராண்டி தாக்குதல்

சென்னை மயிலாப்பூரிலுள்ள சாய்பாபா கோவில் விரிவாக்கத்திற்காக சாய் சமாஜ் அறக்கட்டளை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளபோதே கடந்த 21ஆம் தேதி பள்ளியில் ஒரு பகுதியை இடித்துத் தள்ளிவிட்டது. இது குறித்து காவல்துறையிடம் பள்ளி நிர்வாகம் புகார் செய்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. மே 30ஆம் தேதி சாய் வித்யாலயா பள்ளிப் பாதுகாப்புக் குழு சார்பில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்ற செய்தி கடந்த இதழில் வெளியானது.

10.6.2013 அன்று காலை வழக்கம்போல் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளும் பெற்றோர்களும் பள்ளிக்கு வந்தனர். கடந்த 21 ஆம் தேதி இடித்த பகுதி சீரமைக்கப்படாமல் இருந்ததைக் கண்டு பெற்றோர்கள் அதிர்ச்சி அடைந்தனர். எங்கள் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லை. இடித்த அந்த இடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. கோவிலுக்கு வரும் பக்தர்கள் கைகளை கழுவுவதற்கும் வாகனங்களை நிறுத்துவதற்கும் பள்ளி நுழைவு வாயிலைப் பயன்படுத்துவதால் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்று அஞ்சிய பெற்றோர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். மக்களோடு இணைந்து போராடிய மயிலைப் பகுதி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் இராவணன், ஜான், மனோகரன் ஆகியோரை மட்டும் மயிலைப் பகுதி காவல்துறையினர் மூர்க்கத்தனமாக தாக்கி, போலீஸ் வாகனத்தில் ஏற்றினர். தோழர்கள் ரத்தம் சொட்டச் சொட்ட வாகனத்தில் ஏறியதைக் கண்ட பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

மயிலை E1 காவல்நிலையத்தில் ஆய்வாளர் மோகன்தாசு, போலீஸ் சிவகுமார் உள்ளிட்ட நான்குபேர் கழகத் தோழர்களை கொடூரமாக தாக்கியுள்ளனர். தோழர் மனோகரனுக்கு முகத்தில் மூன்று தையல் போடப்பட்டுள்ளது. கழக வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி உடனடியாக காவல்நிலையம் வந்தனர். தாக்கிய காவல்துறையினர் மீது வழக்கு தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது. காவல்துறையைக் கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தலையங்கம்

## 'தர்மபுரி–உசிலம்பட்டி'கள்தான் தமிழனின் அடையாளமா?

தமிழ்நாட்டில் ஜாதி-தீண்டாமை வன் கொடுமைகள் தொடர் நிகழ்வுகளாகிவிட்டது. வெட்கித் தலைகுனிய வேண்டிய அவமானமாகும். 'திவ்யா-இளவரசன்' இணையரின் ஜாதி மறுப்புத் திருமணம் தமிழ்நாட்டில் ஜாதி வெறியின் களமாக மாற்றப்பட்டது. தர்மபுரி மாவட்டம் நத்தம் காலனி தலித் மக்களின் உடைமைகள் அனைத்தையும் ஜாதி வெறிக் கும்பல் சூறையாடியது. அதன் தொடர்ச்சியாக மரக்காணத்தில் தலித் மக்கள் மீது தாக்குதலை நடத்தினார்கள். இவ்வளவுக்குப் பிறகும் தலித் இளவரசனோடு வாழ்வதில் உறுதியாக இருந்தார் 'வன்னிய' சமுகத்தைச் சேர்ந்த திவ்யா.

ஜாதித் தடைகளைக் கடந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்த இணையர் கட்டாயப்படுத்தப்பட்டு அரசியல் சதியின் காரணமாக மிரட்டி பிரிக்கப்பட்டு விட்டனர். கணவர் வீட்டில் எந்தக் குறையும் தனக்கு இல்லை என்று நீதி மன்றத்தில் கூறிய திவ்யா, 'ஜாதி அரசியல்' தந்த அழுத்தத் துக்காக தனது மகிழ்ச்சியான வாழ்க்கையை தொலைத்து விடும் நிர்ப்பந்தத் துக்கு உள்ளாகி யுள்ளார். ஜாதி மனிதத்துவத்துக்கு எதிரானது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவை இல்லை.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 11 வயது தலித் சிறுவன் காலில் செருப்புப் போட்டு நடந் தான் என்ற "குற்றத்துக்காக" ஜாதி வெறியர்கள் அந்த சிறுவனின் தலை மீது செருப்பை தூக்க வைத்து வீதிகளில் நடக்கவிட்டிருக்கிறார்கள். உசிலம்பட்டி என்றாலே அது ஜாதி வெறிப் பகுதி என்றே தமிழக வரைபடத்தில் ரத்த அடையாளத் துடன் பதிந்து போய் நிற்கிறது. அதே உசிலம் பட்டியில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரைப் பயணத்தை கழகம் நடத்தியபோது, 'மாவீரன் இமானுவேல் சேகரன்' என்ற பெயரை உச்சரித்த ஒரே காரணத்தால் கழகச் செயல்வீரர் இராவணன் மீது கல்வீசி, அவரது கையை உடைத்தனர். அதே உசிலம்பட்டியில்தான் இப்போது 6ஆவது வகுப்பில் படிக்கும் தலித் சிறுவன் தலை மீது 'செருப்பை' சுமக்க வைத்துள்ளார்கள்.

இதே உசிலம்பட்டி ஒன்றியத்துக்குட்பட்ட மூன்று பஞ்சாயத்துகளை 'ரிசர்வ்' தொகுதி யாக்கியதை எதிர்த்து 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை தேர்தலே நடத்தவிடாமல் தடுத்து வந்தது ஜாதி வெறிக் கும்பல். 9 முறை இடைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டும், ஒருமுறைகூட தேர்தலை நடத்தவிடவில்லை. தலித் மக்களுக்கு 'கொட்டாங்கச்சி'யில் தேனீர் ஊற்றும் அவலமும் சுடுகாடுகளில் பிணத்தைப் புதைக்க தடை போடும் கேவலமும் இப்போதும் தொடருவதாக 'இந்து' நாளேடு (ஜூன் 10) கூறுகிறது.

ஜாதி-தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக திராவிடர் விடுதலைக் கழகம், 'தீண்டாமை எதிர்ப்பு முன்னணி' போன்ற ஒரு சில அமைப்புகள் மட்டுமே எதிர்த்துப் போராடி வருகின்றன. வேறு கட்சிகளோ, இயக்கங்களோ, இப்பிரச்னைகளிலிருந்து முழுமையாக ஒதுங்கி நிற்கின்றன. மனிதர்களை பிறப்பின் அடிப்படையில் இப்படி அவமதித்து அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை ஜாதி வெறிக் கும்பல் பறித்துக் கொண்டு வெறியாட்டம் போடுவதை எதிர்த்து ஒரு கண்டனக் குரல் எழுப்புவதற்குக்கூட இந்த நாட்டில் தமிழுக்கும் தமிழனுக்கும் கட்சிகளையும் இயக்கங்களையும் நடத்துகிறவர்கள் ஏன் முன்வரவில்லை? என்ற கேள்வியை வேதனை யுடன் எழுப்ப வேண்டியிருக்கிறது.

ஜாதி வெறியும் தலித் மக்கள் மீதான வெறுப்பும் பொதுப் புத்தியில் திணிக்கப்பட் டுள்ளதன் வழியாக பார்ப்பனியம் உயிர்த் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை! இந்தப் பார்ப்பனியத்துக்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களின் சுயமரியாதைக் கான போராட்டத்தை முன்னெடுக்கும் செயல் களத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் உறுதியாக பயணிக்கும்.

"தமிழன் என்று சொல்லடா? அவன் தலை யில் செருப்பைத் தூக்கி வையடா" என்பது தமிழனுக்கான அடையாளமல்ல; அது அவமானம்!

# மோடியின் 'இராமராச்சியம்'

**கோவாவில் நடந்த பா.ஜ.க. கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பா.ஜ.க.வின் பிரச்சாரக் குழு தலைவராக நரேந்திரமோடி அறிவிக்கப்பட்டுள்ளார். நரேந்திரமோடிக்கு அத்வானி உள்ளிட்ட பல மூத்த தலைவர்களிட மிருந்து எதிர்ப்பு; அத்வானி கோவா செயற் குழுவையும் புறக்கணித்துவிட்டார். ஆனாலும், ஆர்.எஸ்.எஸ். தனது அதிகாரத்தைப் பயன் படுத்தி, மோடிக்கு இந்தப் பதவியைப் பெற்றுத் தந்துள்ளதாக செய்திகள் வரு கின்றன. அடுத்து நாடாளுமன்ற தேர்தலில் பிரச்சார அணுகுமுறை பற்றி மோடி தனது சகாக்களான ராஜ்நாத் வெங்கய்யா நாயுடு வுடன் கலந்து ஆலோசித்தால் எப்படி இருக்கும்?**

மோடி : நான் எதிர்பார்த்தபடியே என்னை தலை வராக்கிவிட்டீர்கள். அடுத்து நான் பிரதமர் ஆக வேண்டும். அது பற்றி யோசிக்க வேண்டும்.

ராஜ்நாத் சிங் : தலைவரே! நீங்கள் பிரதமரா வதற்கு கட்சிக்குள்ளேயே தடையாக இருக்கும் அத்வானி, உமாபாரதி போன்ற வர்களை முதலில் நாம் முறியடிக்க வேண்டும். அது பற்றி யோசியுங்கள்

மோடி : யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஒன்றும் பிடிபட மாட்டேங்குதே!

வெங்கையா நாயுடு : அவர்கள் எல்லாம் உண்மையான இந்துக்கள் அல்ல என்று அறிவித்துவிட்டால் போச்சு. அப்புறம் என்ன செய்வார்கள், பார்க்கலாம்.

மோடி : நல்ல யோசனை. அதையும் மீறி, ஏதாவது குறும்புகள் செய்தால் அவர்கள் எல்லாம் உண்மையில் இஸ்லாமியர்கள், இந்துக் களாக நடித்துக் கொண்டிருந்தார்கள் என்று அறிவித்து நடவடிக்கை எடுத்து விடுவேன். அதுதான் 'மோடி ஸ்டைல்'!

ராஜ்நாத் : நல்லா, சொன்னீங்க, தலைவரே! கட்சிக் குள்ளே உங்களுக்கு கடும் எதிர்ப்பு இருந்தா லும் ஆர்.எஸ்.எஸ். சிபாரிசுல தலைவரா வந்துட்டீங்க. அதுபோல தேர்தலிலே மக்கள் எதிர்ப்பை மீறி பிரதமராக வரதுக்கு ஏதேனும் வழி இருக்கான்னு இப்போதே யோசிப்பது நல்லது.

மோடி : நீங்கள் சொல்றதும் முக்கியமான கருத்து தான். ஆர்.எஸ்.எஸ்.சுக்குத்தான் பிரதமரை அறிவிக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். அப்பதான் இது இந்துக்களுக்கான நாடு அப்படின்னு, தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கலாமா? இது ஒரு ஆலோசனை தான்; யோசிச்சுப் பாருங்க!

வெங்கையா நாயுடு: யோசனை நல்லாதான் இருக்கு. ஆனால், மக்கள் இதை ஏற்றுக் கொண்டு, ஓட்டுப் போடுவாங்களா? அதையும் யோசிக்க வேண்டியிருக்கிறதே!

மோடி : நீங்க சொல்றதும்கூட நியாயம்தான். அப்படி மக்கள் எதிர்த்தா, அதுக்கு ஒரு வழி இருக்கு. நாம் நேரா அலகாபாத் நீதி மன்றத்துல வழக்கு போட்டுடுவோம்! அங்கே நீதிபதிகள் எப்படியும் நமக்கு சாதகமாகத்தான் தீர்ப்புச் சொல்லுவாங்க!

வெங்கையா நாயுடு : அது எப்படி உறுதியாகச் சொல்றீங்க... சட்டம் இடம் கொடுக்குமா?

மோடி : என்ன அரசியல் தெரியாம பேசுறீங்க. ஏற்கனவே அயோத்தியிலேகோவில் இருக் கிற இடத்துலதான் இராமன் பிறந்தான்னு நீதிபதிகள் தீர்ப்பு சொன்னதை மறந்துட் டீங்களா? அதுக் கெல்லாம் சட்டத்தைப் பார்த்தா தீர்ப்பு சொன்னாங்க; சும்மா, அரசியல் தெரியாம பேசாதீங்க.

ராஜ்நாத்: அது சரி. இப்ப காங்கிரசை நாம் எப்படி எதிர்க்கப் போகிறோம். அதுக்கென்ன திட்டம்?

மோடி : அதுதான் ஆடிட்டர் தணிக்கை அறிக்கைகள் எல்லாம் இருக்கே. அதுல காங்கிரஸ்காரங்க செய்ததாக கூறப்பட் டுள்ள ஊழல்களையெல்லாம் மக்களுக் கிட்ட எடுத்துவிட வேண்டியதுதான்!

வெங்கையா நாயுடு : இங்கே, ஒரு சந்தேகம் இருக்கு தலைவரே! குஜராத் மாநில அரசு தணிக்கைத் துறை அறிக்கையிலே நீங்க 1500 கோடி ரூபாய் ஊழல் செய்திருப்பதாக கூறியிருக் கிறார்களே!

மோடி : அது எனக்கு தெரியாதாக்கும்? பெருசா பேச வந்துட்டீங்க? மாநில அரசு தணிக்கைத் துறை சுட்டிக் காட்டும் ஊழலுக்கும் மத்திய அரசு தணிக்கைத் துறை சுட்டிக் காட்டும் ஊழலுக்கும் வேறுபாடு இல்லையா? அது வேறு; இது வேறு. அது மட்டுமல்ல. நான், இப்போது மாநில முதலமைச்சருக்கு போட்டியிடவில்லையே! பிறகு எப்படி மாநில தணிக்கைத் துறை அதிகாரியின் குற்றச்சாட்டு என்னைக் கட்டுப்படுத்தும்? இப்படி எதையும் ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ராஜ்நாத் : அது சரி. இப்ப, நாம் தேர்தல்ல எந்த முழக்கத்தை முன் வைச்சுப் பிரச்சாரம் செய்யப் போகிறோம்; அதைச் சொல்லுங்க.

மோடி : அதுதான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே! காங்கிரஸ் இல்லாத இந்தியாவை கட்டமைப் போம்! இதுதான் நமது முழக்கம்!

வெங்கையா நாயுடு : அதெப்படிங்க முடியும்? எனக்குப் புரியவில்லை. காங்கிரசே இந்தியா வுல இருக்காதா? அப்ப, காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டவங்கள் எல்லாம் இருப்பாங்களா?

மோடி : அவர்கள் வேண்டுமானால் இருந்து விட்டுப் போகட்டும். அவர்களும் இந்துக்கள் தானே! ராமராஜ்யமே இந்துக்களுக்குத் தானே!

ராஜ்நாத் : தலைவரே ஒரு சந்தேகம். ராமாயண காலத்துல நாடாளுமன்றமோ, காங்கிரசோ, ஆடிட்டர் அறிக்கைகளோ இல்லையே! அப்ப ராமன் அப்படி யாரை எதிர்த்தாரு? எப்படி ஆட்சிக்கு வந்திருப்பாரு?

மோடி : என்னது; நீங்களும் இந்துக்களை புண் படுத்தும்படி கேள்வி கேட்க ஆரம்பிச் சுட்டீங்க....

ராஜ்நாத் : அய்யய்யோ; அப்படி எல்லாம் இல்ல. அப்ப வரப்போகும் ராமராஜ்யத்துல நீங்க தான் 'ராமன்'; இல்லீங்களா?

மோடி : இதிலென்ன சந்தேகம்?

வெங்கையா நாயுடு : ஒரு தாழ்மையான விண்ணப் பம். அப்போ, எங்களையெல்லாம் அனுமார் கள் ஆக்கிடாமா பார்த்துக்குங்க. நாங்களும் இந்துக்கள்தான். இதை மட்டும் நீங்க மறந்துடவே கூடாது! 'பாரத் மாதாக்கிஜே!'

(ஆலோசனை கூட்டம் கலைகிறது)

**– கோடங்குடி மாரிமுத்து**

## ஆதிதிராவிட மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை

ஆதிதிராவிட மாணவ மாணவியர்களை சுய நிதிக் கல்வி நிறுவனங்களில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேருவதற்கு அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம்)திற்கு மிகாமல் இருப்பின் அவர்களுக்கான அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணத்தை மய்ய அரசு நிதியிலிருந்து தமிழக அரசு அளிக்கும் என ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இச்சலுகை கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்கும் பொருந்தும்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,சென்னை-41.
✆9941613535

# மக்களை இழிவுபடுத்தும் ஜாதி தோன்றியது எப்படி?

## பெரியார்

ஒரே நாட்டு மக்களைப் பிறவியில் பல சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது நமது இந்தியாவில்தான் இருக்கின்றதே தவிர, வேறெங்கும் இல்லை என்பது உலகக் கல்வி ஞானமுடையவர்கள் யாவரும் அறிந்ததாகும். அந்தப்படி இந்தியாவில் பிரிக்கப்பட்டிருக்கும் சாதியும் எவ்விதக் கொள்கைக்கும் பொருத்த மில்லாமல் வெறும் பிரிவுக்கும், இழிவுக்கும் மாத்திரம் ஆதாரமாய் இருப்பதைத் தவிர மற்றபடி அவற்றால் யாதொரு பயனும் இல்லாமல் இருப்பதும் யாவரும் அறிந்ததாகும்.

எனவே இப்படிப்பட்ட சாதி உயர்வும் தாழ்வும் எப்படி ஏற்பட்டதென்றும், இதற்கு ஆதாரம் என்ன என்பதையும் சற்றுக் கவனிப்போம்.

பொதுவாகச் சாதி என்பது இந்துக்கள் என்பவர்களுக்குள் ஆரியக் கொள்கைகளுக்கு அடிமைப்பட்டவர்களுக்குள் மாத்திரம்தான் "கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது" என்கின்ற கொள்கையின்மீது நான்கு வருணங்களாக அதுவும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவை முறையே ஒன்றுக்கொன்று தாழ்ந்ததாகவும், கடைசிச் சாதி என்பது மிக்க இழிவானதாகவும் கருதப்படுவதாகக் குறிக்கப்பட்டிருக்கின்ற விவரம் யாவரும் அறிந்ததேயாகும்.

இப்படி இருந்தாலும் இப்போது அநேக சாதிகள் இருப்பதற்கு என்ன காரணம் என்று கவனித்துப் பார்ப்போமானால், அதற்குக் கிடைக்கும் சமாதானம் மிக மிக இழிவைத் தரத் தக்கதாகவே இருப்பதை உணரலாம்.

அதாவது, "ஆதியில் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்ட நான்கு வருணத்தாரும் தங்களில் சாதிமுறை தவறிக் கலப்பு விவாகம் செய்து கொண்டதாலும், கலப்பு விபசாரம் செய்து கொண்டதாலும் ஏற்பட்ட பிரிவு"களென்றும், அப்படிப்பட்ட பிரிவுகளுக்கும் பஞ்சம சாதியார்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றதென்றும் ஆதாரங்களில் இருக்கின்றன.

அப்படிச் சொல்லப்படுவதிலும் இப் "பஞ்சம சாதிகள்" என்பது, இப்போது நமது நாட்டில் பெரும்பான்மையாய் இருக்கும் பல முக்கியமான சாதிக்காரர்கள் என்பவர்களே - பெரிதும் இந்த விபசாரப் பெருக்கால் ஏற்பட்ட பஞ்சம சாதிகள் என்றே காட்டப்பட்டிருக்கின்றன.

ஆகவே அதில், உதாரணமாக, இன்று தமிழ்நாட்டில் பிரபல சாதியும் பிரமுக சாதியும் என்று சொல்லிக் கொள்ளப்படுவதான வேளாள சாதியார் எனப்படுபவர்களே பஞ்சம சாதியில் சேர்ந்தவர்கள் என்றும், பஞ்சம சாதியிலும் - பிராமண க்ஷத்திரிய குலப் பெண்ணைச் சோரத்தால் கலந்ததால் பிறந்தவர்கள் என்றும் குறிக்கப்பட் டிருக்கின்றன.

இவர்களில் இந்தப்படியான வேளாளர் என்பவர்களில் விவசாயம் செய்பவர்களாயிருந்தால் அவர்களுக்குக் 'காணியாளர்' என்று பெயர் என்றும்; மற்றபடி 'சிற்றரசு', 'மந்திரித்துவம்' முதலிய பதவிகளில் இருப்பவர்களாயிருந்தால், அவர்களுக்கு 'வேளாண் சாமாந்தர்' என்கின்ற பெயர் என்றும் குறிக்கப்பட்டிருப்பதுடன், இவற்றிற்கு ஆதாரம், சுப்பரபோதகம், பிரம்மபுராணம், வைகாநசம், மாதவியம், சாதி விளக்கம் என்கின்ற நூல்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

தவிர, மேற்கண்ட பிராமண சாதி ஆண், க்ஷத்திரிய சாதிப் பெண்ணை விவாகம் செய்து கொண்டதால் பிறந்த பிள்ளைகளே 'சவர்ணர்' எனவும், 'தெலுங்கர்' எனவும் குறிப்பிடப்பட் டிருக்கின்றனர். அதாவது இது தெலுங்கு பாஷை பேசும் தெலுங்கு தேசத்தவர் அனைவரையும் குறிபபிடத்தக்கதாகவே குறிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோலவே, பிராமணன் வைசியப் பெண் ணுடன், கல்யாணத்தால் பிறந்த பிள்ளை 'அம் பட்டன்' என்றும், சோரத்தால் பிறந்த பிள்ளைகள், 'குயவர்' என்றும், 'நாவிதர்' என்றும் குறிக்கப்பட் டிருக்கின்றது. அதுபோலவே, பிராமணன் சூத்திரப் பெண்ணுடன் கல்யாணத் தால் பிறந்த பிள்ளை 'பரதவர்', அதாவது 'செம் படவர்' என்றும், சோரம் செய்ததால் பிறந்தவர் 'வேட்டைக்காரர்', அதாவது 'வேடுவர்' என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

பிராமணப் பெண்ணுடன் சூத்திரன் விபசாரம் செய்ததால் பிறந்தவர்கள் 'சண்டாளர்கள்' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பிராமண குலப் பெண்களுடன் சண்டாளர் கூடிப் பிறந்த பிள்ளைகள் 'சருமகாரர்' அதாவது 'சக்கிலிகள்' என்று குறிப்பிடப்படுகின்றது. க்ஷத் திரியகுலப் பெண்ணுடன் 'சண்டாளர்' முதலிய வர்கள் சேர்வதால் பிறந்த மக்கள் 'வேணுகர்' (அதாவது வேணுகானம் செய்பவர் களும்), கனகர் (அதாவது, தங்க வேலை செய்பவர் களும்), 'சாலியர்' (அதாவது நெசவு முதலிய வேலை செய் பவர்களும்) ஆவார்கள் என்றும் கூறப்பட்டிருக் கின்றன.

இந்த மாதிரி 'கீழ்-மேல்' சாதிகள் கலந்து கலந்து வந்ததால் ஏற்பட்ட சாதிகளில் ஒன்றாகிய அயோவகச் சாதிப் பெண்ணிடம் நிடாதனுக்குப் பிறந்த பிள்ளைகள் 'பார்க்கவர்கள்' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இந்தப்படியே இப்போது அமுலில் உள்ள சாதிகளையெல்லாம் குறிக்கும்படியாகவே இன்னும் அநேக விஷயங்கள் காணப்படுகின்றன.

இதுபோலவே, இன்னும் இரண்டொரு ஆராய்ச்சி நூல்களில் - அதாவது அபிதானகோசம், அபிதான சிந்தாமணி முதலிய எல்லா இந்துப் பண்டிதர்களும் ஆதாரமாய்க் கொண்டாடும் புத்தகங்களில் மற்றும் பல சாதிகளை இதைவிடக் கேவலமாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றதோடு, 4 சாதி தவிர மற்ற சாதிகள் எல்லாம் மேற்கண்ட நான்கு சாதிக்குள் மேல் - கீழாகவும், கீழ் - மேலாகவும் கல்யாணம் செய்தும், விபசாரம் செய்தும் பிறந்த பிள்ளைகளாக ஏற்பட்டவர்கள் என்றே கூறப்பட்டிருக்கின்றன.

செட்டியார்மார்களையும், ஆசாரிமார்களையும் மிக மிக இழிவாகவே கூறப்படுகின்றது.


ஆகவே, சாதியைக் கட்டிக்கொண்டு அழுவது இவ்விழிவுகளை மறைமுகமாய் ஏற்றுக் கொள் வதையே ஒக்குமென்பதைத் தவிர வேறில்லை.

உண்மையில் யாருக்கு, யார் பிறந்திருந்தாலும் அதனாலேயே குற்றம் சொல்வதற்கில்லை என்பது நமது கொள்கையானாலும் - ஒரு இழிவைக் கற்பித்து அதை நம் மக்கள் மீது சுமத்தி, ஒரு பெரிய சமூகம் நிரந்தரமாய் அடிமையாயும் காட்டு மிராண்டியாயும் இருப்பதற்குச் செய்த காரியமே சாதிப் பிரிவும் பாகுபாடும் என்பதை எடுத்துக் காட் டவும்; அவ்விதக் 'கொடுமையை' ஒழிப்பதற்காக வுமே இதை எழுதுகிறோம்.

**'குடிஅரசு', 16.11.1930 தலையங்கம்**

# 'நீதி' என்ற மாறுவேடத்தில் நடக்கும் கொலை

*தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி 'இந்து' ஜூன் 5, நாளேட்டில்எழுதிய கட்டுரை:*



இந்திய அரசியல் சட்டம் தூக்குத் தண்டனையை அனுமதிப்பதால், அதில் எந்தத் தவறும் இல்லை என்று பலரும் கருதுகிறார்கள். அரசியலமைப்பை உருவாக்கியவர்களுக்கே தூக்குத் தண்டனையில் உடன்பாடு உண்டு என்பதே இதன் மூலம் அவர்கள் வெளிப்படுத்தும் கருத்து. ஆனால், அரசியல் நிர்ணய சபையில் பல உறுப்பினர்கள் தூக்குத்தண்டனைக்கு எதிராகவே கருத்துகளை வலியுறுத்தியுள்ளனர். அரசியல் சட்டத்தை வடிவமைத்த டாக்டர் அம்பேத்கர் அவர்களே, மக்கள் நடைமுறையில் அகிம்சையை பின்பற்றாவிட்டாலும் அகிம்சையை ஒரு தார்மீக நெறியாக உறுதியாக ஏற்றுக் கொள்கிறார்கள். இதை கருத்தில் கொண்டு இந்த நாட்டில் மரணதண்டனையை முழுமையாக ஒழித்து விடுவதே சரியாக இருக்கும் என்று கூறினார்.

பேராசிரியர் சிபன்லால் சாக்சேனா, ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றதற்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். (ஆனால், தண்டனை நிறைவேற்றப்பட வில்லை) 1949, ஜூலை 3ஆம் தேதி அரசியல் நிர்ணய சபையில் அவர் பேசுகையில், தான் சிறையிலிருந்த காலத்தில், அப்பாவிகள் எப்படி தூக்கிலிடப்பட்டார்கள் என்பதை விவரித்தார். தூக்குத்தண்டனையை ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், உச்சநீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்யும் வாய்ப்பு வசதி படைத்த பணக்காரர்களுக்குத்தான் கிடைக்குமே தவிர, ஏழை எளிய மக்களுக்கு கிடைக்காது என்றார்.

தவறான தீர்ப்புகளால் தூக்குத் தண்டனைக்கு உள்ளாவதுதான் மிகவும் வேதனைக்குரியது. 21ஆம் நூற்றாண்டிலும்கூட இப்படி தவறான தீர்ப்பால் தூக்கிலிடப்படுவது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. சர்வதேச பொது மன்னிப்பு சபை, மக்கள் சிவில் உரிமைக் கழகம் போன்ற அமைப்புகள் தூக்கிலிடுவோரை முடிவு செய்யும் நீதிமன்ற நடைமுறையில் விருப்பு வெறுப்புகள் தலைதூக்கி நிற்பதை சுட்டிக்காட்டியுள்ளன. தூக்குத் தண்டனை விதிப்பதிலுள்ள குழப்பங்களையும் முரண்பாடுகளையும் உச்சநீதிமன்றமே பலமுறை ஒப்புக் கொண்டிருக்கிறது.

1996 ஆம் ஆண்டிலிருந்து உச்சநீதிமன்றம் தவறாக 15 பேருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட் டுள்ளதை சுட்டிக்காட்டி 14 பிரபல நீதிபதிகளே குடியரசுத் தலைவருக்கு கடந்த ஆண்டு கடிதம் எழுதினர். இதில் இரண்டு பேருக்கு தூக்குத்தண்டனையே நிறைவேற்றப்பட்டுவிட்டது. "சுதந்திர இந்தியாவில் குற்றம் மற்றும் தண்டனை வரலாற்றில் இது மிக மோசமான தவறான தீர்ப்பு" என்று நீதிபதிகள் குடியரசுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

கடுமையான குற்றங்களைத் தடுப்பதற்கு, குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மீதான குற்றத்தைத் தடுப்பதற்கு தூக்குத் தண்டனை தேவை என்று சிலர் வாதிடுகிறார்கள். கடந்த ஆண்டு அமெரிக்காவில் நடத்திய ஆய்வில் தூக்குத் தண்டனை குற்றங்களைத் தடுத்திடவில்லை. அதற்கான நம்பத் தகுந்த ஆதாரங்கள் இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஆள் மாறாட்டத்தில் தவறாக தண்டிக்கப்பட்டவர்களை மரபணு சோதனை நடத்தி, உண்மைகளை வெளிக்கொணரும் சீர்திருத்த சட்ட அமைப்பு ஒன்று செயல்படுகிறது. அதன் பெயர் 'அப்பாவிகளுக்கான செயலமைப்பு' (Innocence Project). இந்த அமைப்பு, பல அப்பாவிகள் தூக்குத் தண்டனைக்கு உள்ளாகியிருப்பதை கண்டறிந்துள்ளது. அதில் ஒன்று கேமரான் டோட் வில்லிங்கம் என்பவர் தூக்கிலிடப்பட்டதாகும்.

அவருடைய மூன்று மகள்கள் மரணத்துக்கு காரணமானவர் என்ற முடிவு செய்யப்பட்டு 2004ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார். மறு விசாரணையின்போது இந்த வழக்கில் சாட்சியாக முன்வைக்கப்பட்ட

4 ஆம் பக்கம்

DATE OF PUBLICATION 12.06.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# அனைத்து மனிதர்களும் ஒரு தாய் மக்களே!

***மனிதர்கள் அனைவருமே நட்சத்திரத்தின் குழந்தைகள் என்று அறிவியல் கூறுகிறது. எப்படி என்பதை எள்மையாக விளக்குகிறது, இந்த அறிவியல் கட்டுரை.***

*ஜாதி, மத, மொழி, நாடு என்ற பேதமின்றி இந்த பூமியில் உள்ள அனைத்து மனிதர்களும் ஒரு தாய் மக்களே.*

*அந்தத் தாய் யாரென்று அறிந்தால் மிகவும் ஆச்சரியமும், பெருமையும் கொள்வீர்கள். அந்தத் தாய் 'நட்சத்திரம்' தான். நம்மில் பலர் நட்சத்திரம் (ஸ்டார்) ஆக வேண்டும் என்று கனவு கண்டிருப்பார்கள். அவர்களுக்கு, தாங்கள் நட்சத்திரத்தின் குழந்தைகள்தான் என்ற செய்தி பெருமையாகத்தானே இருக்கும்.*

*நாம் அனைவரும் எப்படி நட்சத்திரத்திலிருந்து வந்தோம் என்று விளக்கமாக பார்ப்போம்.*

*உயிர்கள் உருவாக பல தனிமங்கள் தேவை. மனிதர்களாகிய நமக்கு ரத்தம் சுத்தமாவதற்கு வேண்டிய ஆக்சிஜன், எலும்பின் உறுதிக்குத் தேவையான கால்சியம், ரத்தத்திற்கு வேண்டிய இரும்புச் சத்து, மற்றும் கார்பன், நைட்ரஜன், பாஸ்பரஸ் என்று தனிமங்களும், கூடவே உப்பில் உள்ள சோடியம் மற்றும் பொட்டாசியம், மக்னிசியம் போன்ற பல தனிமங்கள் தேவை. அவை இல்லை என்றால் உயிர் வாழ இயலாது என்பது அனைவருக்கும் தெரியும்.*

*மேலும் தங்கம், வெள்ளி, அலுமினியம் போன்ற பல தனிமங்கள் நம் வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளன.*

*இந்தத் தனிமங்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசைப் படுத்தி அறிவியலாளர்கள் ஓர் அட்டவணையை ஏற்படுத்தியுள்ளனர்.*

*இந்தத் தனிமங்களைப் பற்றி ஆராய்ந்து அதன் அமைப்பு, குணங்கள், பயன்கள் போன்றவற்றை அறிந்து, அவைகளைப் பயன்படுத்தி, நாம் வாழ்வை இனிதே நடத்த அறிவியலாளர்கள் வழி வகுத்திருக்கிறார்கள்.*

*மாரடைப்பு வந்தால் உயிருக்குப் போராடும் ஒருவருக்குத் தேவையான ஆக்சிஜன் மற்றும் பல மருந்துகளைக் கொடுத்து, பாசக் கயிறைப் போட்டு இழுத்துக் கொண்டிருக்கும் "எமனிடம்" போராடி, அந்த பாசக் கயிறை அறுத்து, போய்க் கொண்டிருந்த உயிரை மீண்டும் கொண்டு வர உதவுவார் மருத்துவர்.*

*ஒவ்வொரு தனிமங்களின் குணங்களை வெகு நாள் ஆய்ந்து அறிந்த அறிவியலாளர்கள் பணி தான் அவர்களுக்கு உதவியாயிருக்கின்றது.*

*இந்த தனிமங்கள் எல்லாம் பூமியில் கிடைக்கின்றன. சரி, பூமிக்கு இவை எப்படி வந்தன?*

*நட்சத்திரங்களில் தான் முதலில் இவை எல்லாம் உருவாகின என்று அறிவியலாளர்கள் சொல்லுகிறார்கள். ஏன் பூமியில் நாம் காணும் அனைத்துப் பொருட்களும் நட்சத்திரத்திலிருந்துதான் உருவாயின. நட்சத்திரத்திலிருந்து அவை பூமிக்கு எப்படி வந்தன?*

*நம் சூரியன் என்ற நட்சத்திரத்தில் இது போன்ற பொருட்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றது. ஆனால், நம் சூரியனில் உருவாகும் பொருட்கள் நமக்குக் கிடைக்காது.*

*நம்முடைய சூரியனுடைய தாத்தாவாகிய முதல் தலைமுறை நட்சத்திரம் உருவாக்கியதை நாம் அனுபவிக்கிறோம். மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த நமது சூரியன் உருவாக்கும் பொருட்கள் நமக்குப் பின்னால் வரும் தலைமுறைக்கும், உயிர்களுக்கும்தான் உபயோகமாகும்.*

*எப்படி என்று பார்க்கலாமா?*

*சுமார் 1370 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றி, ஒரு பலூனைப் போல விரிவடைந்த இந்த பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் இரண்டே இரண்டு தனிமங்கள் தான் இருந்தது. அவை ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் (சுமார் 75 சதவீதம் ஹைட்ரஜன், 25 சதவீதம் ஹீலியம்). வாயுக்களான இவை இரண்டுமல்லாமல் நாம் காணும் நட்சத்திரங்கள், கோள்கள் எதுவுமே, ஏன் எந்த தூசும்கூட பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் இல்லை.*

*ஆச்சரியம் என்னவென்றால் அந்த இரண்டு தனிமங்கள் (வாயுக்கள்) தான் இப்போது நாம் காணும் கோடிக்கணக்கான நட்சத்திரங்களும், அதைச் சுற்றிவரும் கோள்களும். இந்த பூமியும், அதில் நாம் காணும் அனைத்துப் பொருட்களுமாக உருமாறின.*

*எப்படி?*

*(அடுத்த இதழில்)*

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*தடயவியல் ஆதாரங்களில் பலத்த சந்தேகங்கள் எழுந்தன. நீதிபதி, அவர் தவறாக தூக்கிலிடப்பட்டதை ஒப்புக் கொண்டார். இளம்பெண் ஒருவரை கொலை செய்ததாக 1989இல் சார்லோஸ்டிலூனா என்பவர் சில ஆண்டுகளுக்கு முன் தூக்கிலிடப்பட்டார்.*

*2004இல் கொலம்பியா சட்டக் கல்லூரி மாணவர்கள் நடத்திய ஆய்வில், இவர் ஆள் மாறாட்டத்தில் தவறாக தூக்கிலிடப்பட்டார் என்பது உறுதியானது. குற்றங்களைத் தடுப்பதற்கு சமூகக் கல்வி, காவல் மற்றும் நீதித் துறை சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தாமல், தண்டனையை கடுமையாக்கி விட்டாலே குற்றங்கள் குறைந்துவிடும் என்று நமது நாட்டு சட்டத் துறையினர், தங்களுக்கு வசதியாகக் காரணம் கண்டுபிடித்துக் கொள்கிறார்கள். குற்றம் செய்கிறவர்களுக்கு உறுதியான தண்டனை உண்டு என்ற நிலை இருந்தாலே குற்றங்கள் குறைந்துவிடும். சட்டங்களை கடுமையாக்குவதால் குற்றங்கள் குறைந்துவிடாது.*

*தூக்குத் தண்டனை என்பதே நீதிமன்றத்தின் அனுமதியோடு நடக்கும் கொலைதான். ராஜீவ் கொலை வழக்கில் இப்போது தூக்குத் தண்டனையை எதிர்நோக்கி இருக்கும் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர் வழக்கில் தண்டனை விதித்த மூன்று நீதிபதிகள் அமர்வுக்கு தலைமை நீதிபதியாக இருந்தவர் நீதிபதி கே.டி.தாமஸ். ஏற்கனவே 22 ஆண்டுகள் சிறையில் கழிந்த பிறகு, இந்த மூவருக்கும் மீண்டும் தூக்குத்தண்டனை விதித்தால், ஒரே குற்றத்துக்கு இரண்டு முறை தண்டித்ததாகிவிடும் என்று அவர் கூறுகிறார்.*

*கடந்த சில மாதங்களாக இந்திய அரசாங்கம் தூக்குத்தண்டனைகளை நிறைவேற்றுவதில் படுவேகம் காட்டி வருகிறது. ஒரு கொலைக்கு பழிவாங்க மற்றொரு கொலை என்பது தவறான பார்வை. பழிவாங்கும் போக்கு தான் நீதி என்ற மாறுவேடத்தில் அரங்கேறுகிறது. குற்றங்கள், கொலைகள் குறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க விரும்பும் அரசாங்கம், அதே தவறை நீதியின் பெயரால் செய்யக் கூடாது. தி.மு.க. தூக்குத்தண்டனையை தொடர்ந்து எதிர்த்து வருகிறது. தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி, தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியுள்ள 16 பேரின் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார். உலகம் முழுதும் தூக்குத்தண்டனை விடைபெற்று வருகிறது. அய்ரோப்பிய ஒன்றியத்தில் ஒரு நாடு தன்னை இணைத்துக் கொள்ள தூக்குத்தண்டனையை ஒழிக்க வேண்டும் என்று முன் நிபந்தனை உள்ளது.*

*2010 டிசம்பரில் கூடிய 65ஆவது அய்.நா.வின் பொதுச் சபை, தூக்குத் தண்டனைக்கு எதிராக மூன்றாவது முறையாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளதோடு, உலகம் முழுதும் தூக்குத்தண்டனையை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. உலகில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமாக 140 நாடுகள், இனியும் தூக்குத்தண்டனையை பயன்படுத்தப் போவது இல்லை என்று அறிவித்துள்ளதை சர்வதேச பொது மன்னிப்பு சபை சுட்டிக்காட்டுகிறது.*

*உலகத்தின் இந்தப் போக்கை இந்தியாவும் அங்கீகரித்து அந்த வழியில் செயல்பட வேண்டும்.*

## நாட்டை சூறையாடும் 'கார்ப்பரேட்' நிறுவனங்கள்

*பெரும் தொழில் நிறுவனங்களை நடத்தும் 'கார்ப்பரேட்' நிறுவனங்களுக்கு 2005-2006 ஆம் ஆண்டில் இந்திய அரசு தள்ளுபடி செய்த வரியைக் கணக்கிட்டால் சராசரியாக ஒரு நிமிடத்துக்கு ரூ.7 மில்லியன்!*

*தங்கம்-வைரத்துக்கு தள்ளுபடி செய்துள்ள வரி கடந்த 36 மாதங்களில் '2 ஜி' அலைவரிசை ஊழலுக்கு சமம்.*

*2005-லிருந்து 2013 வரை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்ட வருமான வரி, சுங்க வரி, 'கஸ்டம்ஸ் டூட்டி' ரூ.31,111,69 (ரூபாய் 31 லட்சத்து 111 ஆயிரத்து 69 கோடி ரூபாய்)(2005 ஆம் ஆண்டிலிருந்து, 2013 ஆம் ஆண்டுக்குள் தள்ளுபடி விகிதம் 130.53 சதவீதம் அதிகரிப்பு)*

*தங்கம், வைரம் மற்றும் நகைகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ.3,14,456 கோடி.*

*கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு இவ்வளவு பெரும் தொகையை தள்ளுபடி செய்த நிதியமைச்சர் ப.சிதம்பரம், இந்தியாவில் தனி நபர் நேரடி வருமான வரி 5.5 சதவீதமாகவும், மறைமுக வருமான வரி 4.4 சதவீதமாகவும் மிக மிகக் குறைவாகவே உள்ளது என்றும் கவலைப்படுகிறார்.*

*தள்ளுபடி பற்றி அவர் கவலைப்படவில்லை!*

*நாட்டை "தேசபக்தர்கள்" கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விற்பனை செய்து விட்டார்கள்!*


*(ஆதாரம்: 'இந்து' மார்ச் 16 இதழில் சாய்நாத் கட்டுரை)*

## மே 17 இயக்கத் தோழர்களிடம் விடுதலை இராசேந்திரன் உரை

*மே 17 இயக்கத்தைச் சார்ந்த அய்.டி. நிறுவனங்களில் பணியாற்றும் தோழர்களிடம் பெரியாரியம் குறித்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். 9.6.2013 அன்று மாலை 3.30 மணியளவில் சென்னை திருவல்லிக்கேணி அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் இந்த நிகழ்வு நடந்தது. இரவு 7.30 ணி வரை பெரியாரியம் குறித்து வரலாற்றுத் தகவல்களையும் இன்றைய பெரியாரியத்தின் தேவைகளையும் எடுத்துரைத்து, பெரியாரியம் மீது எழுப்பப்படும் விமர்சனங்களுக்கும் விரிவாக விளக்கமளித்தார்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 13th June 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜூன் 20, 2013 | புரட்சி 12 | முழக்கம் 23 | விலை: ரூ.3.00

## தீண்டாமைக் கொடுமை: நடவடிக்கை எடுக்க மறுக்கும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முற்றுகை

# கழகத் தலைவர் தலைமையில் 178 தோழர்கள் கைது





கிணத்துக்கடவு பகுதிகளில் தொடர்ந்து வரும் தீண்டாமைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மறுத்து வரும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் முற்றுகையிட்டு 178 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். தீண்டாமையை தடுக்கத் தவறிய குற்றத்தை இழைத்துள்ள மாவட்ட நிர்வாகம் அதை சுட்டிக்காட்டிய தோழர்கள் மீது வழக்குப் பதிவு செய்துள்ளது.

வன்கொடுமை வழக்கு தொடர்பாக மேல் முறையீடு செய்யப்பட்ட வழக்கில் 19-04-2011 அன்று உச்ச நீதிமன்றத்தில் தண்டனையை உறுதி செய்து தீர்ப்பளித்த நீதிபதிகள் மார்கண்டேய கட்சு, கியான் சுதா மித்ரா ஆகியோர் வழங்கிய தீர்ப்பில், தீண்டாமை கொடுமைகள் இருப்பது தெரிந்தும் அதன் மீது நடவடிக்கை எடுக்காத மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சியரை பணி இடை நீக்கம் செய்து, அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து, துறை ரீதியான நடவடிக்கையும் எடுக்கவேண்டும் என்று கடுமையாக எச்சரித்து, அனைத்து மாநில அரசு களுக்கும் தீர்ப்பின் நகலும் அனுப்பி வைக்கப் பட்டது.

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு வட்டத்தில் பல தேநீர் கடைகளில் இரட்டைக் குவளை இருப்பதையும், முடித் திருத்தகங்களில் தாழ்த்தப் பட்டோர் புறக்கணிக்கப்பட்டும் வருகின்றனர். இப்படி இந்த பகுதியில் நிலவும் தீண்டாமையை அகற்றக்கோரி, தீண்டாமை நிலவும் வடிவங்கள்-ஊர்கள்-கடைகளின் பெயர்கள் என விரிவான பட்டியலையும், மேற்கண்ட தீர்ப்பின் நகலையும் இணைத்து தொடர்புடைய அலுவலகங்களில் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் கடந்த ஆண்டு ஒரு முறையும், இந்த ஆண்டில் 11-5-2013 அன்றும் கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக கிணத்துக்கடவுவில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்று வரும் ஜாதிக் கொடுமைகள் மீது நடவடிக்கை எடுக்க மறுக்கும் கோவை மாவட்ட நிர்வாகங்களை கண்டித்தும், அதிகாரிகளின் அக்கறையற்ற போக்கை அரசுக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தவும், 17-06-2013 திங்கட்கிழமை அன்று காலை 11-00 மணியளவில் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நடைபெற்றது. தீண்டாமை கொடுமைகளுக்கு எதிராகவும், நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் ஒலி முழக்கங்களை எழுப்பிய தோழர்கள், ஆட்சியர் அலுவலகம் நோக்கி ஊர்வலமாக புறப்பட்டனர். காவல் துறையினர் தடுப்பு அரண்களை பயன்படுத்தி, தோழர்களை தடுத்து நிறுத்தினர். காவல் தடுப்பை மீறி அலுவலகத்திற்குள் தோழர்கள் நுழைய முற்பட்டதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தோழர்களை கட்டுப் படுத்த சிரமப்பட்ட காவல் துறையினர், ஆட்சியர் அலுவலக வாயில் கதவை இழுத்துப் பூட்டினர்; அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் என்பதால் மனு கொடுக்க வந்திருந்த ஏராளமான பொது மக்கள் உள்ளே செல்ல முடியாமலும், உள்ளிருந்த பொது மக்கள் வெளியே வராமலும் தடுக்கப்பட்டனர். காவல் துறையின் இந்த நடவடிக்கையால் ஆட்சியர் வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொருளாளர் ஈரோடு ப.இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, மாநில வெளியீட்டுச் செயலாளர் சூலூர் தமிழ்ச்செல்வி, கோவை மண்டல அமைப்புச் செயலாளர் பல்லடம் விசயன், மாவட்டக் காப்பாளர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், மாநகர் மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் பன்னீர்செல்வம், புறநகர் மாவட்டத் தலைவர் வெள்ளமடை நாகராசன் உட்பட 178 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட தோழர்கள் அண்ணா மலை அரங்கில் அடைக்கப்பட்டனர். அரங்கில் சிறிய ஒலி பெருக்கி மூலம் கழகப் பொறுப் பாளர்கள் உரையாற்றினர், அரங்கு முழுவதும் தோழர்கள் நிரம்பியிருந்ததால் மாநாடு போல காட்சியளித்தது. இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 143, 341 ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ள காவல் துறை, தோழர்கள் அனைவரையும் சொந்த பிணையில் விடுதலை செய்துள்ளது. கோவையில் வெளியான மாலை செய்தித்தாள்கள் அனைத்திலும் இந்த செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து, முதல் பக்கத்தில் வண்ணப்படங் களுடன் வெளியிட்டுள்ளது; தொடர்ந்து நிலவி வரும் தீண்டாமைக் கொடுமைகளையும், அதிகாரிகளின் அலட்சியப் போக்கையும் மக்கள் மன்றத்திற்கு கொண்டு வந்திருப்பது போராட்டத்தின் வெற்றியாகும்.

**செய்தி : கோகுல். கண்ணன்**





**கைதுக்குப் பிறகு மண்டபத்திற்குள் தோழர்கள்**

**தலையங்கம்**

## பந்தாடப்படுகிறது (13ஏ) சட்டத்திருத்தம்

இலங்கை ராணுவத்தினருக்கு இந்தியாவில் இனி பயிற்சியளிக்க மாட்டோம் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி, சில வாரங்களுக்கு முன் அளித்த உறுதி காற்றில் பறந்தே போய்விட்டது. உதகையில் உள்ள வெலிங்டன் இராணுவப் பயிற்சிப் பள்ளியில் கடந்த ஜூன் 7ஆம் தேதி முதல் இரண்டு சிங்கள ராணுவத்தினர் பயிற்சிப் பெற்று வருகிறார்கள். மேலும் 4 அதிகாரிகள் பயிற்சிப் பெறப் போகிறார்களாம். தமிழக முதல்வர் ஜெயலலிதாவே மத்திய அரசுக்கு இதைக் கண்டித்து கடிதம் எழுதியும் எந்தப் பயனும் இல்லை. இப்போது இலங்கை அரசு எவரை எதிர்த்துப் போராட ராணுவப் பயிற்சி வழங்கு கிறது? அப்பாவி தமிழ் மக்களை எதிர்த்துத் தாக்குதல் நடத்து வதற்காகவா?

இலங்கையில் ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13ஆவது சட்டத் திருத்தத்தையும் செல்லாக் காசாக்கும் முயற்சிகளில் இலங்கை அரசு இறங்கியுள்ளது. இந்த சட்டத்திருத்தத்தை அமுல்படுத்தச் செய்து ஈழத் தமிழர்களுக்கு உரிமைகளை பெற்றுத் தருவோம் என்று வாய் வீரம் பேசி வந்த மத்திய அரசு, குறிப்பாக மன்மோகன் சிங், ப.சிதம்பரம் போன்றவர்கள் இலங்கை அரசின் இந்த நடவடிக்கையை தட்டிக் கேட்காமல், வாயில் பிளாஸ்திரியைப் போட்டு ஒட்டிக் கொண்டு, வேடிக்கைப் பார்க்கிறார்கள். தமிழர்களுக்கு உருப்படியான எந்த உரிமையும் வழங்காததுதான் இந்த 13ஆவது சட்டத் திருத்தம் (இப்போது 13ஏ). வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, தமிழர் வாழும் பகுதி ஒரே பிரதேசமாக்கப்படும் என்பது, இந்த சட்டத் திருத்தத்தில் இடம் பெற்றிருந்த முக்கிய அம்சம் அப்படி ஒன்றாக இணைக்கப்பட்ட பிறகு, இலங்கை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மீண்டும் இரண்டாகப் பிரித்து விட்டார்கள்.

தமிழ் பேசும் பகுதிகள் இணைக்கப்பட்டதுபோல், இனி எதிர்காலத்தில் நிச்சயமாக நடக்காது என்று இலங்கை அமைச்சரவைக் குழு சார்பில் அதன் பேச்சாளர் கேகலியா இராம்புக்வேலா என்பவர் அறிவித்துள்ளார். மாகாண கவுன்சில் ஒரு காவல்துறையை அமைத்துக் கொள்ளவும், சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், நில உரிமைகளுக்கான அதிகாரங்களையும் இப்போது இலங்கை நாடாளுமன்றத்தின் வழியாகவே பறிக்கப் போகிறார்கள். இவை பற்றி எல்லாம் பரிசீலிக்க இலங்கை அமைச்சரவை ஒரு தேர்வுக் குழுவை அமைக்குமாறு அந்நாட்டு நாடாளுமன்ற அவைத் தலைவரிடம் கடந்த ஜூன் 13 ஆம் தேதி வேண்டுகோள் வைத்துள்ளது.

'13ஏ' சட்டத்திருத்தத்தில் மாற்றங்கள் கொண்டு வரக்கூடாது என்று இலங்கை முஸ்லீம் காங்கிரஸ், ஈழம் மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி), இடதுசாரி இலங்கா சமாஜ் கட்சிகள் (எல்.எஸ்.எஸ்.பி.) கருத்து தெரிவித்துள்ளன. ஜாதிகா ஹெல உருமையா என்ற சிங்கள தீவிரவாத அமைப்பு '13ஏ' என்ற பிரிவே இலங்கை சட்டத்தில் இடம்பெறக் கூடாது என்று மிரட்டுகிறது. தேசிய சுதந்திர முன்னணி (என்.எஃப்.எஃப்) சட்டம் ஒழுங்கு மற்றும் நிலம் தொடர்பான உரிமைகளை மட்டும் பறித்துவிட வேண்டும் என்று கூறுகிறது. இவை மட்டுமல்ல, '13ஏ' சட்டத்திருத்தத்தையே நீக்கிட வேண்டும் என்று சிங்களர்களிடையே பல்லாயிரக்கணக்கில் கையெழுத்து இயக்கமும் நடைபெற்று வருகிறது.

1987 ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் தேதி அன்றைய பிரதமர் ராஜிவ் காந்தி இலங்கை ராணுவத்தின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டிருந்தபோது சிங்கள கப்பல் படை சிப்பாயான விஜி முனி விஜிதா ரோகன டீ செல்வா என்பவர், ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை எதிர்த்து, ராஜீவ்காந்தியை துப்பாக்கி மட்டையால் தாக்கி, சாகடிக்க முயன்றார். அப்போது 21 வயது மட்டுமே நிறைந்திருந்த இந்த சிப்பாய், ராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டபோது அவருக்கு ஆதரவாக வாதாட, சிங்கள வழக்கறிஞர்கள் பட்டாளமே திரண்டு வந்தது. ஆனாலும், நீதிமன்றம் 6 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது. அதற்குப் பிறகு அதிபராக வந்த பிரேமதாசா மன்னித்து இரண்டரை ஆண்டுகளில் விடுதலை செய்தார். இப்போது 13ஏ சட்டத் திருத்தத்தையே ரத்து செய்யும் இயக்கத்தில் பங்கேற்று ரோகன டி செல்வா கையெழுத்திடும் காட்சியை 'சுடர்ஒளி' தமிழ் நாளேடு வெளியிட்டுள்ளது.

மாகாண கவுன்சிலுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டம் ஒழுங்கு, நிலவுரிமை, காவல்துறை அமைத்தல் போன்ற அதிகாரங்களை சட்டப்படி பறித்த பிறகே யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வீட்டு வசதித் துறை அமைச்சர் விமல் வீரவன்சா என்பவர் அரசுக்கு மனு கொடுத்துள்ளார். சட்டம் ஒழுங்கை நிர்வகிக்கவோ, காவல்துறையை அமைத்துக் கொள்ளவோ, தங்கள் ஆட்சிக்குட்பட்ட நிலத்தில் உரிமை கொண்டாடவோ, மறுக்கக் கூடிய ஒரு மாகாணக் கவுன்சிலாம், அங்கே தமிழர்கள் "ஆட்சி" நடத்துவார்களாம். காதில் பூ சுற்றுகிறார்கள்.

இதைத் தட்டிக் கேட்க இந்திய பார்ப்பனிய ஆட்சி தயாராக இல்லை. இங்கே சில பார்ப்பன ஏடுகள் தமிழர்கள் பாதுகாப்போடும் வளமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று அப்பட்டமாக பொய்ப் பிரச்சாரங்களை பரப்பி வருகின்றன.

ஒவ்வொரு முறையும் அய்.நா.வில் மனித உரிமைக் குழுவில் தீர்மானம் வரும்போது மட்டும் ஏதோ சிறு சிறு சலசலப்புகள் வருவதும், மீண்டும் சிங்கள அரசின் பேரினவாத ஒடுக்குமுறைகள் தொடருவதும் வாடிக்கையாகிவிட்டது. மத்தியில் ஆளும் காங்கிரஸ் ஆட்சி இதற்கெல்லாம் என்ன பதில் தரப் போகிறது?

# சாவுச் செய்தி கொண்டு வந்த தந்தி மரணம்

கடந்த வாரம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டில் ஒரு பார்ப்பனர், அறிவியல் ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். வீட்டில் காக்காய் (காகம்) கத்தினால் கட்டாயம் விருந்தினர் வருவார்கள் என்று. அந்தக் கட்டுரை 'அறிவான'(!) விளக்கங்களை முன் வைத்தது. பூனை குறுக்கே வந்து விட்டால், சில வீரத் தமிழர்கள் உடனே வீடு திரும்பி விடுவார்கள். ஒரு தம்ளர் தண்ணீர் குடித்து, பரிகாரம் செய்துகொண்டு கிளம்புவார்கள். நரி முகத்தில் விழித்தால் நல்லது நடக்குமாம். ஒரு திரைப்படத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் செந்திலை எழுப்பி, நரி போல கத்தச் சொல்லி, கடனை வசூலிக்கக் கிளம்புவார் கவுண்டமணி. சைக்கிளில் ஊர்போய்ச் சேர்ந்தபோது கடன் வாங்கிய ராமசாமி, செத்துப் போயிருப்பார். புலி முகத்தில் விழித்தால் புண்ணியம் கிடைக்கும் என்றால் எவராவது 'புண்ணியத்தை' வாங்க விரும்புவார்களா, என்ன? இப்படிப் பழந்தமிழன் கண்டுபிடித்த தகவல் தொடர்பு சாதனங்கள் காக்கை, பூனை, நரி, கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் கிளி - இவைகள்தான்.

பிரிட்டிஷ் ஆட்சியில் முதன்முதல் கரும்புகையை கக்கிக் கொண்டு தொடர்வண்டிகள் வந்தபோது, பல ஊர்களில் தொடர் வண்டிப் பாதைக்கு அருகே குடியிருந்த மக்கள் ஊரையே காலி செய்துவிட்டு ஓடிவிட்டார்களாம். 'அய்யய்யோ, கரும்புகையை கக்கிக் கொண்டு பூதம் வருகிறது' என்று அலறினார்களாம். அதே பிரிட்டிஷ்காரன் தான் முதன்முதலாக, கம்பியில்லா தந்தி முறையை கல்கத்தாவில் அறிமுகப்படுத்தினான். அது நடந்தது 1851இல்! அதற்கு 31 ஆண்டுகளுக்குப் பிறகுதான் தொலைபேசி வந்தது. தந்தி வந்திருக்கிறது என்று சொன்னாலே போதும், செத்தவர் யார் என்பதை அறிவதற்கு முன்பே நெஞ்சில் அடித்துக் கொண்டு, ஒப்பாரியைத் தொடங்கி விடுவார்கள் நமது தாய்மார்கள்! சாவுச் செய்திக்காகவே தந்தி என்ற நிலை மெல்ல மெல்ல மாறியது. 'மங்களகரமான' திருமணங்களுக்கு வாழ்த்துச் செய்திகள்; பதவி நியமன அறிவிப்புகள்; இவைகளும் தந்தி வழங்கிய சேவைகளாயின!

அந்தக்கால தமிழ்த் திரைப்படங்களில் கதைகளில் திருப்புமுனைகளை உருவாக்க நமது கதாசிரியர்களுக்கு தந்திகள்தான் கைகொடுத்தன. காதலர்களை பிரிப்பதற்கு, 'கிளைமேக்ஸ்' காட்சியில் பிரிந்த குடும்பங்களை சேர்த்து வைத்து 'சுபம்' போடுவதற்கு, தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா கதாபாத்திரங்கள் மாரடைப்பில் மரணமடையச் செய்வதற்கெல்லாம் தந்திகள்தான் காட்சிகளில் வந்து கொண்டிருக்கும்!

அடியேனுக்கு தந்தியின் மீது இவ்வளவு கரிசனம் வருவதற்கும் ஒரு சுயநலம் உண்டு. குடும்பத்தின் முதல் பட்டதாரியான அண்ணனுக்கு தந்தித் துறையில்தான் வேலை கிடைத்தது. அடிக்கடி அந்த அலுவலகம் போகும் போது 'கட்கட; கடகடகட்' என்று அண்ணன் தட்டிக் கொண்டே இருப்பார்.

அடுத்த வீட்டுத் தோட்டக்காரர் அஞ்சலட்டையில் கடிதம் எழுதித் தருமாறு என்னிடம் அவ்வப்போது கேட்பார். கடிதத்தை எழுதி முடித்தப் பிறகு, கடைசி வரியாக, 'இந்தக் கடிதத்தை தந்தி போல் பாவித்து பதில் போடவும்' என்ற வரியை கட்டாயம் சேர்க்கச் சொல்வார். அதாவது கடிதங்களேகூட தந்தியாகக் கருதப் பட்டன.

இதெல்லாம் பூலோக சமாச்சாரம். சிவலோக பதவி - வைகுண்ட பதவிகளை அடைந்த நமது முன்னோருக்கு இந்த தந்தியால் செய்திகளை அனுப்ப முடியுமா? மேலே பிதுர்களாக அலைந்து கொண்டிருக்கும் அவர்களுக்கு இறந்த நாளில் திதி கொடுத்து, அவர்களுக்கு 'உணவுப் பாதுகாப்புச் சட்டம்' வராத காலத்திலேயே சாப்பாடுகளை அனுப்பி வைக்கும் சக்தி மிக்க கருவி ஒன்றை நமது புரோகிதர்கள் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். **அதுதான் தர்ப்பைப் புல்.**

"தந்தியாம், டெலிபோனாம், செல்லாம், ஈமெயிலாம், இதோ, இந்த தர்ப்பைப் புல்லுக்கு உரிய சக்தி - இந்த கருமங்களுக்கு எல்லாம் உண்டா?" என்று இப்போதும் பூணூலை இழுத்து விட்டு, சிண்டை வாரி முடிந்துக் கொண்டு சவால் விடுகிறார்கள். 'பரலோக தபால்காரர்களான' புரோகிதர்கள்.

எதற்கப்பா, இந்த தந்தி புராணங்கள் என்று நீங்கள் கேட்பது அடியேனுக்கும் புரிகிறது. ஆமாம்!

இம்மாதம் ஜூலை 15ஆம் தேதியோடு மக்கள் உணர்வுகளோடு பிணைந்திருந்த தந்தி சேவையை நிறுத்திக் கொண்டு விட்டது 'பி.எஸ்.என்.எல்.' நிறுவனம். ஆமாம்! மரணச் செய்திகளைக் கொண்டு வந்த தந்தியே மரணத்தை சந்தித்து விட்டது!

உலகப் புகழ் பெற்ற நகைச்சுவை எழுத்தாளர் மார்க்ட்வெய்ன், உயிருடன் இருக்கும்போதே, ஒரு பத்திரிகை அவர் மரணமடைந்துவிட்டதாக அறிவித்து அவரைப் பற்றிய அருமை பெருமைகளை எல்லாம் எழுதித் தள்ளியது. மார்க்ட்வெய்ன் அதற்காக ஆத்திரப்படவில்லை. அந்தப் பத்திரிகைக்கு ஒரு தந்தி அனுப்பினார். 'என்னைப் பற்றி உண்மைக்கு மாறாக மிகைப்படுத்தி புகழ்ந்துவிட்டீர்கள்' என்று அந்தத் தந்தியில் குறிப்பிட்டிருந்தார். இது நடந்தது 1897இல்!

தமிழ்நாட்டுக்கு வருவோம்!

"வைக்கம் போராட்டத்தைத் தொடர்ந்து தலைமையேற்று நடத்த நீங்கள்தான் வரவேண்டும்" என்று தமிழ்நாட்டில் இருந்த பெரியாருக்கு கேரளாவில் போராட்டத்தைத் தொடங்கிய குரூர் நீலகண்ட நம்பூதிரி பாத் 1924ஆம் ஆண்டில் தந்தி அனுப்பினார். அடுத்தடுத்து 3 தந்திகள் வந்தன. 'இன்றே புறப்படுகிறேன்' என்று பதில் தந்தி கொடுத்துவிட்டு பெரியார் மூட்டை முடிச்சுகளோடு கிளம்பிவிட்டார்.

லண்டன் வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர் வாதாடிப் பெற்ற தாழ்த்தப்பட்டோருக்கான இரட்டை வாக்குரிமையை எதிர்த்து காந்தி சாகும் வரை பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கினார். வெளிநாடு சுற்றுப் பயணத்தில் இருந்த பெரியார், அம்பேத்கருக்கு ஒரு நீண்ட தந்தியை அடித்தார். காந்தியின் மிரட்டலுக்கு ஆதி திராவிடர்களுக்கான உரிமையை அடகு வைத்துவிடாதீர்கள் என்று, அதில் எச்சரித்திருந்தார்.


ராஜகோபாலாச்சாரியின் 'வர்ணாஸ்ரம' திட்டங்களை ஒழித்துக்கட்டி சமூக நீதி ஆட்சியை வழங்கிய முதலமைச்சர் காமராசர் பதவி விலகி, அகில இந்திய அரசியலுக்குப் போகும் முடிவெடுத்தபோது பெரியார், காமரா

4 ஆம் பக்கம்

# தோழர் மணிவண்ணன் விடைபெற்றுக் கொண்டார்

50 படங்களை இயக்கி, 400 படங்களில் நகைச்சுவை, வில்லன், குணச்சித்திர நடிகராக நடித்து, தமிழ்த் திரையுலகிலும் தமிழின உணர்வாளர்களிடமும் செல்வாக்கை செலுத்தி வந்த தோழர் மணிவண்ணன், கடந்த ஜூலை 15, 2009 அன்று திடீரென்று விடைபெற்றுக் கொண்டு விட்டார். உண்மையில் அனைவருக்குமே அதிர்ச்சி! அவர் ஒரு பகுத்தறிவாளராக, ஜாதி எதிர்ப்பாளராக, இன விடுதலையாளராக வாழ்ந்தவர். தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர். அதை ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்தியவர். அவர் விருப்பப்படியே அவரது உடல் மீது புலிக்கொடி போர்த்தப்பட்டது. திரைத்துரையில் தன்னை நடிகவேள் எம்.ஆர்.இராதாவின் கலைவாரிசு என்று பல்வேறு பேட்டிகளில் அவர் பெருமையுடன் அறிவித்துக் கொண்டார். சிலுவையையும் பூணூலையும் தூக்கி எறிந்துவிட்டு, காதலர்களை இணைய வைத்த ‘அலைகள் ஓய்வதில்லை’ படத்திற்கு கதை வசனத்தை எழுதியவர் இவர்தான். வேலை கிடைக்காத இளைஞர்களின் உணர்வலைகளை கலைப் படைப்பாக்கிய ‘நிழல்கள்’ படத்தின் வசனங்களை தீட்டியதும் இவர்தான்.

கதை, வசனம் எழுதுபவராக-இயக்குனராக-நடிகராக படிப்படியாக உயர்ந்து, நடிகவேளைப் போலவே நகைச்சுவை கலந்து வில்லன் வேடங்களில் பரிணமித்தார். தமிழ்த் திரையுலகில் இவர் இயக்கிய அமைதிப்படை, அரசியலில் அதிர்வுகளை உருவாக்கியது. அதன் இரண்டாம் பகுதியாக அண்மையில் அவர் எழுதி இயக்கிய இராஜராஜ சோழன், எம்.ஏ. எம்.எல்.ஏ. - மக்கள் விரோத அரசியலை அனல் பறக்க சாடியது. திரைப்பட ‘நட்சத்திரமாக’ தனக்கு சமூகத்தில் கிடைத்த ‘விளம்பரம்-புகழை’ தன்னை வளர்த்துக் கொள்ள பயன்படுத்தாமல் அவற்றை தேர்தல் அரசியலில் திரும்பிப் பார்க்காத இயக்கங்களுக்கும், கொள்கைகளுக்கும் அந்த விளம்பர வெளிச்சங்களைக் குவிய வைத்தார். அதுதான், அவரது தனித்துவமான சிறப்பு. திராவிடர் கழகம் முன்னின்று எடுத்த வேலு. பிரபாகரன் இயக்கிய ‘கடவுள்’ படத்தில் கொள்கைக்காக பணம் பெற்றுக் கொள்ளாமல் நடித்தார். பெரியாரின் ஜாதி எதிர்ப்புக் கொள்கைக்காகவே ‘ஆண்டான் அடிமை’ படத்தையும், முற்போக்கு கொள்கைகளுக்காக ‘தோழர் பாண்டியன்’ படத்தையும் எடுத்தவர். இவையெல்லாம் வணிக ரீதியாக தனக்கு வெற்றியை ஈட்டித் தராது என்று நம்பியே அதில் இறங்கினார். பாரதிய ஜனதா ஆட்சிக் காலத்தில் வருமானவரித் துறையின் பார்ப்பன அதிகாரிகள் உரிய நேரத்தில் வரி செலுத்தவில்லை என்பதற்காக அவரது வீட்டில் சோதனை நடத்தி பெரும் தொகையை எடுத்துச் சென்றனர். அதற்காக கலங்கவில்லை. பாரதிய ஜனதாவின் மதவெறிக் கொள்கைகளை கடுமையாக



சாடினார். ஒரு பிரபலமான தொலைக்காட்சி பேட்டியிலேயே வருமானவரித் துறை மிரட்டல்களுக்கு பணியாது பார்ப்பன இந்துத்துவ சக்திகளின் முத்திரையைக் கிழித்தார்.

ஈழ விடுதலைக்காக மருத்துவர் எழிலன் தலைமையில் நடந்த பரப்புரைப் பயணத்தின் விளக்கக் கூட்டம், கோவையில் கழகத் தோழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சொந்த வேலையாக கோவை வந்திருந்த தோழர் மணிவண்ணன், சுவரொட்டியைப் பார்த்துவிட்டு, கூட்டத்துக்கு வந்துவிட்டார். பங்கேற்று சிறப்பாகப் பேசினார்.

திருப்பூரில் ‘தந்தை பெரியார் திராவிடர் கழகம்’ நடத்திய மாநாட்டில் (2005, அக்.1 மற்றும் 2 தேதிகளில்) - அக்டோபர் 2இல் ‘குடிஅரசு’ 1996’ தொகுப்பை தோழர் ஆர். நல்லக்கண்ணு வெளியிட, முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு தோழர் மணிவண்ணன் உரை நிகழ்த்தியபோது, கொட்டும் மழையிலேயே மேடையில் அமர்ந்திருந்தார். குடை பிடிக்க வந்தவர்களை போகச் சொல்லிவிட்டார். அந்த நிகழ்ச்சியில், “திரைப்படத் துறையில் சேருவதற்கு முன்பு இருந்ததைப் போலவே நான் இப்போதும் இருக்கிறேன். சினிமாவை வைத்துக் கொண்டு செல்வாக்குப் பெறவேண்டும் என்று நான் நினைத்திருந்தால் இந்த மேடைகளை நோக்கி நான் வந்திருக்க மாட்டேன்... நினைத்திருந்தால் நான் அரசியலுக்குப் போயிருக்க முடியும். ஆனால், அது என் நோக்கமல்ல. நான் பெரியாரை நோக்கித்தான் வந்தேன். பெரியார் மட்டும் இருந்திருக்கவில்லையானால், நான் மாடு மேய்த்துக் கொண்டிருந்திருப்பேன். அல்லது டாலர் சிட்டியான இந்த திருப்பூரில், அதிகபட்சமாக ஒரு பனியன் நிறுவனத்தில் வேலை பார்த்திருப்பேன். அவ்வளவுதான்” என்று உளம் திறந்து பேசினார்.

சூலூரில் பிறந்த இயக்குனர் மணிவண்ணனின் தந்தை பெயர் சுப்ரமணிய (தேவர்). அவர் தி.மு.க. காரர். அதனால் மணிவண்ணனுக்கு பெயர் சூட்டியவரே கலைஞர் கருணாநிதி தான். மணிவண்ணன் தான் பிறந்த ஜாதித் தலைவர்களை நோக்கி ஓடியவரல்ல; ஜாதி மறுப்பு திருமணம் செய்தவர். அவர் காதலித்து திருமணம் செய்த பெண் ஒரு பார்ப்பனர். தனது மகள் ஜோதிக்கு சுயமரியாதை, ஜாதி மறுப்பு திருமணத்தை செய்தவர். பொதுவுடைமை இயக்கத்திலும், மார்க்சிய லெனினிய கொள்கைகளிலும் ஈடுபாடு கொண்ட தோழர் மணிவண்ணன், ‘தேசிய இனங்களின் விடுதலை’க்கு முன்னுரிமை தரவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் தேசிய இன விடுதலை, ஜாதி எதிர்ப்பு, பகுத்தறிவு, ஏகாதிபத்திய எதிர்ப்பு கருத்துகளை முன் வைக்கும் அனைத்து மேடைகளிலும் பங்கேற்றார். இரண்டு மாதங்களுக்கு முன்பு, சென்னை இக்சா மய்யத்தில் கூடங்குளம் அணுஉலை ஆபத்துகளை விளக்கிடும் குறும்படம் வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் பேசிய தோழர் மணிவண்ணன், கமலகாசனின் விசுவரூபம் படத்தை மிகக் கடுமையாக சாடினார். சக கலைஞன் என்பதற்காக அவர் தயக்கம் காட்டவில்லை. “நீ ஹாலிவுட் தரத்தில் படம் எடு; அது உன் விருப்பம். நாங்கள் அதை எதிர்க்கவில்லை. ஆனால், ஹாலிவுட் அரசியலை இங்கே திணிக்காதே. இந்த எதிர்ப்பைப் பதிவு செய்யவே இங்கு வந்தேன். இல்லை என்றால் எனக்கு தூக்கமில்லாமல் போய்விடும்” என்று பேசினார் அவருடன் ஒரே சிந்தனை அலைவரிசையில் பயணித்து, திரையுலகில் ‘இரட்டையர்களாக’ கொள்கை சிறகடித்து பறந்த நடிகர் சத்யராஜ் அவர்களுக்கு மணிவண்ணன் முடிவு மாபெரும் இழப்பு. நடிகராகவும், இயக்குனராகவும் புகழ் சேர்த்த இந்த மக்கள் கலைஞன், இயக்கங்களின் தோழர்களாக தன்னை அடையாளப்படுத்துவதிலேயே பெருமையடைந்தார் என்பதால், இவர் நடிகர், இயக்குனர் என்ற எல்லைகளையும் விஞ்சி நின்ற தோழர்.

தமிழ்த் திரையுலகின் வரலாற்றில் கொள்கை அடையாளங்களைப் பதிவு செய்த விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நடிகர் வரிசையில் தோழர் மணிவண்ணனுக்கு உறுதியான இடம் உண்டு. 59வயது காலமே வாழ்ந்து விடைபெற்றுக் கொண்ட இந்த மகத்தான கலைஞனுக்கு திராவிடர் விடுதலைக் கழகம் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறது. மணிவண்ணன் முடிவெய்தி விட்டார்; மணிவண்ணன் வாழ்க!

*குறிப்பு: தோழர் மணிவண்ணன் முடிவெய்திய செய்தி அறிந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் தோழர்களோடு 15ஆம் தேதி பிற்பகல் 3 மணியளவில் அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினர். அன்று மாலை காஞ்சி மாவட்டம் மறைமலை நகரில் நடந்த கழகப் பொதுக் கூட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப் பட்டது.*

**– ஆசிரியர்**

# இயக்குநர் இமயமல்ல; சிறுமையின் இமயம்

இயக்குநர், நடிகர் தோழர் மணிவண்ணன் முடிவெய்தியதற்கு முதல் நாள் வெளிவந்த ‘ஆனந்தவிகடன்’ வார ஏட்டில், ‘இயக்குநர் இமயம்’ என்ற பட்டப் பெயரால் அழைக்கப்படும் பாரதி ராஜா, நடிகர் மணிவண்ணன் பற்றி மிகவும் தரம் குறைந்த கீழ்மையான தனது அகம்பாவத்தை வெளிப்படுத்தக்கூடிய கருத்துகளை வெளியிட்டுள்ளார். தனது வீட்டு வாசலில் தினமும் வந்து சலாம் போட்டவன் என்றும், அவரது திருமணத்துக்கே இவர்தான் நகை வாங்கிக் கொடுத்ததாகவும், பிச்சைக்காரனாக திரிந்தவனுக்கு அரண்மனை சோறு போட்டவன், ஆனால், அவர் பிச்சைக்கார சாப்பாட்டை நோக்கியே ஓடினார் என்றும், ஒருமையில் சாக்கடையை பேனாவில் நிரப்பி எழுதியுள்ளார்.

இந்த தரம் கெட்ட எழுத்துகளை பாரம்பர்யமிக்க ‘ஆனந்தவிகடன்’ எப்படி வெளியிட்டது என்பதுதான் நமக்கு வருத்தம். திரை உலகின் ‘ஜாம்பவான்’களாகத் திகழ்ந்த எம்.ஜி.ஆரும், சிவாஜியும்கூட நடிப்பு வாய்ப்புக்காக ஓடி அலைந்தவர்கள்தான். சின்னச்சாமியாக இருந்து, பிறகு பாரதியின் ராஜாவாக்கிக் கொண்ட இந்த மனிதனின் ‘பிளாஷ் பேக்’கும் அப்படித்தானே! ஏதோ, அம்பானி மாளிகையின் 72ஆவது தளத்தில் ஹெலிகாப்டர் தளத்தில் வந்திறங்கும் வாழ்க்கைக்கு உரியவர் போலும், தங்கத் தொட்டிலில் வெள்ளிக் கரண்டியை வாயில் வைத்துக் கொண்டு பூமியில் அவதரித்த இந்த மகான், கலை உலகில் மக்களுக்கு சேவை செய்வதற்காக ‘தியாக அவதாரம்’ எடுத்திருப்பது போலவும் எழுதியிருப்பது அருவறுக்கத்தக்க நாற்றம்!

கிராமங்களில் ஆதிக்க ஜாதியர்கள் வெளிப்படுத்தும் பெண்ணடிமை - போலிப் பெருமைகளுக்கு புனிதம் கற்பித்து, ஜாதி ஒடுக்கு முறைகளை மூடி மறைத்த நபர் தான் ‘கிராமத்திலிருந்து வந்ததாக’ பெருமையடித்துக் கொள்ளும் இந்த முன்னாள் சின்னச்சாமி. (வேதம் புதிது மட்டும் விதிவிலக்கு. அதுகூட இவரது கதை அல்ல. கண்ணன் என்ற பார்ப்பனர் எழுதி, மேடையில் நாடகமாக நடிக்கப்பட்டது)

அண்மைக்காலமாக ஜாதியப் பார்வையில் தமிழர்களை அடையாளம் காணப் புறப்பட்டுள்ள ‘புரட்சியாளர்கள்’ கும்பலில் தன்னையும் இணைத்துக் கொண்டிருப்பவர். சுப. வீரபாண்டியன் எழுதிய ‘பெரியாரின் இடதுசாரி தமிழ் தேசியம்’ நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தர ஒப்புக் கொண்டு, காமராசர் அரங்கிற்கும் வந்து, நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன், ‘கன்னடரான பெரியாரை நான் தமிழனாக ஏற்க மாட்டேன்’ என்று கூறி, மேடையில் பேச மறுத்து வெளியேறியவர். இவர் பிறந்த அதே ‘ஜாதி’ பின்புலத்தில் பிறந்தவர்தான் தோழர் மணிவண்ணன் என்றாலும், ஜாதிப் பகட்டுகளை தூக்கி வீசிய பெருமைக்குரியவர். மணிவண்ணனின் கொள்கை அடையாளப் பெருமைக்கு முன், இந்த முன்னாள் சின்னச்சாமிகள் கால்தூசிக்குக்கூட சமமாக மாட்டார்கள். ‘ஆனந்த விகடனில்’ இதைப் படித்த சராசரி வாசகன்கூட அதற்குள் மறைந்துள்ள ஆணவம் அகம்பாவத்தைப் புரிந்து, இந்த மனிதர்களின் யோக்கியதையை அடையாளம் கண்டு கொண்டு விடுவான். செய்த உதவிகளை பட்டியல் போட்டுக் காட்டி விளம்பரம் தேடுகிற ஆசாமிகள், மனித நாகரிகத்தின் எல்லைக் கோட்டுக்கு வெளியே புறந் தள்ளப்பட்டவர்கள்தான். இவர்கள் இயக்குனர் இமயம் அல்ல; சிறுமைகளின் இமயம்.

**எழுதியது: எவராக இருந்தால் என்ன?**

## ஒரு வினா: ஒரு விடை

***வினா:*** *காஷ்மீர் பல்கலை சட்டக் கல்வித் துறை மாணவர்களிடையே உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி உரையாற்ற வந்தார். தேசிய கீதம் பாடப்பட்டபோது நீதிபதிகள், முக்கிய பிரமுகர்கள் எழுந்து நிற்க, மாணவர்களும் பேராசிரியர்களும் உட்கார்ந்தே இருந்தார்கள். தேசிய கீதத்தை இப்படி அவமதிக்கலாமா?*

***விடை :*** *ஜம்மு காஷ்மீரைப் பொறுத்தவரை தேசிய கீதம் பாடும்போது உட்கார்ந்திருப்பதுதான் மரியாதை. நீதிபதிகளும், பிரமுகர்களும் எழுந்து நின்று அவர்கள்தான் தேசிய கீதத்தை உண்மையில் அவமதித்திருக்கிறார்கள்!*

DATE OF PUBLICATION 19.06.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# அனைத்து மனிதர்களும் ஒரு தாய் மக்களே!

*மனிதர்கள் அனைவருமே நட்சத்திரத்தின் குழந்தைகள் என்று அறிவியல் கூறுகிறது. எப்படி என்பதை எளிமையாக விளக்குகிறது, இந்த அறிவியல் கட்டுரை. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் தோன்றிய ஹைட்ரஜன் அணுக்களின் ஈர்ப்பு விசையினால் ஏற்பட்ட பிணைப்பினால் தான் பிரபஞ்சத்தின் முதல் தலைமுறை நட்சத்திரங்கள் உருவாகின. பல கோடி வெப்பத்தைக் கொண்ட இந்த நட்சத்திரத்தின் உள்ளே, அந்த வெப்பத்தினால் ஹைட்ரஜன் அணுக்கள் இணைந்து ஹீலியம் என்ற தனிமம் புதிதாக உருவாகியது. இந்த இணைப்பில் தோன்றும் ஆற்றல் தான் ஒளியாகிறது. நட்சத்திரங்களுக்குள்ளே தொடர்ந்து பல கோடி ஆண்டுகளாக இந்த இணைப்பு நடந்து கொண்டே இருக்கின்றது.

நட்சத்திரத்திற்குள்ளே இரண்டு ஹைட்ரஜன் இணைந்து ஒரு ஹீலியம் அணு புதிதாக உருவாவதுபோல, கூடவே இன்னும் பல அணுச்சேர்க்கைகள் நடக்கின்றன. புதிதாக உண்டான இரண்டு ஹீலியம் அணுக்கள் இணைந்து 'பெரிலியம்' என்ற தனிமம் உண்டாகிறது. அதோடு நிற்காமல் ஒரு ஹீலியம் அணுவும் ஒரு பெரிலியம் அணுவும் சேர்ந்து உயிர்களுக்குத் தேவையான முக்கியமான தனிமம் 'கார்பன்' உருவாகிறது.

புதிதாக தோன்றிய அணுக்களின் இணைப்பு மேலும் தொடர்கிறது. இரண்டு பெரிலியம் அணுக்கள் இணைந்து நம் உயிரின் ஆதாரமான பிராண வாயு (ஆக்சிஜன்) உருவாகிறது. இரண்டு கார்பன் அணுக்கள் இணைந்து ஒரு மெக்னீசியம் அணு உருவாகிறது. இப்படி பற்பல அணுச் சேர்க்கைகள் நடந்து ஒன்று, இரண்டு என்று தனிமங்களை வரிசைப்படுத்திய அட்டவணையில் உள்ள 26 என்ற எண் கொண்ட இரும்பு வரை நட்சத்திரங்களுக்கு உள்ளே பெருமளவில் உற்பத்தியாகிறது.

நட்சத்திரங்களுக்குள் உள்ள சுமார் கோடி டிகிரி வெப்பத்தில்தான் இந்த அணுச் சேர்க்கைகள் நடக்க முடிந்தது. அறிவியல் வளர்ந்த இந்த காலத்தில் புதிய தனிமங்களை உண்டாக்கும் பணியில் மனிதன் இறங்கி சில தனிமங்களை உண்டாக்கி வெற்றியும் பெற்றுள்ளான். முன்னதாக பூமியில் உள்ள தனிமங்களிலிருந்துதான் அவை உருவாக்கப்பட்டன. சிறிய அளவில்தான் இவைகளை உண்டு பண்ண முடியும். பெருமளவில் பூமியில் இருப்பவை நட்சத்திரங்களில் உற்பத்தியானவை. தனிமங்களின் அட்டவணையில் இரும்பிற்கு மேல் உள்ள தனிமங்களான தங்கம், வெள்ளி, யுரேனியம் போன்றவை உண்டாக, நட்சத்திரங்களில் உள்ள வெப்பத்தைக் காட்டிலும் அதிக வெப்பம் தேவை. அதனால் நட்சத்திரங்களுக்குள் தனிமங்கள் உற்பத்தி, மூடப்பட்ட தொழிற்சாலை போல நின்று விடுகிறது.

பிறகு எப்படி அவை உருவாகின?

(தொடரும்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*சருக்கு ஒரு தந்தி அனுப்பினார். "நீங்கள் எடுத்துள்ள முடிவு தமிழர்களுக்கும் உங்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் தற்கொலைக்கு சமமானது" என்று அந்த தந்தியில் எச்சரித்தார்.*

*1971ஆம் ஆண்டு சேலத்தில் பெரியார் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் இராமன் உள்ளிட்ட இந்து புராணக் கடவுள்கள் கருஞ்சட்டைப் படையால் செருப்பால் அடிக்கப்பட்டன. சூத்திர இழிவைத் திணிக்கும் இந்துமதம், புராணங்களுக்கு எதிராக மானமுள்ளவர்கள் அரங்கேற்றிய சுயமரியாதைப் போராட்டம்! அப்போது, நடந்த பொதுத் தேர்தலில் தி.மு.க.வுக்கு எதிராக பார்ப்பன ஏடுகளும், காங்கிரசும் இதைப் பெரிதுபடுத்தின. ஆனால், தி.மு.க. அமோக வெற்றி பெற்றுவிட்டது. அப்போது முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு பெரியார் ஒரு தந்தி அனுப்பினார். "என் மீதான பழி நீங்கியது. நீங்கள் உலகப் புகழ் பெற்றுவிட்டீர்கள்" இதுவே அந்த தந்தியின் வார்த்தைகள். இப்படி பல வரலாறுகள் உண்டு.*

*அலைபேசி, இன்டர்நெட், இணையதளம் என்ற நவீன தகவல் தொடர்புகள் 160 ஆண்டுகால 'ஆயுளோடு' தந்திக்கு விடை கொடுத்துவிட்டன. விஞ்ஞானத்தின் அடுக்கடுக்கான வளர்ச்சி, பழமைக்கு விடை கொடுத்து வருவது உண்மை தான்.*

*ஆனால், மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போடும் இந்த விஞ்ஞான சாதனைகள் 2000 ஆண்டுகளாக சமூகத்தை அரித்து-அழித்துக் கொண்டிருக்கும் இந்த ஜாதி-தீண்டாமையை மட்டும் நெருங்க முடியவில்லையே, ஏன், என்ற கேள்வியை கேட்காமல் இருக்க முடியவில்லை.*

*'தர்ப்பைப் புல்லும்', 'திதியும்' அதற்கு 'பிராமணோத்தமர்கள்' பெற்றுள்ள 'பேடன்ட்' உரிமையும் ஆங்கில பத்திரிகைகள், 'காக்காய் மகத்துவம்' பற்றி இப்போதும் எழுதுகிற கட்டுரைகளும், 'மாமல்லபுரம் மரக்காணம்', 'உசிலம்பட்டிகளும்', கோயிலின் கர்ப்பகிரகங்களும், உச்சிக்குடுமி மன்றங்களும் விஞ்ஞானங்களின் சாதனைகளையும் விழுங்கி ஏப்பம் விட்டு ஜாதித் தீண்டாமைகளுக்கு உயிரூட்டவே மடைமாற்றம் செய்து வருகின்றன.*

*160 ஆண்டுகாலம் வாழ்ந்து விடை பெறும் பாசத்திற்குரிய தந்தியே! எத்தனையோ மரண செய்திகளைக் கொண்டுவந்த தந்தியே! 'ஜாதி-தீண்டாமை மரணமடைந்து விட்டது' என்ற அந்த மகிழ்ச்சியான சேதியைக் கொண்டு வராமலே மரணித்து விட்டாயே, என்பதுதான் அடியேனின் ஆழ்ந்த கவலை!*

**– கோடங்குடி மாரிமுத்து**

# 'மள்ளர்' வரலாறும் மனு சாஸ்திரமும்!

*"மீண்டெழும் பாண்டியன் வரலாறு" என்ற கே.செந்தில் மள்ளர் எழுதிய 624 பக்க நூலை தமிழ்நாடு அரசு தடை செய்துள்ளது. இந்த நூலில் வரலாறுகள் திரித்துக் கூறப்பட்டுள்ளன என்றும், பசும்பொன் முத்துராமலிங்க தேவர், காமராசர், அழகு முத்துகோன் போன்ற தலைவர்கள் குறித்து தவறான தகவல்கள் இடம் பெற்றிருப்பதால், ஜாதி மோதல்கள் வரும் வாய்ப்புகள் உண்டு என்றும், தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*அப்படியானால் இன்றும் இந்த நாட்டில் பெரும்பான்மை மக்களான 'சூத்திரர்களை', பிராமணர்களின் தேவடியாள் மக்கள் என்று கூறும் மனு சாஸ்திரங்கள் புதிய புதிய பதிப்புகளாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு 'துக்ளக்', 'தினமலர்' ஏடுகள் அதற்கு மதிப்புரை எழுதி பாராட்டி வருகின்றனவே! "பிராமணர்களுக்கு" கலியுகத்துக்காக உருவாக்கப்பட்ட 'பராசர ஸ்மிருதி', 'பிராமணன்' மற்ற ஜாதியாருடன் சேர்ந்து சாப்பிடக் கூடாது என்று கூறுகிறது; அது நூலாக பரப்பப்படுகிறதே!*

*செத்துப் போன மூத்த சங்கராச்சாரி சமூகத்தில் நான்கு வர்ணங்களுக்கும் வெவ்வேறு கடமை உண்டு என்று நியாயப்படுத்தி, "ஒருவர் சமைத்ததை இன்னொருவர் சாப்பிடக் கூடாது; ஒருத்தரோடு ஒருத்தர் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாது" என்று ஏராளமான 'சமூகப் பகைமையை' மூட்டி விடும் "தெய்வத்தின் குரல்" நூல் புதிது புதிதாக அச்சுப் போட்டு சந்தைக்கு வந்து கொண்டிருக்கிறதே! அவைகள் எல்லாம் தடை செய்யப்பட்டுவிட்டனவா?*

*'வர்ணாஸ்ரமத்தை' நியாயப்படுத்தும் இராமாயணங்கள், நாடகமாக நூல்களாக காலட்சேபங்களாக பரப்பப்பட்டுத்தான் வருகிறது. 'நான்கு வர்ணங்களையும் நான்தான் படைத்தேன்; படைத்த எனக்கே இதை மாற்றக் கூடிய அதிகாரம் கிடையாது' என்று 'பகவான் கிருஷ்ணன்' கூறுவதாக எழுதப்பட்டுள்ள பகவத்கீதை போற்றப்படுகிறது; பரப்பப்படுகிறது. பார்ப்பான் தன்னை "பிராமணன்" என்றும் ஏனையவர்களை 'சூத்திரர்'கள் என்றும் அறிவிக்க 'பூணூலை' போட்டுக் கொண்டு வெளிப்படையாக திரிகிறான். இவை எல்லாம் தடை செய்யப்பட்டுவிட்டதா? பார்ப்பன மேல்ஜாதி ஆதிக்கப் பெருமைகளைக் கட்டமைக்கும் நூல்களை அங்கீகரித்துக் கொண்டு 'மள்ளர்கள்' நூலை மட்டும் தடை செய்வது எந்த ஊர் நியாயம் என்று கேட்கிறோம்.*

*அதற்காக ஜாதியத்துக்கு வரலாற்றுப் பெருமை சேர்த்து அதை நியாயப் படுத்தும் இத்தகைய நூல்களை - கருத்தளவில் நாம் நமக்கு உடன்பாடு கிடையாது. இத்தகைய முயற்சிகள் பார்ப்பனியம் கட்டமைத்த 'ஜாதி அடுக்கு' அமைப்புகளை உறுதியாக்கி பார்ப்பனியத்தை வலிமைப்படுத்தவே உதவும் என்பது நமது உறுதியான கருத்து. இது மன்னராட்சி காலமல்ல. உண்மையான மக்களாட்சிக்காக போராடும் காலம். ஜாதி அடையாளங்களை உதறித் தள்ளும் சமத்துவ சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய காலம்! ஜாதிப் பெருமிதம் - மீண்டும் பழமைக்கே இழுத்துப் போகும்.*

பெரியார் கூறுகிறார்:

*"சகோதரர்களே, இனி இந்த மாதிரியான சமூக மாநாடுகளில், சாதி உயர்வு தாழ்வு பற்றிய பேச்சே இருக்கக் கூடாது. மற்ற சாதியார் என்பவர்களுடன் நாம் எப்படிக் கலப்பது? நாம் எவருக்கும் கீழ் ஜாதியல்ல என்கிற தன்மையை எப்படி அடைவது? நமக்குக் கீழும் நமது நாட்டில் எந்த ஜாதியும் இல்லை. நாம் எல்லோருமே சமமே என்கிறதான சமதர்ம நிலையை எப்படி உண்டாக்குவது என்கின்ற காரியத்துக்கே பாடுபடவேண்டும்."* - பெரியார் (1.6.1930 'குடிஅரசு')


# மறைமலை நகரில் 'சாதி ஒழிந்த தமிழ்நாடு' விளக்கக் கூட்டம்

*காஞ்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக 15.6.2013 அன்று மாலை 6 மணிக்கு மறைமலை நகரில் தந்தை பெரியாரின் சாதி ஒழிந்த தமிழ்நாடு விளக்கப் பொதுக் கூட்டம், காஞ்சி மாவட்ட செயலாளர் மு.தினேசுகுமார் தலைமையில் நடைபெற்றது. செ.கு.தெள்ளமிழ்து வரவேற்புரை நிகழ்த்த, ம.டேவிட் பெரியார் (மாவட்ட தலைவர்) முன்னிலையில் தோழர் சமர்பா, நா. நாத்திகன் இணைந்து இனஎழுச்சிப் பாடல்களை பாடினர். அருண்குமார், தபேலா வாசித்தார். சூ.க. விடுதலை செழியன் (மாவட்ட செயலாளர் வி.சி.க.), மல்லை சத்தியா (துணைப் பொதுச்செயலாளர் ம.தி.மு.க.), கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கருத்துரை வழங்கினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரை நிகழ்த்தினார். நிகழ்வின் முடிவில் ரவி பாரதி நன்றியுரை கூறினார்.*

*இயக்குனர் மணிவண்ணன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இரண்டு நிமிடம் மவுனம் காக்கப்பட்டது.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 20th June 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜூன் 27, 2013 | புரட்சி 12 | முழக்கம் 24 | விலை: ரூ.3.00


### மத யாத்திரைகள்–சூழலுக்கு உலை வைக்கும் அதீத திட்டங்கள்

## உத்தரகாண்ட் பேரழிவுக்குக் காரணம் யார்?

***ப**க்தர்களின் புனித யாத்திரையை ஊக்குவிக்க மத அமைப்புகள் உருவாக்கும் திட்டங்களும் சுற்றுச் சூழலுக்கு கேடு ஏற்படுத்தும் அதீதமான வளர்ச்சித் திட்டங்களுமே ‘உத்தரகாண்ட்’ பேரழிவுக்கு அடிப்படைக் காரணம் என்று சுற்றுச்சூழிலியாளர்கள் கூறியுள்ளனர்.*

உத்தரகாண்ட் மாநிலத்தில் கடும் மழையாலும், வெள்ளப் பெருக்காலும், மண் சரிவாலும் இறந்தவர்கள் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருக்கும் என்ற அதிர்ச்சியான தகவல்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. பக்தர்கள் புண்ணிய யாத்திரை மேற்கொள்ளும் “கடவுளின் தேசம்” என்று அழைக்கப்படும் ரிஷிகேஷம், யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார் நாத், பத்ரிநாத் ஆகிய இடங்களும் இங்கேதான் உள்ளன. யோகா குரு ராம் தேவ் நடத்தும் பதஞ்சலியோக பீடமும் இங்கு தான் உள்ளது. ஹெலிகாப்டர்கள் உதவியோடு பக்தர்கள், பொது மக்கள் காப்பாற்றப்பட்டு வருகிறார்கள். இமயமலையைச் சுற்றியுள்ள பகுதிகள் இயற்கை வளம் நிறைந்தவை. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்குரியவை.

பூமி வெப்பமயமாதல், பெரும் நீர்மின் திட்டங்கள், காடுகள் அழிப்பு, மக்கள் குடியேற்றம் போன்ற பிரச்னைகள், இயற்கையின் சூழலியலுக்கு பெரும் பாதிப்பை உருவாக்கி வருகின்றன. மன்மோகன்சிங் தலைமையில் உள்ள ‘கங்கை நதி நீர்ப் படுகை ஆணையம்’ 2011 ஆம் ஆண்டில் உத்தரகாண்டில் கோமுக் என்ற பகுதியிலிருந்து உத்தர் காசி வரை சுற்றுச்சூழல் பாதுகாப்பு இடமாக அறிவித்து, சுற்றுச் சூழலை பாதிக்கும் திட்டங்களுக்கு தடைவிதித்தது. ஆனால், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உத்தரகாண்ட் மாநில முதல்வர் விஜய் பகுகுணா இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து, வளர்ச்சித் திட்டங்களை தடுக்கும் முயற்சி என்று பிரதமரை நேரில் சந்தித்து முறையிட்டார்.

உத்தரகாண்ட் மாநில அரசு, பாகிரதி மற்றும் அலக்நந்தா நதிகளில் மிகப் பெரும் நீர் மின் திட்டங்களை ஆபத்து நேரிடும் என்ற எச்சரிக்கையையும் மீறி நிறுவியுள்ளது. இந்த ஆறுகளில் 42 நீர்மின் நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இப்போது 230 மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஏராளமான இயற்கை வளங்கள் சீரழிக்கப் பட்டன. இதனால் ஏற்படப்போகும் இயற்கைச் சீரழிவுகள் குறித்து 2010 ஆம் ஆண்டு தணிக்கை மற்றும் ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை எச்சரித்தது. இத்திட்டங்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டதால் மண் பிடிப்பு பலவீனமாகி விட்டதைத் தடுக்க புதிய மரங்களை நடுவதில் மாநில அரசு ஆர்வம் காட்டவில்லை என்றும் அறிக்கை சுட்டிக்காட்டியது.

இப்போது ஏற்பட்டுள்ள வரலாறு கண்டிராத இயற்கை சீரழிவு மனிதர்களால் உருவாக்கப்பட்டதே என்று சுற்றுச் சூழல் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். கார்ப்பரேட் நிறுவனங்கள் கனிம வளங்கள் தோண்டுவதற்கு அனுமதித்தது; சுற்றுலா என்ற பெயரில் சொகுசு ஓட்டல்கள் கட்டியது; மின்சாரம் தயாரிக்கும் மெகா மின் திட்டங்கள் ஆகியவையே இந்த ஆபத்துக்குக் காரணம் என்று கூறும் சூழலியவாதிகள் இதைத் தடுக்க இந்த ‘கடவுளின் தேசத்தில்’ பக்தர்கள் குவிவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கருத்து கூறியுள்ளனர். மத யாத்திரைகளும் வளர்ச்சித் திட்டங்களில் காட்டப்படும் அதீதமான செயல்பாடுகளுமே இந்த பேரழிவுக்கு முக்கிய காரணம் என்றும், இவை இல்லாமல் இருந்திருந்தால் சீரழிவுகளை கணிசமாகக் குறைத்திருக்கலாம் என்றும் நிபுணர்கள் கூறுகிறார்கள். (Development fundametalism, combined with religious tourism is eroding ecological heritage)

டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் சூழலியலாளர் மகாராஜ் கே. பண்டிட் என்பவர் ‘இந்து’ ஏட்டில் “சுரண்டலுக்கு எதிராக பழிவாங்கும் இயற்கை” என்ற தலைப்பில் விரிவான கட்டுரையை (ஜூன் 21, 2013) எழுதியுள்ளார். காடுகள் அழிப்பு, பூமி வெப்பமாதல், குடியிருப்புகள் விரிவாக்கம் ஆகிய பிரச்னைகளோடு மத நிறுவனங்களுக்கு இந்த சீரழிவில் முக்கிய பங்கு இருப்பதை சுட்டிக்காட்டுகிறார்:

“இந்தியாவில் சமூக பொருளாதார மேம்பாடுகளோடு தங்களை இணைத்துக் கொண்டுள்ள நவீன மதவாத இயக்கங்கள் இமயமலைப் பகுதியில் குறிப்பிட்ட எல்லைகளையும் மீறி, மிகவும் பேணி பாதுகாக்கப்பட வேண்டிய நுட்பமான பகுதிகளில் பக்தர்களை குவிய வைக்கின்றன. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் அமர்நாத், கேதார் நாத், பத்ரி நாத், கங்கோத்ரி மற்றும் உத்தரகாண்டில் ஹேம்குந்த் பகுதிகளில் பக்தர்கள் கூட்டம் பெருமளவில் திரளுவதால் நதிக்கரை ஓரங்களில் தற்காலிக தங்கும் விடுதிகள் மற்றும் வீடுகளை இந்த மத அமைப்புகள் கட்டுவதால் சுற்றுச் சூழல் பெரும் பாதிப்புக்குள்ளாகிறது.

இமயமலைப் பகுதியில் காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருவதை கீழ்க்கண்ட புள்ளி விவரம் எடுத்துக் காட்டுகிறது. 1970-லிருந்து 2000-த்துக்குள் இமயமலைக் காடுகள் 100 சதவீதத்திலிருந்து 84.9 சதவீதமாக குறைந்துவிட்டன. அடர்ந்த காடுகள் இதே காலகட்டத்தில் 75.4 சதவீதமாக குறைந்து விட்டன. 2100இல் இது 34 சதவீதமாகிவிடும் என்று அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வுகள் கூறுகிறது” என்று அக்கட்டுரையாளர் கூறுகிறார்.

வளர்ச்சித் திட்டம் கூடாது என்பது நமது கருத்து அல்ல. அது இயற்கைக்கும் சுற்றுச் சூழலுக்கும் ஆபத்துகளை உருவாக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. மக்களின் வாழ்வாதாரத்தையும் சுற்றுச் சூழலையும் அழிப்பதில் பன்னாட்டு சுரண்டல் கொள்கைக் கூட்டமான கார்ப்பரேட் நிறுவனங்களின் கனிம சுரண்டலும், மத நிறுவனங்கள் பரப்பி வரும் ‘புண்ணியத் தலங்கள்’ குறித்த அறிவியலுக்கு எதிரான நம்பிக்கைகளும் முக்கிய பங்காற்றி வருவதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மக்கள் விடுதலைக்காக செயல்படும் பெரியார் இயக்கங்கள் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் கவலை கொண்டு செயல்படும் அவசியத் தேவையை கவனத்தில் கொண்டு, இதற்கு எதிரான பன்னாட்டுச் சுரண்டல் மற்றும் மத நிறுவனங்களின் கூட்டுக் கொள்ளையை முறியடிக்க வேண்டியது அவசியமாகிறது.

திருப்பூர் திராவிடர் விடுதலைக் கழக செயலவைக் கூட்டத்தில் இதே கண்ணோட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது திருத்தம்: ராஜபக்சேவுக்கு புதிய நெருக்கடிகள்

*தமிழ்நாட்டில் வெலிங்கடனில் பயிற்சிப் பெறும் இரண்டு சிங்கள ராணுவ அதிகாரிகளை ஆந்திராவுக்கு மாற்றலாம் என்று இந்திய அரசு தெரிவித்த யோசனையை இலங்கை அரசு ஏற்க மறுத்து அவர்களை இலங்கைக்கு திருப்பி அழைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளது.*

*இதற்கிடையே 13ஆவது சட்டத் திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்ய ராஜபக்சே அதை நாடாளுமன்ற தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி காலம் கடத்த திட்டமிட்டுள்ளார். இந்தியாவை அவமதிக்கும் இந்த முயற்சிக்கு இந்திய அரசு அதிருப்தி தெரிவித்துள்ளது. புதுடில்லியில் பிரதமரை சந்திக்க வந்த தமிழ் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற வேட்பாளர்களிடம் இந்தக் கருத்தைப் பதிவு செய்த பிரதமர் அலுவலகம், ஜூலை 8ஆம் தேதி இது குறித்துப் பேசுவதற்கு பாதுகாப்புத் துறை செயலாளர் சிவசங்கரமேனனை கொழும்புக்கு அனுப்புகிறது. கொழும்புவில் நடக்கவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக இந்தியா எச்சரித்துள்ளதாகவும், இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டுவர திட்டமிட்டுள்ள சட்டத்திருத்த நகலை ஆய்வு செய்ய ஹார்டி சிங்பூரி என்ற அதிகாரியை இந்தியா சிறப்பு தூதராக அனுப்பியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. தென்னாப்பிரிக்காவின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் இப்ராகிம், கொழும்பு சென்று, இது குறித்து தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்களிடமும் இலங்கை அரசுக்குமிடையேயும் சமரச முயற்சிகளில் இறங்கியிருக்கிறார். ஜெர்மன், கனடா நாடுகளுடனான இலங்கையின் உறவு சிக்கலுக்கு உள்ளாகி யுள்ளது. ராஜபக்சே அரசை கவிழ்ப்பதற்கு ஜெர்மனிலுள்ள ஒரு அரசு சாரா நிறுவனம் (ஃபிரட்ரிச் நவ்மான் நிறுவனம்) இலங்கை எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து சதி செய்து வருவதாக இலங்கை அரசு குற்றம்சாட்டுகிறது. இதற்கிடையே 13 ஆவது சட்டத்திருத்தத்தை மாற்றும் முயற்சியில் இந்தியாவிடமிருந்து எந்த எதிர்ப்பும் வரவில்லை என்று ராஜபக்சே கூறியுள்ளார். ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டில் கொழும்பு செய்தியாளர் இத் தகவல்களை எழுதியுள்ளார்.*

## வினாக்கள்... விடைகள்...

**வினா:** *இலங்கை இராணுவத்துக்கு இந்தியா பயிற்சி தரவில்லை என்றால், சீனா பயிற்சி அளித்துவிடும். அதனால் தான் இந்தியாவில் பயிற்சி தருகிறோம்.*

– அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்

**விடை :** *அதுவும் நியாயம் தான்! அதனால்தான் ஈழத்தில் இறுதிகட்டப் போரில், தமிழர்கள் படுகொலைக்கு சீனா உதவிடக் கூடாது என்பதற்காக, இந்தியா முந்திக் கொண்டதோ!*

**வினா:** *தமிழ்நாட்டில் மழை பெய்ய ‘வர்ண பகவானை’ வேண்டி யாகங்களை நடத்த, இந்து அறநிலையத் துறை ஆணையிட்டுள்ளது. அறநிலையத் துறை அமைச்சர் யாகத்தில் கலந்து கொள்வார்.*

– செய்தி

**விடை :** *அப்படியே – இதே வேத விற்பன்னர்கள் அமைச்சருடன் அவசரமாக உத்தரகாண்டுக்கு பறந்து போய், அங்கே மழையை நிறுத்துமாறு வர்ண பகவானுக்கு யாகங்களை நடத்தி, மக்களைக் காப்பாற்றினால் ‘கோடி புண்ணியம்’ உண்டாகும்!*

**வினா:** *ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு உரிமையான 370ஆவது பிரிவை அரசியல் சட்டத்திலிருந்து நீக்கிட வேண்டும்.*

– அத்வானி

**விடை :** *அதோடு ஜம்மு-காஷ்மீர் இந்தியாவோடு இணைக்கும் பிரிவையும் சேர்த்து நீக்கிவிட்டால் காஷ்மீர் பிரச்னையே முடிவுக்கு வந்துவிடுமே.*

**வினா:** *நெய்வேலி நிலக்கரி அரசு நிறுவனத்தில் 5 சதவீத பங்குகளை தனியாருக்கு விற்பதை தமிழக கட்சிகள் எதிர்ப்பது அரசியல் லாபத்துக்குத்தான்.*

– அமைச்சர் நாராயணசாமி

**விடை :** *உண்மைதான். பங்குகளை வாங்கும் முதலாளிகள் லாபத்தைப் பார்க்காமல், வெறும் அரசியல் லாபத்தை மட்டும் தமிழர்கள் பார்க்கலாமா? தேசப் பற்றே இல்லாதவர்கள்!*

தலையங்கம்

## ஒரு முற்போக்கான தீர்ப்பு

சென்னை உயர்நீதிமன்றம் – திருமணம் குறித்து வழங்கியுள்ள தீர்ப்பு, விவாத அலைகளை உருவாக்கியுள்ளது. திருமணம் செய்து கொள்ளாமலேயே ஒரு ஆணும் பெண்ணும் கூடி வாழ்ந்து அவர்களுக்குள்ளே பாலியல் உறவு இருக்குமானால், அதையே திருமணமாக அங்கீகரிக்க முடியும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தீர்ப்பை வழங்கியவர் உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.கர்ணன். மதமுறைப்படி திருமணம் செய்து கொள்ளாமலேயே வாழ்ந்த இஸ்லாமிய தம்பதியினருக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்த பிறகு, 1999இல் மன வருத்தத்தால் பிரிந்துவிடுகின்றனர். குழந்தைகளுக்கு பராமரிப்பு செலவை கணவன் வழங்க வேண்டும் என்று பெண் குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். குழந்தைகள் இந்த இணையர்களுக்கு பிறந்தது உறுதியானாலும், இவர்களுக்கிடையே திருமணம் நடந்ததற்கான ஆதாரங்கள் இல்லை என்று கூறி, குடும்பநல நீதிமன்றம் பராமரிப்பு தொகை வழங்க முடியாது என்று தீர்ப்பளித்துவிட்டது. இந்த வழக்கு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டுக்கு வந்தது. நீதிபதி தீர்ப்பில் கீழ்க்கண்ட கருத்துகளை முன்வைத்துள்ளார்.

“ஒரு பெண்ணுக்கு 18 வயதும் ஆணுக்கு 21 வயதும் முழுமையடைந்து, அவர்கள் திருமணம் செய்து கொள்ளாமலே அவர்களுக்குள் பாலியல் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தால், அவர்களை மனைவி கணவனாகவே கருத வேண்டும்.”

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு, திருமணமாகாமலே இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் (mating) இணையர்களுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பை வழங்கியுள்ளது. இப்படி இணைந்து வாழும் இணையர் பிரிந்து, ஆண் மீண்டும் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், இணைந்து வாழ்ந்த பெண்ணின் சட்டப்பூர்வ ஒப்புதல் வேண்டும் என்று தீர்ப்பு வலியுறுத்துகிறது. சமுதாயத்தில் பெண்களை ஆண்கள் தங்களின் உடலுறவுக்குப் பயன்படுத்திக் கொண்டு பிறகு கைவிட்டு ஏமாற்றுவதற்கு இத்தீர்ப்பு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது இதில் அடங்கியுள்ள ஒரு முக்கிய அம்சம். மற்றொன்று, மதச் சடங்குகளோடு திருமணம் நடத்தினால்தான், அது செல்லத்தக்கது என்ற மதவாத பழமைச் சிந்தனைக்கும், “பழக்க வழக்கங்கள்” என்ற சமூகத்தை பின்னோக்கி இழுத்துச் செல்லும் கோட்பாடுகளுக்கும் இத்தீர்ப்பு சரியான அடியைத் தந்துள்ளது.

“தாலி கட்டுவது, மாலை மாற்றுவது, மோதிரம் போடுவது, அக்னி வலம் வருவது அல்லது அரசு அலுவலகத்தில் பதிவு செய்வது போன்றவையெல்லாம் மதச் சடங்குகளைப் பின்பற்றுவதற்கும், சமுதாயத்தைத் திருப்திப்படுத்துவதற்கும் தான் பயன்படுகின்றன. அனைத்து மதச் சடங்குகளையும் பின்பற்றித் திருமணம் செய்த பிறகும், கணவன் மனைவிக்குள் பாலியல் ரீதியில் உறவு இல்லாவிட்டால் அந்தத் திருமணம் சட்டப்படி செல்லாது. எனவே திருமணத்துக்கான ஒரே சட்டப்பூர்வ அங்கீகாரம், பாலியல் ரீதியிலான உறவு மட்டுமே” என்று நீதிமன்றம் கூறியுள்ளது. (Formalities such as tying mangala sutra, exchange of garlands and rings and circulating around matrimonial fire are not a must for valid marriage, but, “to comply with certain religious customs” and “for the satisfaction of the society”)

வேத மந்திரங்கள் முழங்க – முப்பது முக்கோடி தேவர்கள் சாட்சியாக அக்னி வலம் வரும் திருமணங்களே செல்லத்தக்கது என்ற நிலை நாட்டில் ஒரு கட்டத்தில் இருந்தது. திருமண சடங்குகளில் சில விடுபட்டதைக் காரணம் காட்டி, திருமணத்தை செல்லாது என்று நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கிய காலமும் உண்டு. பெரியாரின் சுயமரியாதை திருமண முறை – இந்த புரோகித பார்ப்பனிய சடங்குகளுக்கு விடை கொடுத்ததோடு, புரோகித சடங்கு மறுப்புகளுக்கு சட்டப்பூர்வ ஏற்பும் பெற்றுத் தந்தது.

இப்போது உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு, புரோகித திருமண சடங்குகளே ஒரு திருமணத்தை உறுதி செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை என்று மறுதலித்துள்ளதோடு, சமூகத்தை திருப்திப் படுத்துவதற்கான நடவடிக்கைகளே தவிர உண்மையான திருமணத் துக்கான அவசியத் தேவையல்ல என்ற பெரியாரிய சிந்தனைக்கு ஏற்பு வழங்கியுள்ளதாகவே கருதுகிறோம்.

பெரியார் கூறுகிறார்:

“திருமணம் பெரிதும் சடங்காக, ஒப்பந்தமாக, பதிவாக, சட்டத்திற்குள் அடங்கியதாகச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலை மாறிவிட்டால் திருமணம் என்கிற வார்த்தையே மறந்துபோகும். அதனால்தான், நான் இந்த முறைகூட (சுயமரியாதை திருமண முறை–ஆர்) முடிந்த முடிவல்ல என்று அடிக்கடி சொல்லி வருகிறேன்” (‘விடுதலை’ 16.12.1944)

– என்று கூறிய பெரியார், மேலும் ஆழமாக கீழ்க்கண்ட கருத்தை முன் வைக்கிறார்.

“திருமணத்திற்கு ஒரு கட்டுப்பாடுதான் இருக்க வேண்டியிருக்கிறதே ஒழிய, முறை ஒன்றும் இன்று தேவையில்லை. கட்டுப்பாடே வேண்டாத காலம் வருமென்றால், முறை வேண்டிய காலம் எதற்காக வேண்டியிருக்கும்?” (மேற்குறிப்பிட்ட அதே ‘விடுதலை’)

உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள இத்தீர்ப்பு, பெண்ணுரிமைப் பார்வையிலும், சமுதாயக் கண்ணோட்டத்திலும் ஒரு நல்ல விவாதத்தைத் தொடங்கி வைத்திருக்கிறது என்றே நாம் கருதுகிறோம். ஆனாலும், கணவன் மனைவியாக வாழ வேண்டும் என்பதற்காக ‘பாலியல் உறவை’ கட்டாய முன் நிபந்தனையாக்கும் நீதிபதியின் கருத்துகூட விவாதத்துக்குரியதேயாகும்.

ஆனாலும், உள்ளடக்கத்தில் இது முற்போக்கான பெண்களுக்கு பாதுகாப்பான மத பழமைவாதத்துக்கு எதிரான தீர்ப்பு என்பதே நமது கருத்து.

அக்கம் பக்கம்

## ‘வாங்க, ஒத்திகை பார்க்கலாம்!’

‘ஒத்திகை’ என்றாலே சட்டென்று நினைவில் மின்னலடிப்பது நாடகம்தான்! ஒரு நாடகத்தை மேடையில் அரங்கேற்றுவதற்கு முன், அதற்கான வசனங்களை மனப்பாடம் செய்வதற்கும், காட்சிகளில் நடிக்கும் முறைகளை பயிற்சியாக்கிக் கொள்வதற்கும், நடப்பது ஒத்திகைகள்! நாடகக் குழுவில் பங்கேற்பதும், அதற்கு ஒத்திகைகள் பார்ப்பதும், ஒத்திகைகளுக்குப் பிறகு, நாடகத்தை அரங்கேற்றும்போது அதற்கு மக்களிமிருந்து கிடைக்கும் நேரிடையான பாராட்டுகளும் உண்மையிலேயே மிகவும் குதூகலமானது. மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வைக்கக் கூடியது. அதையெல்லாம் அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும். “கூத்தும் கும்மாளமும்” என்ற சொற்றொடரே அதனால்தான் வந்தது போலும்!

நாங்களெல்லாம்கூட கைதேர்ந்த நடிகர்களாக இருந்தோம் என்று சொன்னால், அதை நீங்கள் நிச்சயமாக நம்பித்தான் ஆகவேண்டும். இன்றைக்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு நண்பர்கள் எல்லாம் ஈழத் தமிழர்கள் விடுதலையை முன்னிறுத்தி நாடகங்களைப் போடுவதற்கு துணிச்சலுடன் களமிறங்கினோம். நாங்கள் எல்லாம் திராவிடர் கழகத்தில் இருந்த காலம்! நாங்கள் நடித்த முதல் நாடகத்துக்கு கதாநாயகனாக பல நாள் விவாதங்களுக்குப் பிறகு ‘கழுதை’யை முன்னிறுத்துவது என்று - எதிர்ப்புகள் ஏதுமின்றி ஒரு முடிவுக்கு வந்தோம். கழுதை என்ற குணச்சித்திர வேடம் தாங்கி நடிப்பது அப்படி ஒன்றும் சாதாரணமானது அல்ல. கழுதை போன்ற முகமூடி துணிக்குள் முதுகை தரைக்கு சமமாக வளைத்துக்கொண்டு இரண்டு பேர் (நான்கு கால்களுக்காக) மணிக்கணக்கில் நின்று கொண்டும் ஓடிக் கொண்டும் நகர்ந்து கொண்டும் இருக்க வேண்டும். நாடகம் எப்போது முடியும் என்று பார்வையாளர்கள் காட்டும் ஆர்வத்தைவிட இந்த நடிகர்கள்தான் மேலும் துடித்துக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு நிமிடமும் புரட்டி எடுக்கும் முதுகுவலி அவர்களுக்குத் தானே தெரியும்! போதாக்குறைக்கு, கழுதை நடிப்பு போதாது; இன்னும் வேகமாக தலையை ஆட்ட வேண்டும்; சுழன்று சுழன்று ஓட வேண்டும் என்று சக தோழர்கள், ஒத்திகைகளில் மேலும் வெறுப்பேற்றுவார்கள்.

மேடைகளில் கழுதை பேசும் வசனங்களை திரைக்குப் பின்னால் இருந்து பேசுவதற்கு பொருத்தமான நபராக நீண்ட விவாதத்துக்குப் பிறகு அடியேனை ஏகமனதாக தேர்வு செய்தார்கள். சுயமரியாதையோடு நானும் சம்மதித்தேன். அதற்கு ஒரு உள் நோக்கமும் உண்டு. வசனங்களை மனப்பாடம் செய்ய வேண்டியதில்லையே; பார்த்தே படித்து விடலாமே!

ஈழத் தமிழ் மன்னன் சங்கிலியன் வரலாற்றை நாடகமாக்குவதற்கு ஒத்திகைகள் நடந்தன. துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு, சங்கிலியனை போர்ச்சுகீசியர்கள் தூக்கிலிடுவதோடு காட்சி முடியும். ஒத்திகையின் போது தூக்கிலிடுவதை ஒத்திகைப் பார்க்க வேண்டும் என்று நண்பர்கள் கட்டாயப்படுத்துவார்கள். பரவாயில்லை ஒத்திகையில் வேண்டாம்; நாடகத்தில் மட்டும் தூக்கிலிட்டால் போதும் என்று இறுதியாக முடிவெடுத்தபோதுதான் நடிகர் ‘சங்கிலியனுக்கு’ உயிரே வந்தது. ஒரு ஊரில் நாடகம் நடந்தபோது, தேனிசை செல்லப்பாவின் உணர்ச்சிகரமான பின்னணிப் பாடலோடு சங்கிலி மன்னன், தனது தாய் மண்ணை வணங்கி மேலே தொங்கும் தூக்குக் கயிற்றை எடுத்து கழுத்தில் மாட்டிக் கொள்ள வேண்டும் என்பது காட்சி. அது வெள்ளைத் திரைக்குப் பின்னால் நிழல் காட்சியாக அமைக்கப்பட்டிருந்தது. இதற்கு கைதட்டல் வரப் போவது நிச்சயம் என்று நடித்த தோழர் மிகவும் நம்பிக் கொண்டிருந்தார். நாங்களும் அதை அப்படியே ஆமோதித்தோம். ஒரு ஊரில் நாடகம் - சங்கிலியன் உணர்ச்சிப் பிழம்பாக நடித்து, தூக்குக் கயிற்றையும் தனது கழுத்தில் எடுத்து மாட்டிக் கொண்டார். உடனே விளக்கு அணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மின்சாரத்தை இயக்கியவர் விளக்கை அணைக்கவில்லை. சங்கிலியன் தூக்குக் கயிற்றை கழுத்தில் மாட்டிக் கொண்டு அப்படியே நின்றிருப்பதைப் பார்த்து, பதறிப் போய் அவரிடம் ஓடி, ‘ஏன் விளக்கை அணைக்கவில்லை’ என்று கோபத்துடன் சத்தம் போட்டோம். அவர் அமைதியாக பதில் சொன்னார், “என்ன சார் பேசுறீங்க, சங்கிலியன் இன்னும் கயிற்றில் தொங்கவில்லையே” என்றார்.

வடமாநிலம் ஒன்றில் (ம.பி. என்ற நினைவு) ‘ராமநவமி’யின்போது ராமன் நாடகத்தில் இறுதிக் காட்சியில் இராமன், இராவணன் மீது அம்புகளை விட, ராவணனோ, சாக மறுத்து கீழே விழாமல் நின்று கொண்டே இருந்தார். நாடக ஏற்பாட்டாளர் ஓடிப்போய் மேடை ஏறி கேட்டபோது, கடந்த ஆண்டு நடித்ததற்கு இன்னும் சம்பளம் பாக்கி இருக்கிறது. அதைத் தந்தால்தான் சாவேன் என்று பிடிவாதமாக மறுத்து விட்டார். இந்த செய்தியை அடிப்படையாக வைத்து, நாங்களும் ஒத்திகைகளோடு நாடகம் நடத்தினோம். ஒத்திகை பார்த்தபோது நாடகம் நன்றாகவே இருந்தது என்று நாடகம், ஒத்திகை இரண்டையும் பார்த்தவர்கள் பாராட்டினார்கள்.

ஒத்திகைகள் இப்போது நாடகங்களுக்கு மட்டும் இல்லை; மத்திய மாநில அரசுகளும்கூட ஒத்திகைகளை அரங்கேற்றி வருகின்றன. ஏதோ கிண்டல் செய்வதாக நீங்கள் நினைத்துவிடக் கூடாது. கடந்த வாரம் காவல்துறை மட்டும் இரண்டு ஒத்திகைகளை நடத்தியுள்ளது. கடல் வழியாக தமிழகத்தில் நுழையும் தீவிரவாதிகளை தடுப்பது எப்படி என்பது குறித்து, தமிழக போலீசாரும், கடலோர பாதுகாப்பு படையினரும், கடற்படையினரும், மத்திய மாநில உளவுப் பிரிவினரும் இணைந்து பாதுகாப்பு ஒத்திகை நடத்தியுள்ளனர்.

இன்னொன்று-பாளையங்கோட்டை மகப்பேறு அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தையை தாயிடமிருந்து திருடிச் சென்று கண்காணிப்புக் காமிரா வழியாக திருடிச் சென்றவர்களைக் கண்டுபிடித்துத் தரும் ஒத்திகையை மாவட்டக் காவல்துறை அதிகாரிகளே நடத்தியிருக்கிறார்கள். நடந்தது ஒத்திகைதான் என்ற உண்மையை குழந்தையைப் பறிகொடுத்த தாயிடம் கூட கூறாமல், இப்படி கதறவிடலாமா என்று அங்கே கூடிய பொது மக்கள் ஆத்திரத்துடன் காவல்துறை அதிகாரிகளைக் கேட்டதாக ‘தினத்தந்தி’ செய்தி வெளியிட்டுள்ளது. “குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் எங்களுக்குப் பயிற்சி; மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம்” என்று காவல்துறை அதிகாரிகள் கூறுகிறார்கள். காவல்துறையின் கற்பனையில் உருவான இந்த ஒத்திகைகள் உண்மையிலேயே குற்றங்களைத் தடுப்பதிலும் வெற்றிப்பெற வேண்டும் என்பதே நமது விருப்பமும்கூட!

இப்படிப்பட்ட நாட்டுக்குத் தேவையான நல்ல ஒத்திகைகளை இன்னும் விரிவுபடுத்தவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்!

உதாரணமாக நாடாளுமன்ற சட்டமன்றங்களை செயல்படவிடாமல்

4 ஆம் பக்கம்

# பெரியாரை குறைகூறுவோருக்கு பேராசிரியர் மருதமுத்து வேண்டுகோள்!

# பெரியாரின் நெருப்பு வார்த்தைகள், தமிழன் சொரணை பெற இப்போதும் தேவைப்படுகிறது

***பெரியாரை குறைகாணப் புறப்பட்டுள்ளவர்களுக்கு பேராசிரியர் மருதமுத்து பதிலளித்து, வேண்டுகோளை முன்வைத்தார்.***

திருக்குறளின் ஆழமான உட்பொருளை ஆராய்ந்து பேராசிரியர் மருதமுத்து எழுதிய திருக்குறள் தமிழ்த் தேசிய அரசியல் நூல் அறிமுக விழா 13.6.2013 வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் கும்பகோணம் பவளம் அரங்கத்தில் மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது.

விழாவிற்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் பனிமயமேரி ராஜ் தலைமையேற்று நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இரா. ஆன்டனி அசோக் வரவேற்புரையாற்றிட சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சாய் கிருஷ்ணன் தொடக்க உரையாற்றினார். பேராசிரியர் மருதமுத்துவின் தமிழ்த் தொண்டினை வாழ்த்தி, கும்பகோணம் வழக்கறிஞர் சங்கத் தலைவர் சங்கர், சமூக சிந்தனையாளர் ஜெயக்குமார், சி.பி.அய். நகரப் பொருளாளர் வழக்கறிஞர் ஜார்ஜ், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி செயலாளர் வளவன், ஆசிரியர் பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நூலின் சிறப்பான கருத்துக்களை ஆராய்ந்து குடந்தை மூத்த வழக்கறிஞர் கீதாலயன், நெய்வேலி தாய்த் தொண்டு மைய நிறுவனர் தாய், ராசி ஜெகதீஸ்வரன், மதிமுக மாநில தணிக்கை குழு உறுப்பினர் முருகன், விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சி நிறுவனத் தலைவர் குடந்தை அரசன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

பேராசிரியர் மருதமுத்து, ‘திருக்குறள் தமிழ்த் தேசிய அரசியல்’ நூலினை அறிமுகப்படுத்தி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

இறுதியாக நூலாசிரியர், பேராசிரியர் மருதமுத்து ஏற்புரையாற்றினார். அவர் தனது உரையில் கூறியதாவது:

“திருக்குறள் தமிழ்த் தேசிய அரசியல் நூல் கடந்த மே தினம் அன்று இடிந்தகரையில் கூடங்குளம் அணுஉலை எதிர்ப்புப் போராளி உதயகுமார் தலைமையில் முதன்முறையாக வெளியிடப்பட்டது. அவர் தனது வாழ்த்துரையில், தமிழ் சமுதாயத்திற்கு தொண்டாற்றிட மிக சரியான நேரத்தில் மிக சரியான நூல் வெளி வந்திருக்கிறது என பாராட்டி, இந்த நூல் மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டும் என கோரிக்கையை வைத்தார். மக்கள் மத்தியில் செல்ல வேண்டுமென்றால் ஒரு கொள்கை பிடிப்புள்ள இயக்கத்தின் மூலமாகத்தான் முடியும். அந்த வகையில் இந்த நூலினை கொளத்தூர் மணியினை வைத்து வெளியிடுகிறேன். இந்தக் கருத்துக்கள் அவர் மூலமாக மக்கள் மத்தியில் சென்றடையும் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. தந்தை பெரியாரிடம் நெருக்கமாக பழகுவதற்கு வாய்ப்பில்லாதவன் நான். அவரைப் பற்றி நிறைய நூல்கள் மூலம் புரிந்து வைத்திருக்கிறேன். அந்த புரிதல் அடிப்படையில், **பெரியாருடைய எல்லா விதமான குணநலன்களுக்கும் ஒரு தொடர்ச்சியான கொள்கைகளை முன்னெடுக்கிற இயக்கமாக கொளத்தூர் மணி தலைமையிலான இயக்கம் தமிழகத்தில் இன்றைக்கு மிக சிறப்பாக செயல்படுகிறது.**

இன்றைய காலகட்டத்திலும் பெரியாரும், அவர் கொள்கைகளும் தமிழகத்திற்கு மிகவும் தேவைப்படுகிறது. பெரியாரைப் பற்றி மக்களிடம் விளக்குவதற்கு இன்றைக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பணிக்கு, பெரியார் கொள்கைகளை சரியான முறையில் மக்களிடம் கொண்டு சேர்ப்பதுதான் உண்மையான தொடக்கம் ஆகும். அந்தப் பணியினை திராவிடர் விடுதலைக் கழகம் தொண்டுள்ளத்தோடு செய்து வருகிறது.

தமிழிலுள்ள வல்லமைகளை, பெருமைகளை பேசிப் பேசியே இன்றைக்கு தமிழ்நாடு பாழாய் போய்விட்டது. ஏனென்றால் பெரியார் சொன்ன பகுத்தறிவும், மான உணர்ச்சியும் ஒற்றுமையும் இன்றைக்கு கிடையாது. பெரியார் கருத்துக்களை நாம் நேர்மையோடு பரப்பாதது தமிழுக்கு நாம் செய்யும் இழுக்கு ஆகும். தமிழுக்கு பெருமை சேர்க்க வேண்டுமென்றால் தமிழ் மூலம் பகுத்தறிவை பெற வேண்டும். மானத்தை பெறவேண்டும். ஒற்றுமையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தமிழ் வளரும், தமிழனும் வாழ்வான்.

**பெரியாரிடம் குறை காண்போர்**

திருவள்ளுவர் தன் குறளில் தமிழ் தமிழ் என்று ஒரு வார்த்தைகூட சொன்னது கிடையாது. அவர் தனது குறள் மூலம் தமிழை, தமிழனை, இன்றும் வளர்த்துக் கொண்டு இருக்கிறார். எனவே, தமிழர்களே! தமிழ்தான் எல்லாம். தமிழ் தான் என் உயிர் மூச்சு என்று வெறுமையாக சொல்லிக் கொண்டிருக்காமல் பெரியார் எழுதிய புத்தகங்களை வாங்கிப் படியுங்கள். பெரியாரின் கருத்துக்களை உணர்ந்து செயல்படுங்கள். அப்போதுதான் தமிழ் வளரும். மானத் தமிழ் வளரும். மனிதநேயத் தமிழ் வளரும். எதற்கு இதை நான் சொல்கிறேன் என்றால், இப்போது சிலர் பெரியாரையே குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவரிடம் கொள்கைகளை கற்றுக் கொள்ள முதலில் கட்டுப்பாடு வேண்டும். நேர்மையாக சிந்திக்க வேண்டும். அதை விட்டுவிட்டு பெரியாரை குறை சொல்வது என்பது உலகத்தையே மாசுபடுத்துவதற்கு சமமானது.

ஆன்மிகத்தையெல்லாம் பார்க்க வேண்டாம். மருதாசல அடிகளாரைப்போல பாருங்கள். குன்றக்குடி அடிகளாரைப்போல பாருங்கள். அவர்கள் கடவுளை நம்பினார்கள். ஆனால், கடவுள் இல்லை என்று சொன்ன பெரியாரைப் போற்றினார்கள். உங்களுக்கு ஏன் அந்த அணுகுமுறை வரவில்லை. பெரியாரைப் பற்றி நிறைய கற்றுக் கொள்ளுங்கள். கற்பதற்கு முடிவு இல்லை. பெரியாரைப் பற்றி முழுமையாக அறியாமல் அவரை குறை சொல்லுவதை முதலில் விட்டு தமிழனின் விடுதலையை நோக்கி பயணப்படுங்கள்.

தமிழர்கள் அனைவரும் ஒன்றுசேர வேண்டும் என்று சொல்கிறவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன். முதலில் உங்களிடம் ஒற்றுமை இல்லையே! அது ஏன் என்று என்றைக்காவது சிந்தித்தீர்களா? தமிழர்களுக்கு என ஒரு முன்னணி படை ஒன்று உருவாக வேண்டும். 7 கோடி தமிழனாக திடீரென்று ஒன்றாக முடியாது. 70 ஆயிரம் பேர், அல்லது ஒரு 7 ஆயிரம் பேர் உருவாக முடியாதா? **கொளத்தூர் மணி ஒரு விடுதலைப் படையை உருவாக்கி பயிற்சிக் கொடுத்தார். அது ஒரு ஆயுதப்படை. ஆனால், இங்கு அப்படிப்பட்ட ஒரு கொள்கைப் படை உருவாகாமல் போனதற்கு என்ன காரணம் என இன்றைக்கு பெரியாரை குறை கூறுகிறவர்கள் ஒரு நாளாவது யோசித்துப் பார்த்தார்களா?**

அந்த படை உருவாவதற்கு உங்களுக்கு இந்த நாட்டில் என்ன தத்துவங்கள் இல்லை. பெரியார் கொள்கை இருக்கிறது. தமிழர் வாழ்வியல் நூல் திருக்குறள் இருக்கிறது. நாம் ஏன் முயற்சிக்கவில்லை. குறைகள் மட்டுமே பெரிதாகக் கூறி உருப்படாமல் போய்க் கொண்டிருக்கிறோமே, சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பெரியாரை பொருத்தவரையில் அவருக்கு ஒன்று தெரியவில்லை என்றால் அதை உடனடியாக அறிவுணர்வோடு, நேர்மையோடு ஒத்துக் கொள்வார். ஏதேனும் ஒரு கருத்தை தவறாக சொல்லியிருந்தால் யாராவது அதை மாற்றி சொன்னால் அப்படியா? ஆதாரமிருக்கிறதா! எனக் கேட்டு உடனடியாக அதை மாற்றியும் கொள்வார். அவர்தான் பெரியார். மிகப் பெரிய பண்பாளர் ஆவார். ஆனால், அவரைப் பற்றிக் குறை சொல்லும் நம்மிடம் அத்தகைய அறிவு நாணயம் இருக்கிறதா? இல்லை. அத்தகைய உயர்ந்த பண்பு நலன்களை நாம் கடைபிடிக்கிறோமா? இல்லை. மாறாக, அவரை இழிவுபடுத்துவதில் முன்னிலையில் இருக்கிறோம்.

பெரியாரிடம் குறை இருக்கிறது என்று சொல்லி சொல்லியே, அதை யோக்கிய சிகாமணிகளாக விமர்சனம் செய்கிறோம் என்ற போர்வையில் அடியறுப்பு வேலையைத்தான் இன்றும் நம்மில் பலரும் செய்து கொண்டிருக்கிறோம். இது தமிழனின் கெட்ட குணம். இதில் நமக்கும், தமிழுக்கும் பெருமையில்லை. இதை நாம் முதலில் உணர வேண்டும். உடனே விமர்சனம் செய்பவர்கள் நாம் பக்குவமாக பெரியார் கொள்கைகளை மறு ஆய்வு செய்கிறேன் என்று சொல்லுவார்கள்.

நான் கேட்கிறேன், நீங்கள் யார் ஆய்வு செய்ய? தமிழ் இனம் மான உணர்வு பெற உரிமைகளை மீட்டெடுக்க, முதலில் நீங்கள் என்ன செய்தீர்கள்? அதை மட்டும் வசதியாக விட்டுவிட்டு விமர்சனம் மட்டும் செய்ய உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?

பெரியாரை நான் பார்த்தபோது எனக்கு மிகப் பெரிய பயம் வந்தது. காரணம், அவருடைய பேச்சுகள் மிகக் கடுமையாக இருக்கும். பகுத்தறிவை முன்னிறுத்தி அறிவு வானத்தில் சிறகடித்துப் பறந்தார். அவருடைய வார்த்தைகளில் நெருப்புப் பறக்கும். இருந்தாலும் அவருடைய ஒவ்வொரு சொல்லும் நிதானமாகவும், நேர்மையாகவும், அறிவு கூர்மையுடனும் இருக்கும்.

பெரியார் தமிழகத்தில் உறங்கிக் கிடந்த தமிழினத்தையே அடித்து எழுப்பினார். காரணம், அன்றைக்கு தமிழனின் தூக்கம் சாதாரண தூக்கமல்ல. அபின் அடித்தவன்போல, கஞ்சா குடித்தவன் போல அடிமைத்தனத்தில், பிற்போக்குக் கருத்துகளில், மூடத்தனங்களில் மூழ்கிக் கிடந்தான். அவனை அடித்து எழுப்பி மான உணர்வை ஊட்டியது பெரியாரின் கைத்தடி மட்டும் தான்.

ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை? மீண்டும் தமிழன் தன் பழைய நிலைக்கே போய்விட்டான். சாதிய வெறியை தூக்கிப் பிடித்து, மத போதையில் மூழ்கிக் கிடந்து, கீழே கொட்டிய நெல்லிக்காய் போல ஒற்றுமை இல்லாமல் பிரிந்து கிடக்கிறான். இவனை மீண்டும் எழுப்புவதற்கு நமக்கு இன்றும் பெரியார் தேவைப்படுகிறார். ஏனென்றால் பெரியார் ஒரு சகாப்தம். பெரியார் ஒரு இமயம். பெரியார் ஒரு காலத்தின் கட்டாயம் அவருடைய நெருப்பு வார்த்தைகள் தமிழன் மீண்டும் சொரணை பெற நமக்குத் தேவைப்படுகிறது.

அத்தகைய உணர்வுகளை தமிழகத்தில் மீண்டும் எழுப்ப முயற்சிக்காமல் பெரியாருக்கு மறு விளக்கம் தருகிறேன் என்று சொல்லி, அவருடைய மைய கருத்துக்களை, அவருடைய போராட்ட உத்திகளை, அவருடைய போர் திட்டங்களையெல்லாம் மாற்றி அமைத்து விடாதீர்கள்.

நல்லவர்களே சில பேர் இன்றைக்கும் அதைத் தான் செய்கிறார்கள். எனவே அருள்கூர்ந்து கேட்டுக் கொள்கிறேன், வரலாற்றின் உண்மையாக புரிந்து கொள்ளுங்கள். வரலாற்றின் திரிபுவாதங்களை செய்யாதீர்கள். பெரியார் கொள்கைகளை முன்னெடுத்து, தமிழர்களை ஒன்றுபடுத்துங்கள். ஏனென்றால், இன்றைக்கு நம் இனத்தின் எதிரிகள் வலுப்பெற்று வருகிறார்கள். அவர்களின் சதிகளை முறியடிக்க பெரியாரின் கருத்துகளையும், திருக்குறள் கருத்துகளையும் உங்கள் வாழ்வின் நெறிகளாகக் கொள்ளுங்கள். அதற்கான போராட்ட களங்களை அனைவரும் ஒன்று சேர்ந்து உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள சூளுரைப்போம்” என்று உரையாற்றினார்.

**செய்தி: மன்னை காளிதாசு**

## ஏற்காட்டில் கழகத்தினருக்கு முதல் கட்ட பயிற்சி முகாம்

சேலம் மாவட்டம் ஏற்காடு வெள்ளக்கடை பகுதியில், 2013 ஜுன் 8, 9 ஆகிய இரண்டு நாட்கள், ஏற்காடு பகுதி புதிய தோழர் களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு, திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக நடத்தப் பட்டது. பெரியார் இயக்கத்தின் இன்றைய தேவை பற்றி திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பாலின சமத்துவம் குறித்து பூ.மணிமாறன், பெரியார் இயக்க போராட்டங்கள் பற்றி கணியூர் தமிழ்ச் செல்வன், இட ஒதுக்கீடு பற்றி கொளத்தூர் குமார், ஜாதிய பாகுபாடுகள் என்ற தலைப்பில் மேட்டூர் ஜஸ்டின்ராஜ், மந்திரமல்ல தந்திரமே என்ற தலைப்பில் காவை இளவரசன் ஆகியோர் வகுப்பெடுத்தனர். மாநில அமைப்புச் செயலாளர் தி.தாமரைக்கண்ணன், சேலம் மண்டல அமைப்புச் செயலாளர் அ.சக்திவேல், மாவட்டத் துணைத் தலைவர் ஏற்காடு பெருமாள் ஆகியோர் உடன் இருந்து முகாமை வழிநடத்தினர்.

## கழகத் தலைவர் பங்கேற்ற அணுஉலை எதிர்ப்பு கருத்தரங்கம்

16-06-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணியளவில், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நாடார் திருமண மண்டபத்தில் “வேண்டாம் அணு உலை” என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பாக நடைபெற்ற இந்த கருத்தரங்கிற்கு மாவட்டச் செயலாளர் மா.வைரவேல் தலைமை தாங்கினார். அணு உலைகளின் அபாயங்கள் பற்றி, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு மாணவர் கழக தோழர் வெ.மோகன் வரவேற்புரை ஆற்றினார். மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன், தி.வெ.செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு மாணவர் கழக தோழர் பிரகாசு நன்றி கூறினார்.

DATE OF PUBLICATION 26.06.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM
TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# அனைத்து மனிதர்களும் ஒரு தாய் மக்களே! (3)

*மனிதர்கள் அனைவருமே நட்சத்திரத்தின் குழந்தைகள் என்று அறிவியல் கூறுகிறது. எப்படி என்பதை எளிமையாக விளக்குகிறது, இந்த அறிவியல் கட்டுரை. ( சென்ற இதழ் தொடர்ச்சி )*

அந்த முதல் தலைமுறை சூரியன் தன் வாழ்நாட்கள் முடிந்தபின் அதி பயங்கரமாக வெடித்துச் சிதறும். பிரபஞ்சத்தில் அது மிக அற்புதமான காட்சியாகும். சூப்பர் நோவா என்று கூறுவர். இதனை, அப்படி வெடிக்கும்போது உண்டாகும் அதி பயங்கர வெப்பத்தில் இரும்பு அணுக்களும் அணுச் சேர்க்கையால் இணைந்து இரும்பிற்கு மேல் அணு எண் கொண்ட யூரேனியம், தங்கம், வெள்ளி போன்ற மற்றெல்லா தனிமங்களும் உண்டாகி, நட்சத்திரம் வெடிக்கும்போது, வாயுக்களாக பிரபஞ்சத்தில் தூக்கி எறியப்பட்டன. பல கோடி மைல்கள் பரந்து விரிந்து கிடக்கும், பார்க்க பரவசமூட்டும் இந்த வாயுக் கூட்டங்களை 'நேபுல்லா' என்றழைப்பர்.

இந்த நேபுல்லா என்ற வாயுக் கூட்டத்தில் நட்சத்திரத்தில் உருவான எல்லா தனிமங்களுடன், பிரபஞ்சத்தில் ஏற்கனவே உள்ள ஹைட்ரஜன் வாயுவும் கலந்திருக்கும். பிரசவ மருத்துவமனையில் பெண்கள் அனுமதிக்கப்படும்போது எல்லோருக்கும் தெரியும். குழந்தைகள் பிறக்கப் போகின்றன என்று. அதேபோல பிரபஞ்சத்தில் காணும் இந்த நேபுல்லா என்ற வாயுக் கூட்டங்களை காணும் விண்வெளி ஆய்வாளர்களுக்கு அந்த வாயுக் கூட்டத்தில் 'நட்சத்திரங்கள்' பிறக்கப் போகின்றன என்று தெரியும்.

காரணம், ஈர்ப்பு விசை தன் பணியை அங்கு துவக்கும் ஹைட்ரஜன் அணுக்கள் ஒன்றை ஒன்று இழுத்து, வெப்பமும் அடர்த்தியும் அதிகமாகி, புதிய அடுத்த தலைமுறை நட்சத்திரம் நமது சூரியனைப் போல உருவாகும். நட்சத்திரன் தோற்றம் ஒரு அதி பயங்கர வெடிப்புடனும், அதிர்வுடனும் நடக்கும். புதிதாக தோன்றிய நட்சத்திரத்தைச் சுற்றி, தூசுகளும், வாயுக்களும் வெடிப்பினால் எறியப்பட்டு இவைகள் அந்த நட்சத்திரத்தை சுற்ற ஆரம்பிக்கும். அவைகளும் ஈர்ப்பு விசையால் இணைந்து, முதலில் சிறு சிறு பாறைகளாக உருவாகி, அந்தப் பாறைகள் மேலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து, அந்த நட்சத்திரத்தைச் சுற்றிவரும் கோள்களாக உருவாகும். அந்த தூசுக்களிலும், வாயுக்களிலும் தான் எல்லா தனிமங்களும் உள்ளனவே. அதனால்தான் அந்தக் கோள்களில் ஒன்றான நமது பூமியிலும் அனைத்து தனிமங்களும் கிடைக்கின்றன. சூரியனைச் சுற்றி வரும் கோள்கள் தவிர மற்ற பாறைகளிலும் இந்த தனிமங்கள் இருக்கும். ஏனென்றால், சூரியன் உருவாகும்போது உண்டான கோள்களைப் போல தோன்றியது தான் அந்த பாறைகளும். நமது சூரிய குடும்பத்தைச் சுற்றி வரும் அந்தப் பாறைகளில் தங்கம் உட்பட பல தனிமங்கள் இருப்பதை கண்டுபிடித்துள்ளனர்.

சமீபத்தில் ஒரு கோள் கண்டுபிடிக்கப்பட்டது. பூமியைவிட இரண்டு மடங்கு பெரிய அந்தக் கோள் முழுவதும் வைரங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஒரு தடவை சென்று வந்தால், உலகத்தின் முதல் கோடீஸ்வரன் ஆகிவிடலாம். சிக்கல் என்னவென்றால், அந்த கோள் நாற்பது ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. எப்படியாவது முயற்சி செய்து அங்கே போய் சேர்ந்துவிடலாம் என்று நினைப்போருக்கு ஒரு மோசமான தகவல் என்னவென்றால் அங்கு வெப்பம் சுமார் 4000 டிகிரி வரை உள்ளது என்பதுதான்.

பூமியில் உள்ள சத்துக்களை எடுத்து விளையும் பயிர்களைத் தின்று வளரும் மிருகங்களையும், அந்த மிருகங்களையும் பயிர்களையும் உண்டு வளரும் நாமும் அடிப்படையில் நட்சத்திரத்தில் இருந்து வந்தவர்கள்தான். இனி யாராவது நம்மைப் பார்த்து நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டால், எந்தவித ஐயமுமின்றி 'நான் நட்சத்திரத்திலிருந்து வருகிறேன்' என்று கூறலாமல்லவா? நட்சத்திரத்தின் உள்ளே உற்பத்தியான நாம் எல்லாம் அதன் பிள்ளைகள் அல்லவா? நாம் அனைவரும் ஒரு தாய் மக்களல்லவா? ஒரு காலத்தில் ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேறி, புவியின் பல பகுதிகளுக்கு பரவிச் சென்ற மனிதம், ஒரு மாபெரும் குடும்பம் என்பதை இந்த அறிவியல் உண்மை மீண்டும் நிரூபிக்கின்றதல்லவா? ஒரு தாய் மக்களிடையே ஜாதி, மதம், மொழி, இனம், நாடு என்ற பெயரில் கலவரங்களும், போர்களும் வேண்டுமா?

ஒரு காலத்தில் குகைகளில் கற்களை மட்டுமே ஆயுதமாய் உபயோகித்து வாழ்ந்த காட்டுமிராண்டிகளின் வாழ்க்கையைப் பார்த்து நாம் கேவலமாக இப்போது சிரிக்கின்றோம். அவர்கள் அறியாமல் செய்த தவறு அது. நாகரிகம் நன்கு வளர்ந்த இந்த காலத்தில் ஜாதி, மதம், மொழி, இனம், நாடு என்ற பெயரில் சண்டையிடும் நம்மைப் பார்த்து நம் வருங்கால சந்ததியினர் 'படித்த முட்டாள்கள்' எனக் கூறி எள்ளி நகையாடுவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

– **ஜெயச்சந்திரன்** *('கீற்று' இணையதளத்திலிருந்து)*

**திருத்தம் :** கடந்த இதழில் வெளிவந்த 'தோழர் மணிவண்ணன் விடைபெற்றார்' செய்தியில் அவர் முடிவெய்திய நாள் '2013 ஜூன் 15' என்பதற்கு பதிலாக 'ஜூலை 15, 2009' என்று தவறாக வெளிவந்துவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம் – ஆர்.

## மருத்துவ வளாகத்தில் பெரியார் சிலை: கொளத்தூர் மணி திறந்தார்

9.6.2013 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 9 மணியளவில் சேலம் வின்சென்ட் பகுதி கிழக்குத் தெருவில், மருத்துவர் வீ.மு.சசிகுமாரின் "சரோ ஹோமியோ கேர்" மருத்துவ வளாகம் திறப்பு விழா நடைபெற்றது. வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த பெரியார் சிலையை, கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். ஓமியோ மருத்துவத்தின் முன்னோடி சாமுவேல் ஹானிமன் சிலையை, அரசு ஓமியோ மருத்துவக் கல்லூரி முன்னாள் முதல்வர் பேராசிரியர் மருத்துவர் எஸ்.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். வளாகத்தின் உள் அரங்குகளை திரைப்பட பாடலாசிரியர் பாவலர் அறிவுமதி, திரைப்பட இயக்குநர் தங்கர்பச்சான், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், எழுத்தாளர் அஜயன்பாலா, சிவராஜ், மருத்துவக் கல்லூரிகளின் நிர்வாக இயக்குனர் மருத்துவர் எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற வாழ்த்தரங்கம், நிகழ்வில் ஈசன் குழுமங்களின் நிர்வாக இயக்குநர் டி.இளங்கோ, ஸ்ரீ செல்வம், மருத்துவமனை இயக்குநர் பேராசிரியர் மருத்துவர் எஸ்.ராஜா முதலானோரும் உரையாற்றினர். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார்.

# ஆராய்ச்சி மாணவர்களின் ஜாதி வெறி

***தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர்கள் சிலம்பரசன், சிவக்குமார் விடுத்துள்ள அறிக்கை:***

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலுள்ள ஆராய்ச்சி மாணவர்கள் தங்கியுள்ள பொருணை விடுதியில் ஆங்கில இலக்கியத்தில் எம்.பில். படிக்கும் ஆசைத்தம்பி என்ற மாணவரும் தங்கியுள்ளார். கடந்த 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் நாள் அம்பேத்கரின் நினைவு நாளில் ஆசைத்தம்பி விடுதி கதவில் அம்பேத்கரின் படத்தை ஒட்டியுள்ளார். அப்போது அதே விடுதியில் முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்களான பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் இதைக் கடுமையாகக் கண்டித்துள்ளனர். ஆனாலும் ஆசைத்தம்பி அம்பேத்கரின் படத்தை எடுக்கவில்லை.

அதன் பிறகு சில மாதங்கள்கழித்து கடந்த 9.5.13 அன்று ஆசைத்தம்பி பொருணை விடுதியிலேயே பல மாணவர்கள் முன்னிலையிலேயே கடுமையாகத் தாக்கப்பட்டார். தாக்கப்பட்ட ஆசைத்தம்பி அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். தாக்கியவர்களில் ஒரு வன்னியர், ஒரு நாடார், ஒரு முத்தரையர் இவர்களோடு ஒரு பறையரும் இருந்துள்ளார். அவரும் சேர்ந்தே ஆசைத் தம்பியைத் தாக்கியுள்ளார். இந்தத் தாக்குதலுக்கு நடவடிக்கை எடுக்கக் கோரி ஆசைத்தம்பி காவல்நிலையத்துக்குச் சென்றார். ஆனால் பல்கலைக்கழக நிர்வாகத்தால் சமரசம் செய்யப்பட்டு, அப்போதைக்கு சிக்கல் தீர்க்கப்பட்டது. தாக்கிய மாணவர்கள் தற்காலிக இடைநீக்கம் செய்யப்பட்டு தற்போது மீண்டும் பல்கலைக்கழகத்திற்குள் அனுமதிக்கப்பட்டுவிட்டனர்.

இடைநீக்கம் செய்யப்பட்டதற்கு பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மீண்டும் தற்போது ஆசைத் தம்பியை நோக்கி பொய்யான குற்றச்சாட்டுக்களைக் கூறினர். துணைவேந்தருக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் ஆசைத்தம்பி தரப்பு நியாயங்கள் நன்கு புரியும். ஆசைத்தம்பி மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என தமிழ்நாடு மாணவர் கழகம் பல்கலைக்கழக நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டது. உண்மையை உணர்ந்த நிர்வாகம், கழகக் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

முக்கியமாக, பல்கலைக்கழகத்தின் அனைத்து விடுதிகளும் பல்கலைக்கழகத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றன. ஆனால் அடிக்கடி மோதல் எழுகின்ற பொருணை விடுதி மட்டும் மாணவர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. அனைத்து விடுதிகளையும் போல பொருணை விடுதியையும் பல்கலைக்கழகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எப்படி முடக்கலாம்? உறுப்பினர்களை காவலாளிகள் கூண்டோடு தூக்கி வெளியேற்றும் போது எத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றலாம் என்பதற்கு ஒத்திகை நடத்தலாம்.

குறிப்பாக நடிகர் விஜய்காந்த் தனது நடிப்பு அனுபவத்தைப் பயன்படுத்தி, தனது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, தொகுதி நலன்களுக்காக முதலமைச்சரை சந்தித்து, அவருடன் புகைப்படம் எடுக்காமல் தடுப்பதற்கான பாதுகாப்பு ஒத்திகைகளை நடத்தலாம்.

கிரிமினல் குற்றவாளி என்ற அடையாளத்திலிருந்து பாதுகாத்துக் கொண்டு, ஜெகத்குருவாக உலாவருவதற்கு பார்ப்பன ஏடுகளின் ஆதரவோடு காஞ்சிபுரம் ஜெயேந்திரன் ஏற்கனவே ஒத்திகைகளை வெற்றிகரமாக தொடங்கிவிட்டார். மற்றபடி, குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பில்தான் கொள்கை பாதுகாப்பு அடங்கியுள்ளது என்பதற்கு கடந்த பல ஆண்டுகளாகவே தொடர்ந்து ஒத்திகைகளை நடத்தி வருகிறது தி.மு.க.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியினர் பல அடிதடி ஒத்திகைகளோடு, ஒரே தலைவர் என்ற சர்வாதிகாரத் திணிப்பை எதிர்த்து, ஜனநாயக வெறியோடு பல தலைவர்கள், பல 'அவதாரங்'களை எடுத்து, கட்சியைக் கட்டுக்கோப்பாக நடத்துவது குறித்து ஒத்திகைகளை தனித்தனியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள மற்றவர்கள் ஒத்திகை நடத்திக் கொள்ளட்டும் என்று அம்மா பாசத்தோடு நடைபோடும் அ.தி.மு.க.வுக்கும் ஒத்திகைகள் தேவை என்ற கேள்விக்கே இடமில்லை. நாடகங்களை ஒத்திகைகளோடு நடத்தி நாட்டு மக்களை பார்வையாளர்களாகவே பாதுகாத்து வரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இதைக் கூறுகிறோமே தவிர, வேறு எந்த உள்நோக்கமும் எள்முனை அளவும் இல்லை என்று அறிக!

***பின் குறிப்பு:*** *கூடங்குளத்தில் முதன்முதலாக அணுமின் திட்டம் வந்தபோது, அதை எதிர்ப்பதில் அப்பகுதி மக்கள் ஆர்வம் காட்டவில்லை. கூடங்குளத்தில் விபத்து நேர்ந்தால், மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்று அணுமின் நிர்வாகம் நடத்திய பாதுகாப்பு ஒத்திகையை நேரில் பார்த்தப் பிறகு தான், அதுவரை அமைதியாக இருந்த மக்கள் "அய்யய்யோ ஆபத்து" என்று புயலாக சீறத் தொடங்கினார்கள் என்பதிலிருந்தே ஒத்திகையின் சக்தியை புரியாதவர்களும் புரிந்து கொள்ளலாம்!*

– **கோடங்குடி மாரிமுத்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 27th June 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.